564

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக

## வெளியீடு

தொகுதி - 15 எண்-3

பிப்-7, 1992

V211,31 N92
N92-15-3
1597

வெளியீடு 29-7-1992

Issued 29-7-1992

564

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை பிப்ரவரி 7, 1992 - தொகுதி 15 - எண் 3

Friday the 7th February, 1992 - Volume 15 - No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,

Madras-600 009

விலை ரூ. 3-00]

[Price Rs. 3-00

161509

D

V211.31 'N92

N92.15.3

## உள்ளடக்கம்.

7—2—1992.

பக்கங்கள்.

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 279–316

**2. உரிமைப் பிரச்சினை—**

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து மாலைமுரசு 5—2—1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்து. 317–318

**3. கவன ஈர்ப்பு—**

(அ) இராமநாதபுரம், மதுரை மற்றும் காமராஜர் மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்து .. .. .. 318–321

(ஆ) கல்வித் துறை பணியாளர்கள் சங்கம் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பது குறித்து .. .. 321–325

**4. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 326

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. 327

(இ) மனுக்கள் குழு .. .. .. 327

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு .. .. .. .. .. 327

**5. அறிவிப்பு—**

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆய்வு செய்தல்) .. 327

**6. சட்டமுன்வடிவு)கள் அறிமுகம் செய்தல்)—**

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1992 . .. .. 328

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த சட்டமுன்வடிவு, 1992 .. .. 328–329

பு 2ஓ 5—417—1

பக்கங்கள்

(இ) வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1992 .. .. .. .. 329–330

(ஈ) மாநில வீட்டுவசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன் வடிவு, 1992 .. .. .. .. 330–331

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி—

* திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் .. 331 333

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா .. 353–400

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 401–403

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1992 பிப்ரவரி 7, வெள்ளிக்கிழமை.

தை 24, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு–2023.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

இன்பம் கொடுக்கும் நற்செயல்களை மேற்கொள்ளும் போது அதனால் துன்பம் மிக அதிகமாக ஏற்பட்ட போதிலும் துணிவுடன் அவற்றைச் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 81. டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு நிதியமைச்சர்.

81—

### அரசு அலுவலகங்களில் கம்ப்யூட்டர்.

*2478 —டாக்டர் ஜி. ஆர். மாலா :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாநில அரசு அலுவலகங்களில் அரசின் திட்டங்களைச் செயலாக்குவதில் வீண் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க மாநில அரசு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் முறையினைக் கொண்டுவர அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரும்பாலான மாநில அரசுத் துறைகளில் கணிப்பொறிகள் (Comp ter) நிறுவப்பட்டு அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் திட்ட செயலாக்கம் குறித்த விவரங்கள் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பட்டு, திட்ட ஆய்விற்குத் தேவையான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமையான செயல்பாடுகளுடனும், தொலை நோக்கு எண்ணங்களுடனும் ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் அனைத்து அரசு அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர் அமைத்துத் தரும் திட்டம் கொண்டுவர அரசு முனையுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகள் பலவற்றிலும் பொது நிறுவனங்களிலும் கணிப்பொறிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் திட்டப்பணி முன்னேற்றக் கண்காணிப்புக்காகவும் மற்றும் நிர்வாகத்திற்குத் தேவையான விவரங்களைத் தொகுப்பதற்காகவும் திட்ட முதலீட்டில் பெரும் பகுதியைச் செலவிடும் கீழ்க்காணும் அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் ஏற்கெனவே கணிப்பொறிகளை கொண்டிருகின்றன, ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, வனத்துறை கால்நடை பராமரிப்புத துறை, தலைமைப் பொறியாளர் (பாசனம்) துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம், சென்னை பெருநகர், குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் பெரிய அளவிலான தொழில் நிறுவனங்கள், அரசுத் துறைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவை தேசிய தகவல் தொகுப்பு அளிப்பு மையம் அதாவது ''நேஷனல் இன்ஃபர்மேட்டிவ் சென்டர்'' என்ற மத்திய அரசின் நிறுவனத்தின் கணிப்பொறி வசதிகளையும் பயன்படுத்திக்கொண்டு வருகின்றன.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒவ்வொரு இரயில் சந்திப்பு நிலையத்திலும் டிக்கட் ரிசர்வேஷன் மற்றும் டிக்கட் அலாட்மென்ட் முதலியவற்றிற்கு கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது போல் வேலையில்லாத பட்டதாரிகளும், பள்ளிப் படிப்பை முடித்த இளம் பெண்களும், இளைஞர்களும் தினந்தோறும் முற்றுகையிடும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வீண் புகார்களைத் தவிர்க்கும் பொருட்டும், வேலைப் பளுவைக் குறைக்கும் பொருட்டும், தமிழகத்தின் அனைத்து மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர் முறையை அமல்படுத்த அரசு முனையுமா ? ஆமெனில் நடப்பாண்டில் அதைச் செயல்படுத்த அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்பதை நான அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். எந்தெந்த முக்கியமான துறைகளில் எல்லாம் கம்ப்யூட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று. அது மட்டுமல்லாமல் மத்திய அரசின் தேசிய தகவல் தொகுப்பு மையம் அதாவது நேஷனல் இன்ஃபர்மேட்டிக் சென்டர் என்பதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் தமிழக அரசின் செயலாக்கத்திற்காக என். டி. 550 என்ற சூப்பர் மினி கணிப்பொறியும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக சூப்பர் ஏ. டி. என்ற கணிப்பொறியும் நிறுவப்பட்டுள்ளது. அதை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். மத்திய அரசினுடைய செலவிலே அந்த மையத்தை வைத்திருக்கிறார்கள். அதில் 70 விழுக்காடு கணிப்பொறி நேரத்தை மாநில அரசின் துறைகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் 30 விழுக்காடு கணிப்பொறி நேரத்தை மத்திய அரசின் துறைகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் முறைகள் இருக்கின்றன. ஆக எந்தெந்தத் துறைகள் கணிப்பொறியின் மூலமாக விரைவாகப் பணிகளை ஆற்றி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருக்கின்றனவோ அந்தந்தத் துறைகள் இந்த மையத்தைப் பயன்படுத்தி கொள்ளலாம். அதைத் தவிர ஒவ்வொரு துறையைப் பொறுத்த வரையிலும், முக்கியமான திட்டங்களை நிறைவேற்றுகிற துறைகளுக்கெல்லாம் கணிப்பொறிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 82 திரு. க. அர்ச்சுனன் மாண்புமிகு நிதியமைச்சர்.

82—

சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவித்தல்.

*4020—திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு சேமிப்பு திட்டத்தில் சேமிப்போருக்கு பல்வேறு வரிச் சலுகைகள் அளித்து குறைந்த வட்டி விகிதத்தில் திருப்பி கொடுக்கப்படுவதை மாற்றி வரிச் சலுகைகளை தவிர்த்து அதிக வட்டி திரும்ப கொடுக்கிற முறையை பின்பற்றி, சிறு சேமிப்பு திட்டத்தை ஊக்குவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறு சேமிப்பு திட்டங்களை வடிவமைக்கவோ, திட்டங்களை இயற்றவோ அல்லது இயற்றிய திட்டங்களை மாற்றவோ, மைய அரசிற்குத்தான் அதிகாரம் உண்டு. மாநில அரசிற்கு இது சம்பந்தமாக எந்த அதிகாரமும் இல்லை.

முற்பகல் 9-35.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திடடத்தை ஊக்குவிக்கிற வகையில் அதிகப் படியான பரிசுகளையும், பரிசுத் தொகைகளையும் சிறு சேமிப்புத் திட்டத்திலே பணம் போடுகிறவர்களுக்கு வழங்குகிற வகையில் மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே பொது மக்களை பல்வேறு வகைகளிலே கவரத் தக்க வகையிலே, பல்வேறு பரிசுப் பொருள்கள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. அதைத் தவிர, ஊக்கத் தொகையும் முதலீடு செய்வோருக்கு, அதாவது ஆயிரம் ரூபாய்க்கு மேலே முதலீடு செய்வோருக்கு 1 சதவிகிதம் ஊக்கத் தொகை தரப்படுகிறது. அந்தத் தொகையைத் திரட்டித் தரும் முகவர்களுக்கு மாநில அரசு ஒரு சதவிகிதத்தையும், மத்திய அரசு ஒரு சதவிகிதத்தையும் தருகின்றன. இது தவிர 500 ரூபாய்க்கு ஒரு கூப்பன் என்றும், 2,000 ரூபாய்க்கு ஒரு கூப்பன் என்றும்இருமுறைகள்வைத்துபரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர முக்கியமான 3 திட்டங்களில்— தேசிய சேமிப்புத் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, 15 ஆண்டுகள் பொதுச் சேமிப்புக் கணக்கு ஆகிய 3 திட்டங்களில் முதலீடு செய்கிறவர்களுக்கு வருமான வரிச் சலுகைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. இந்திர விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் மற்றும் மாதாந்திர வருமான அஞ்சலக சேமிப்புத் திட்டம் போன்றவைகளில் சிம்பிள் இன்டரஸ்ட் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் கிடைக்கத் தக்க அளவுக்கு வாய்ப்புகள் செய்யப் பட்டிருக்கின்றன. 11 விதமான வகைகளிலே சேமிப்பு செய்யலாம். அவரவர்களுடைய நிலைமை, தன்மை, சேமிப்புத் தொகை, அவற்றை மீண்டும் எடுக்கும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து ஏதேனும் ஒரு திட்டத்தை அவர்கள் மேற்கொள்ளலாம்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெபாசிட் செய்கிறவர்களுக்குத் தரப்படும் 1 சத விகிதம் கமிஷன் ஏறத்தாழ தரப்படுவதில்லை. சிறு சேமிப்பை வசூலிப்பவர்கள் ஏறத்தாழ அரசாங்க அதிகாரிகளாக இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், டிபாசிட் செய்கிறவர்களுக்கு முழுமையாக அந்தத் தொகை போய்ச் சேருகிற வகையில், ஒருவர் ஆயிரம் ரூபாய் டெபாசிட் செய்கிறபோது, 1 சதவிகிதம் கமிஷனைக் கழித்துக் கொண்டு 990 ரூபாய் கட்டினால் போதுமென்று சொல்ல வேண்டும். அதிகாரிகள் டெபாசிட் செய்கிறவர்களிடம் ஆயிரம் ரூபாயை வசூலிக்கும் விஷயம் அரசுக்குத் தெரியுமா ? இதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர்கள் இது பற்றிய விவரங் களை எல்லாம் முதலீடு செய்கிறவர்களுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆக முதலீடு செய்கிறவர்கள் ஊக்கத் தொகை பெறுகிறார்கள். முகவர்கள்தான் பெரும்பாலும் இப்படிப்பட்ட பத்திரங்களை எல்லாம் வாங்கிக் கொடுக்கிறார்கள். தமிழகத் தைப் பொறுத்தவரையில் 17,000, 18,000 முகவர்கள் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக இருக்கிறார்கள். ஆக அந்த ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு சட்ட திட்டங்களிலே, விதி முறை களிலே இடமிருக்கிறது. பெரும்பாலோர் பெற்று வருகிறார்கள். எங்கேயாவது பெறாமல் இருந்தால் உரிய சீட்டுகள், மற்றவை களை உரிய அதிகாரிகளிடம் கொடுத்தால் அவர்களும் பெறுவதற்கு வழி இருக்கிறது. இதில் யாரையும் யாரும் ஏமாற்ற இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, சிறுசேமிப்பை ஊக்குவிக்க அவர்களுடைய ஊதியத்தி லிருந்து ஒரு சிறிய தொகையை பிடித்தம் செய்ய அரசு ஒரு திட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் கட்டாயப்படுத்தி, போட்டே தீர வேண்டுமென்று சொல்ல முடியாது. இதில் இருக் கும் சலுகைகள், வசதிகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றை எல்லாம் எடுத்துக் கூறுவதன் மூலமாக, அவரவர்கள் தன்னிச்சையாக ஏதேனும் ஒரு வகையில் சிறு சேமிப்பு செய்ய வேண்டுமென்ற வகையில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய எண்ணங்களை கவரும் வகையில் கவர்ச்சிகரமான பரிசுகளும் வழங்கப்பட்டு வரு கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 83. டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) இந்தக் கேள்வியை நீங்கள் போடுகிறீர்களா ?

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கேள்வி. எனவே நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 46 (3)-ன்படி ஒரு உறுப்பினர் இருக்கையில் இல்லை என்றாலும், இன்னொரு உறுப்பினர் அந்தக் கேள்வியை எழுப்ப அனுமதி கேட்டால், அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தக் கேள்விக்கு அனுமதி வழங்கலாம். திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

83—

## இளம் வழக்கறிஞர்களுக்கு அரசுத் துறை வேலை.

*3540 டாக்டர் தே. குமாரதாஸ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் உள்ள இளம் வழக்கறிஞர்களை அரசு பல்வேறு துறைகளில் வேலையில் அமர்த்தும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டம் அரசிடம் உள்ளது?

முற்பகல் 9-40.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இளம் வழக்கறிஞர்களை அரசு பல்வேறு துறைகளில் வேலைகளில் அமர்த்தும் திட்டம் இருக்கிறது. ஐந்து வகைகளில் இது தற்போது போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அரசினாலே நிறைவேற்றப்படுகின்றது. அந்த ஐந்து வகைகள் வருமாறு :

(1) தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு இளம் வழக்கறிஞர்களை மாவட்ட முன்சீப்— கம்— சப்மாஜிஸ்டிரேட் நடுவர்களாகவும், சார்பு நிலை நீதிபதிகளாகவும் (சப் கோர்ட்டுகளில்) மற்றும் மாவட்ட நீதிபதிகளாகவும் (District Judges) பணியமர்த்துகிறது.

(2) அரசு, உள்துறையின் Home Courts Department மூலமாக இளம் வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுத்து அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர்களாக நியமிக்கிறது. (ஏ.பி.பி. காவல் துறையிலும் சட்ட ஆலோசகர் மற்றும் குற்றவியல் வழக்கறிஞர் ஆகிய பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள்.





(3) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கலெக்டரிடமிருந்து பேனல் பெற்று, அந்த வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

(4) மாநகராட்சிகள் தனது சட்ட ஆலோசகர்களை, இளம் வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுத்து (உள்ளாட்சித் துறையில்) பணிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்.

(5) மாநிலத்தில் உள்ள பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் பல்வேறு வழக்குமன்றங்களில் வழக்காடுவதற்காக, இளம் வழக்கறிஞர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்.

ஆக இந்த ஐந்து வகைகளில் அரசு இளம் வழக்கறிஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது எல்லாம் ஏற்கெனவே அமலில் இருக்கின்ற திட்டங்கள். ஏற்கெனவே ஏ. பி.பி. முன்சீப்கள் போன்றவர்கள் எல்லாம் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவும், கான்ட்ராக்ட் அடிப்படையிலும் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். ஆந்திராவில் இருப்பதைப்போல, இளம் வழக்கறிஞர்களுக்கு வேலை அளிக்கும் முகத்தான், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பிராசிகியூஷன் இன்ஸ்பெக்டர்களை இந்த அரசு நியமிக்குமா ? அப்படி சட்டம் படித்தவர்களை நியமித்தால், வழக்குகளை சரியான முறையில் பதிவு செய்யும் குற்றப் பத்திரிகைகளை சரியான செக்ஷன்களில் போடமுடியும். வழக்குகளையும் சரியான முறையில் நடத்த உதவியாக இருக்கும். ஆகவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இளம் வழக்கறிஞர்களை பிராசிகியூஷன் இன்ஸ்பெக்டர்களாக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் நியமிக்க, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அப்படி ஒரு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில், தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி இந்த 5 வகையான பணிகளுக்கு இளம் வழக்கறிஞர்களை நியமித்து வருவது தெரிகிறது. இளம் வழக்கறிஞர்களைத் தவிர வேறு யாரையும் நியமிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்று நான் அறிய விரும்புவதோடு, இளம் வழக்கறிஞ

களை காவல் துறையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சார்பு ஆய்வாளர் பதவிக்கும் மற்றும் வட்டாட்சியர் போன்ற பதவி களுக்கும், சட்டப் படிப்பு படித்திருப்பது அவசியம் என்ற தகுதியை உண்டு பண்ண அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 வாயில்களாக இளம் வழக்கறிஞர்களை மட்டுமல்ல, சீனியர் அட்வகேட்டுகளையும், போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்கள் அட்வகேட் ஜெனரல் ஆக நியமிக்கிறார்கள். அதைப்போலவே, கவர்ன்மெண்ட் பிளீடரை நியமிக்கிறார்கள். அதுபோல ஸ்டேட் பப்ளிக் பிராசிகியூட்டரை உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலோடும் மாண்புமிகு போற்றுதலுக்குரிய முதலமைச்சர் அவர்கள் சீனியர் அட்வகேட்டுகளிலிருந்து நியமிக்கின்ற அதிகாரத்தையும் பெற்றிருகிறார்கள். ஒரு நல்ல செய்தியைச்சொல்லவிரும்புகிறேன். நாளைய தினம் போற்றுதலுக்குரிய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்கள், உயர்நீதிமன்றத்தின் ஒரு கட்டிடத்தினைத் திறக்க இருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்திற்காக 1986-ஆம் ஆண்டு, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ரூ. 5—6 கோடி நிதி கொடுக்கப்பட்டது. அதை இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைக்க இருக்கிறார்கள். அதன் மூலமாகவும் பல வழக்கறிஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்த வழக்கறிஞர்கள் இளம் வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கிற ஊதியத்தை குறைந்தபட்ச ஊதியமாக ஆயிரம் ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்று Legal Practitioners Rule மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி



திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். இளம் வழக்கறிஞர் என்று வந்திருக்கிறது. இளம் வழக்கறிஞர் என்பதற்கு எத்தனை வயதிலிருந்து இளம் வழக்கறிஞர், அதற்கு மேல் உள்ளவர்கள் மூத்த வழக்கறிஞர்கள் என்று ஏதாவது வரண்முறை வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளம் வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள் என்றால், ஜூனியர் அட்வகேட்ஸ், சீனியர் அட்வகேட்ஸ் என்று சொல்லப்படுபவர்கள் எத்தனை ஆண்டுக் காலம் பயிற்சி பெறுகிறார்கள், தொழில் நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து இளம் வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள் என்று பிரிக்கிறார்கள். வயதைப் பொறுத்து அல்ல. அவர்கள் செய்கின்ற தொழிலைப் பொறுத்து on the basis of their service அவர்கள் எந்த அளவிற்கு, எத்தனை ஆண்டுகளுக்குப் பயிற்சி பெறுகிறார்கள் என்பதைப் பொறுத்து, சீனியர் அட்வகேட், ஜூனியர் அட்வகேட் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் அடிப்படையில் மூத்த வழக்கறிஞர்கள், இளம் வழக்கறிஞர்கள் என்று பிரிக்கப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். சர்வீஸ் என்றால், என்ரோல்மெண்ட் ஆன தேதியிலிருந்து சர்வீஸ் கணக்கு எடுக்கப்படுகிறதா அல்லது எத்தனை வழக்குகளைக் கையாண்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து கணக்கிடுகிறார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞராக இருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பே நான் ஓய்வு பெற்றேன். இப்போது வழக்கறிஞராக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் தனியாக விவரத்தைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு போட்ட கவர்ன்மெண்ட் பிளீடர்களை இன்று வரை மாற்றாமல் இருப்பது அரசுக்கு

தெரியுமா ? சிட்டியில்' இருக்கின்ற பிளீடர்கள், முந்தைய அரசால் போடப்பட்டவர்கள். அந்த லா ஆபீசர்ஸ் ஆகியவர்களை மாற்றி புதியவர்களைப் போடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் புதிதாக அரசு நியமிக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கோர்ட்டைப் பொறுத்த வரையில் 47 இடங்கள் இருக்கின்றன. அந்த 47 இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. சபார்டினேட்ஸ் கோர்ட்ஸ் , டிஸ்ட்ரிக்ட் கோர்ட்ஸ், சார்பு-கோர்ட்ஸ் ஆகியவற்றில் 172 இடங்கள் இருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையான இடங்கள் நிரப்பப் பெற்று அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதிலே உள்ள சிக்கலை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு வழக்கறிஞர், உணர்வார்கள். உண்மையிலேயே சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அரசாங்கம் துரிதமாகப் போடக்கூடாது, மாவட்ட ஆட்சியாளரிடத்திலே இருந்து 'பேனல்' பெற்று, அங்கேயிருக்கின்ற முன்சீப், டிஸ்ட்ரிக் ஜட்ஜ் ஆகியவர்களின் ஒப்புதலைப் பெற்று, அங்கேயுள்ள போலீஸ் அதிகாரியின் பரிந்துரையைப் பெற்று, அதை ஹோம் செக்கரட்டரிக்கு அனுப்பி, பிறகு லா டிப்பார்ட்மென்டுக்கு அனுப்பி, பிறகு லா மினிஸ்டருக்கு அனுப்பி, பிறகு சி.எம். இடத்திலே உத்திரவு பெற வேண்டும் என்ற இப்படிப்பட்ட நடைமுறையை வகுத்த காரணத்தால்தான், சற்று வேகம் குறைந்திருக்கிறதே தவிர,அரசினுடைய சுணக்கத்தால் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. சஞ்சய் ராமசாமி.

<u>திரு. சஞ்சய் ராமசாமி</u> ; Hon'ble Speaker Sir, there is a procedure followed by the Courts and the Hon'ble Judges as to how the Senior or Junior Advocates should be posted. I do not think it is right for us to decide. It is entirely the prerogative of the Hon'ble Chief Justice and the Hon'ble Judges to decide who should be appointed as Senior Advocates and who should be appointed as Junior Advocates.

<u>Hon'ble Thiru K. A. Krishnasamy</u> : Mr. Speaker Sir, it is an irrelevant question. Let the Hon'ble Member put an ndependent, separate question.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண். 84. திரு. து. மூர்த்தி. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



84—

<u>விவசாயிகளுக்குக் கூலி உயர்வு.</u>

*3941 <u>திரு. து. மூர்த்தி</u> :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கூலியை உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு கூலி வழங்கப்படும் ?

(இ) கூலி நிர்ணயச் சட்டத்தை கடுமையாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 வட்டங்களில், அதாவது தற்போதைய நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்—தமிழ்நாடு வேளாண் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம் அமுலில் உள்ளது. அதைப்போல தஞ்சை மாவட்ட இதர பகுதிகளில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமுலில் உள்ளது.

முற்பகல் 9-50.

<u>திரு. து. மூர்த்தி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலும் ஏழை விவசாயக் கூலிகள் அதிகமாக விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு இதுவரையிலும் ஆண்களுக்கு எவ்வளவு கூலி, பெண்களுக்கு எவ்வளவு கூலி என்ற நிர்ணயத்தை இந்த அரசு நிர்ணயம் செய்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, அவர்களுக்கு வழங்கப்படுகிற கூலி, தற்சமயம் ஏதேனும் அதிகமாக வழங்கப்படுவதற்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கால அளவு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் என்றும், பெண்கள் என்றும் வேறுபாடு இருக்கக்கூடாது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற சமுதாயத்தின் நிலை. அந்த சமுதாயத்தின் நிலைக்கு ஏற்றவாறு எந்தெந்த வேலையைச் செய்கிறார்களோ, அந்த வேலைக்கு ஏற்றவாறு இன்றைக்கு கூலி வகுக்கப்படுகிறது.

அதேபோலத்தான் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் சரி அல்லது காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் சரி அல்லது இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் விவசாயக் கூலிகளுக்கும் நில உரிமையாளர்களுக்கும் இப்போது எந்தவிதமான கூலி உயர்வு அல்லது கூலி கிடைக்கவில்லை என்ற சச்சரவுகள் இல்லை; சுமுகமாக அவர்கள் கூலியைக் கொடுக்கிறார்கள்; அவர்கள் வாங்கிக்கொள்கிறார்கள். எங்கேயாவது தகராறு ஏற்பட்டால் அப்போதுதான் வருவாய்த்துறை அதிகாரிகளோ மற்றவர்களோ அதில் தலையிடுவார்கள்; அரசு தலையிட்டு நல்ல முறையில் முடித்து வைக்கும்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொழிலாளர்களுக்குக் கால அளவு நிர்ணயிக்கப் படுகிறது. ஆனால் ஏழை விவசாயிகளுக்கு மட்டும் கால அளவு நிர்ணயிக்கப்படாமல், காலையில் 6 மணிக்குச் செல்கிறவர்கள் மாலையில் 6 மணி வரையிலும் தங்களுடைய வேலையைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வழங்கப்படுகிற கூலி கம்மி. மேலும் அவர்களுடைய கால அளவு தெரியாமல் இருக்கிறது. அந்தக் கால அளவைப் பற்றி தற்சமயம் அரசு திட்டத்திலே ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் என்கிற போது, உலகம் பூராவும் தொழிலாளர்களுக்கு—இன்றைக்கு அல்ல, எப்போது முதல் முதல் சிகாகோ நகரில் போராட்டம் ஏற்பட்டு, கால நிர்ணயம் நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்ன போது, அதேமாதிரி உலகம் பூராவும் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 8 மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவட்டம் ஆகியவற்றில் விவசாயத் தொழிலாளர் களுக்குக் கூலி ஆண்கள் பெண்கள் என்று வித்தியாசம் இல்லா மல் வழங்கப்படுவதாக, ஒப்பந்தம் செய்யப்படுவதாக மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தஞ்சை மாவட் டத்தைப் பொறுத்தவரையிலும் காயிதே மில்லத் மாவட் டத்தைப் பொறுத்தவரையிலும் அந்தக் கூலி என்பது இடத் துக்கு இடம், தாலூகாவுக்கு தாலூகா வித்தியாசப்படுகிறது. இந்தக் கூலி என்பது 18 வருடங்களுக்கு முன்பு கணபதியா பிள்ளை கமிஷன் என்ற பேரில் விவசாயத் தொழிலாளர் களுடைய வாழ்க்கை நிலையை அறிந்து....





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங் கள்.

திரு. ஜி. பழனிசாமி : கேள்விதான். அன்றைய தினத் திலே அவர்களுக்குக் கூலி அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத் தில் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கூலியில் ஏற்படக்கூடிய தகராறை வைத்துக்கொண்டு, ஒப் பந்தக் கூலியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகை யால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு 'கூலி கமிஷன்' ஒ டிகி ஏற்படுத்தி, அது விவசாயத் தொழிலாளர்களுடைய ே ற களை அறிந்து, உடனடியாக விவசாயிகளுக்கும், வின் தொழிலாளர்களுக்கும் முரண்பாடு இல்லாமல் விரைவி பதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி—ஒரு வாக்கியத்தில் விளக்கம், இன்னொரு வாக்கியத் தில் கேள்வி, அப்படி இருந்தால்தான் நாம் 20 கேள்விகளுக்கு போக முடியும். அதேபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் கூறுகிறபோது கனகச்சிதமாக எந்தப் பகுதிக்குப் பதில் சொல்ல வேண்டுமோ அந்தப் பகுதிக்கு மட்டும் பதில் சொல்லி விரைவில் முடித்தால்தான் 20 கேள்விகளுக்கும் நாம் பதில் பெற்று, அவையை நல்ல முறையில் நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

முற்பகல் 9-55.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, கணபதியாபிள்ளை கமிஷன் அமைத்தாலும் அதற்குப் பிறகு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையோ, 3 ஆண்டு களுக்கு ஒரு முறையோ கூலி உயர்வு செய்யப்பட்டு இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். இதய தெய்வம் புரட்சித் தலைவர் காலத்தில் கூட அப்படிப் பட்ட கூலி உயர்வுகள், இந்த அவையின் முன்னாலே முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் சார்பில் அப் போது அறிவிக்கப்பட்டது என்பது தெரியும். அதேபோலதான் இன்றைக்கும் இப்படி குறிப்பிட்ட இடங் களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசம் இல்லை யென்று நான் சொல்கிறபோது, இருக்கிறது என்று மாண்பு மிகு உறுப்பினர் சொன்னாலும், நான் வேலையைப் பற்றி சொன்னேன். உழுவது என்றால் அதை ஆண்கள் தான் செய்ய முடியும். நடுவது என்றால் அதை பெண்கள்தான் செய்ய முடியும்.

ஆகவே, நாங்கள் நிர்ணக்கிறபோது உழுவதற்கு இவ்வளவு நடுவதற்கு இவ்வளவு, நாற்று நடுவதற்கு இவ்வளவு, வரப்பு வெட்டுவதற்கு இவ்வளவு, மரம் ஏறுவதற்கு இவ்வளவு, தூர்ப்பதற்கு இவ்வளவு, களம் அடிப்பதற்கு இவ்வளவு, மூட்டை தூக்குவதற்கு இவ்வளவு என்று சொல்லி விடுகிறோம். மூட்டை தூக்குகிற வேலையை பெண்களும் செய்கிறார்கள், ஆண்களும் செய்கிறார்கள். நடுவது கூட ஆண்களும் செய்கிறார்கள, பெண்களும் செய்கிறார்கள். சில இடங்களில் பெண்கள் தான் நடுவார்கள். அதைப்போல பயிர் எடுப்பது ஆண்களும் செய்கிறார்கள் பெண்களும் செய்கிறார்கள். அந்தந்த வேலைக்கு என்று கூலியை அரசு நிர்ணயித்து விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 85. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கலவி அமைச்சர்.

85—

ஒப்பந்த அடிப்படை கல்லூரி ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல்

*889 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லூரி ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் முறையை நீக்கி அவர்களை நிரந்தரப் பணியாளராக பணியமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஆசிரியர் ஆசிரியைகள் 325 பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் அனைவரும் 1986 ஆம் ஆண்டில் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிவு செய்ததன் மூலமாக அரசால் நியமிக்கப்பட்ட கமிட்டியின் மூலமாக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு வேலை பார்க்கின்றவர்கள். வெகேஷனில் இவர்கள் ஊஸ்ட் செய்யப்பட்டு வீட்டுக்குப் போய் விடுவார்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள். இவர்களில் பெரும் பகுதியினர் பெண்கள்தான். இந்தப் பெண்களைப் பொறுத்த வரையில் மகப்பேறு விடுப்பு எடுக்கிறபோது இவர்களுக்கு ஒரு முறை லீவு வழங்கப்படுகிறது. இரண்டாவது முறை அதே வருடத்தில் லீவு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் வேலை போய்விடுகிறது. ஆகவே, பெண்களுக்கு சலுகை அளிக்கிற



இந்த புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இந்தப் பெண்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியராகப் பணியாற்றுகிற பெண்கள் கண்ணிர் சிந்துகிற அளவுக்கு எந்தக் கொடுமையும் இப்போது நடைபெறவில்லை. அவர்கள் பல்கலைக்கழகம் மானியக் கு அறிவித்திருக்கிற திட்டத்தின்படி முழு ஊதியமும் பெற்று கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்பு இந்த முறை உருவாக்கப்பட்டிருக்கிறது. 1986-87-ல் இப்படி தேர்வு பெற்று பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அது எதனால் இப்படி செய்யப்பட்டது என்பது தெரியவில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம்தான் அவர்கள் பதவிக்கு வந்திருக்க வேண்டும். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் வந்திருந்தால் அதற்கான அடிப்படை தகுதிகள் அனைத்தும் இவர்களுக்கு இருந்தால்தான் இந்த வேலைக்கு இவர்கள் வந்திருக்க முடியும். ஆகவே, எப்படியோ ஒரு நான்கைந்து ஆண்டுகள் தொடர்ந்து அவர்கள் பணியில் இருந்துதான் வருகிறார்கள். சட்டத்தை யொட்டி இடையில் அவர்களை வேலையை விட்டு நீக்குவதும், அதற்கு பிறகு புதுய ஒப்பந்தம் செய்து கொள்வதும் வழக்கத்தில் இருந்து வருகிறது. இப்போது 1990 ஆம் ஆண்டிலிருந்து பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பொறுப்பிலிருந்த அந்தத் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் என்று அமைத்து அதன் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு பல்கலைக் கழக மானியக் குழு இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு சில தகுதிகளை நிர்ணயித்து இருக்கிறது. மேல் பட்டப் படிப்பில், முதுகலைப் பட்டப் படிப்பில் 55 சதவீதம் அவர்கள் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். அதுபோக, ஸ்கீரினிங் டெஸ்ட் தேர்வு எழுதியாக வேண்டும். ஆகவே, இவைகளுக்கெல்லாம் இவர்கள் தகுதியானவர்களா என்பது இன்றைக்கு பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அரசு இதிலே மிகுந்த அக்கறை செலுத்தி கவனத்தோடு பரிசீலித்து தான் இதிலே முடிவெடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல பெண்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை. அவர்கள் கண்ணீர் வடிக்கவும் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நம்முடைய தமிழக முதல்வர் ஆட்சியில் யாரும் கண்ணீர் சிந்தமாட்டார்கள். என்னுடைய வேண்டுகோள் இந்த நேரத்தில் இரண்டு பெண்கள் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் திலகவதி, தாவரவியல் ஆசிரியை, குடியாத்தம் கலைக்கல்லூரி இவருக்கு குறை பிரசவம். ஏழு மாதத்தில் ஆப்பரேஷன் செய்து குழந்தை பிறந்த காரணத்தால்

விடுப்பு முடிந்து பணியில் சேர்ந்தார்கள். சேர்ந்த பிறகு குழந்தைக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் மீண்டும் லீவு எடுத்தார்கள் அப்படி லீவு எடுத்தவுடன் அவருக்கு வேலை போய்விட்டது. மற்றவர் பூங்கோதை, அரசு மகளிர் கல்லூரி திண்டுக்கல். இவருக்கு ஆப்பரேஷனில் குழந்தை பிறந்தது. ஆனால் ஆப்பரேஷன் சரியானபடி செய்யாத காரணத்தால் இவர் மீண்டும் லீவு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவருக்கும் வேலை போய் விட்டது. இரண்டு பெண்களும் இன்று கண்ணீரைச் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். 325 ஆசிரியர்கள்தான். அவர்களுக்கு வயதும் அதிகமாகிவிட்டது. ஆகி கொண்டிருக்கிறது. வேறு வேலைக்கும் அவர்கள் போக முடியாது. இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலையில், அங்கும் போக முடியாமல், இங்கும் நிரந்தரமாக, இக்கட்டான சூழ்நிலையில், கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிற அந்தத் தாய்மார்களையும், மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டும். இது போல, அரசு பாலிடெக்னிக்குகளிலே ஒப்பந்த அடிப்படையில் டணி செய்கின்ற ஆசிரியர்களும், பெண்களும் இருக்கிறார்கள். ஆகவே, நான், இந்தப்பெண்களுடைய கண்ணீரை துடைக்க, புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆசிரியர்கள் சுமார் 327 என்று குறிப்பிலே தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் 322 என்கிறார். அதிலே பிரச்சினை இல்லை. (குறுக்கீடு). 325 என்கிறீர்கள். ஆகவே, இந்த இரண்டு பேர்தான் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது. நீங்கள் இந்த இருவருக்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கிறீர்கள் என்றால், தயவு செய்து அந்த இருவருடைய நிலைமையை விளக்கி, அரசுக்கு அவர்கள் விண்ணப்பம் செய்தால் அதைப் பற்றி அரசு பரிவோடு பரிசீலிக்கும். காரணம் இந்த முறையே எந்தக் காரணத்தினாலோ விதிகளை எல்லாம் மீறித்தான் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கிறது. இப்போது, புரட்சித் தலைவியினுடைய அரசு, இதை விதிமுறைகளுக்கு உட்படுத்த முயன்று கொண்டு இருக்கிறது. அப்படி முயன்று கொண்டிருக்கிற நேரத்தில், யாருக்கும் பாதகம் இல்லாமல் பார்த்துக் கொள்ளும். அதிலும் குறிப்பாக, பெண்களுக்கு நிச்சயமாக பாதகம் வராமல் பார்த்துக் கொள்ளும். நீங்கள் இவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறபோது, அந்த இருவரைப் பற்றி சரியான விவரங்களை அரசுக்கு தந்தால், அரசு அதைப்பற்றி பரிவோடு பரிசீலிக்கும். மற்றவர்கள் தங்கள் சம்பளங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் இப்போது ஒரு கஷ்டமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ட்ரிக்ஸ் டிசோசா



Dr. (Tmt.) BEATRIX D'SOUZA : Hon. Speaker, Sir, the Hon. Chief Minister, in one of her Election speeches, once described this type of employment as bonded labour, a contract between the lion and the lamb. There are about 400 such College teachers, i.e. about 10 per cent of the total number of teachers of the Government Colleges, and many of them have Research Degrees. At present, there is a very poor utilisation of human resources because I know for certain that there are so many College Departments which are under-taffed, one example being the College at Vaniyambadi. Therefore, my question is this. When there are so many vacanvies, why can't these College teachers be inducted on a permanent basis?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே அடிமை முறையோ அல்லது ஆண்டான் முறையோ இல்லை. சில காரணங்களினாலே, ஆசிரியர்கள் ஒப்பந்த முறையிலே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதற்குப் பிறகு, அவர்களுக்கு பதவி உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்கள் குறிப்பிடுகிற வாணியம்பாடி கல்லூரி ஒரு தனியார் கல்லூரி. அதிலும் சிறுபான்மை இனத்தவர் நடத்துகிற கல்லூரி. அங்கே என்ன நடைபெறுகிறது என்றே அரசாங்கத்திற்குத் தெரியாது. ஆகவே, அவர்கள் குறிப்பாகத் தகவல் தந்தால் கூட, அரசாங்கம் அங்கே கேட்டாலும், அவர்கள் பதில் அளிக்க மாட்டார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அப்படி ஏதாவது தவறுகள் இருக்குமேயானால், அதைச் சுட்டிக்காட்டினால், அதை உடனே தீர்த்து வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 86. செல்வி கோ.மல்லிகா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

86—

கிள்ளையில் மருத்துவமனை.

*343 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதி கிள்ளையில் 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 பிப்ரவரி 7

செல்வி கோ.மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளைப் பகுதி மீனவர்கள் நிறைந்த பகுதியாக இருப்பதால், இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, இன்னலுற்ற மீனவ மக்களுக்கு உடனடி மருத்துவ வசதி கிடைக்கும் பொருட்டு, அந்த இடத்தில் மருத்துவமனையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளையிலிருந்து சுற்றிச் சுற்றி மருத்துவ மனைகள் பல இருக்கின்றன. உதாரணமாக, கிள்ளையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் பரங்கிப்பேட்டை என்ற இடத்திலே ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. 4 கிலோ மீட்டர் தொலைவிலே புவனகிரி மற்றும் புதுச்சத்திரம் என்ற இரண்டு இடங்களிலேயும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அதே போல், 6 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள சிதம்பரம் நகரத்திலே ஒரு வட்ட தலைமை மருத்துவமனை இருக்கிறது. எனவேதான் அங்கு தேவையில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, அதைச் சுற்றி நிறைய மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தால், தனியாக அங்கே மருத்துவமனையைத் துவங்குகிற நோக்கம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம். மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர்.

கானாடுகாத்தான் பகுதியில் விமான நிலையம்.

87—

*1449 திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், கானாடு காத்தான் பகுதியில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் கானாடுகாத்தான் கிராமத்தில் சிறிய விமான நிலையம் ஏற்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யத் தற்போது அவசியமென்று கருதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 88. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 7]

88—

சிவகாசியில் நகரப்பேருந்து அதிகரித்தல்.

*3889 திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தொழிலாளர்கள் அதிகமாக வாழும் சிவகாசி தொகுதியில் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூடுதல் நகரப் பேருந்துகள் விடும்படிக் கோரி வரும் விண்ணப் பங்களைப் பரிசீலித்து, தேவைக்கேற்ப கூடுதல் நகரப் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–05.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே அறிக்கை விடப்பட்ட நகரங்களில் ஒன்று சிவகாசி நகரமாகும். தொழில் மிகுந்த நகரமாக அறிக்கை விடப்பட்ட நகரமாகும். அப்படிப்பட்ட சிவகாசி தொகுதியிலே, 4,000-க்கும் அதிகமான தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், 2,000-க்கும் அதிகமான பட்டாசுத் தொழிற்சாலைகளும் உள்ளன. அவற்றிலே எல்லாம் வேலை செய்கின்ற அந்தத் தொகுதியில் வாழும் மக்கள் எல்லாம் நீண்ட தூரம் சென்று வேலை செய்ய வேண்டி உள்ளது. குறிப்பாக பெண்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டிய நிலைமை உள்ள தால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பெண்களுக்கு என தனியாக பேருந்து விட அனுமதியளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதியே தீப் பெட்டித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற பகுதி யாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண் களுக்காக தனிப் பேருந்து இயக்கப்படுமா என்று கேட்டிருக் கிறார். தமிழகத்தை இன்று ஆண்டு கொண்டிருக்கிற ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவினுடைய ஆட்சியில் அவர் கேட்கின்ற இடங்களுக்கு 2 பேருந்துகள் பெண் களுக்காக இயக்கப்படும் என்பதை நான் பணிவன்போடு தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு பேர்வைத் தலைவர் : வினா எண். 89. திரு. வே. பெரியசாமி., மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

89—

அந்தியூரில் கூட்டுறவு நூற்பாலை.

*836 திரு. வே. பெரியசாமி :
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பருத்தி அதிகம் விளைகின்ற அந்தியூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் நூற்பாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நூற்பாலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில், அந்தியூர் தொகுதி பருத்தி அதிகமாக விளையக்கூடிய ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியில் அந்தியூர், பூதப்பாடி என்ற இடங்களிலே இலட்சக்கணக்கான பருத்தி மூட்டைகளை வெளிப் பகுதிகளுக்கு வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே எந்தவிதமான தொழிற் சாலையும் கிடையாது. தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் அதிக மாக வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் நம்முடைய ஒப்பற்றத் தலைவி அவர்களிடத்திலே சொல்லி, இந்த ஆண்டு இல்லையென்று சொன்னாலும், வருகின்ற ஆண்டிலாவது அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முயற்சி செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் பகுதிக்கு அருகாமையில் தாராபுரம் என்ற இடத்திலே 25,000 தறிகள் கொண்ட நூற்பாலை இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 899



1992 பிப்ரவரி 7]

பர்மனெட் தொழிலாளர்களும், 74 தற்காலிகத் தொழிலாளர் களும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 5 சதவீத பருத்திதான் உற்பத்தியாகிறது. 5 சதவீதத்திலேதான் ஒரு பகுதி அந்தியூரில் உற்பத்தியாகிறது. ஆதலால், இந்த கேள் விக்கே இடமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு நிறைந்தவராய், நாண் நிறைந்தவராய், ஒப் புரவு நிறைந்தவராய், கண்ணோட்டம் நிறைந்தவராய், வாய்மை நிறைந்தவராய், கல்வி, கேள்விகளில் சிறந்தவராய், அறிவால் உயர்ந்தவராய், ஆக்கத்தால் மேம்பாடு அடைந்தவராய், தனக் கென்று வாழாமல் தமிழ்ச் சமுதாயத்திற்காக, தாழ்த்தப்பட்ட என்னைப்போன்ற மக்களுக்காக இரவென்றும் பகலென்றும் பாரா மல், கண் துஞ்சாது உழைக்கின்ற ஒப்பற்ற தலைவியினுடைய ஆட்சியில் அவர்கள் இல்லை என்று சொல்லாமல், இந்த ஆண்டு —வேண்டாம், வேண்டாம்—அடுத்த ஆண்டிலாவது ஆரம்பிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவி நடையோடு எடுத்துரைத்தார். அடுத்த ஆண்டுதான் நம்முடைய ஒப்பற்ற தலைவி நம்மைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு விலாசத்தைத் தந்து தங்கள் சட்டமன்றத் தொகுதியில் தான் அன்னையின் பெயரால் நூற்பாலை துவக்க இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு தற்போது இடமில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கி றேன். காரணம், பஞ்சு விலை ஏறத்தாழ இரட்டிப்பு மடங்கு உயர்ந்திருக்கிறது. நாம் நூற்பாலை நடத்துவதே மிகக் கடின மாக இருக்கிறது. ஆதலால், மறுபடியும் பரிசீலிப்பதற்கு இட மில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 90. திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

90—

அசுவமாநதி கோம்பை அணைத்திட்டம்.

*263 திருமதி இரா. பாண்டியம்மாள்
மாண்புமிகுபொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகிலுள்ள அசுவமாநதி கோம்பை அணைத்திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

[1992 பிப்ரவரி 7

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் தற்போது ஆய்வில்இல்லை.

முற்பகல் 10–10

<u>திருமதி இரா. பாண்டியம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி பின்தங்கிய, வறட்சி, மிக்க தொகுதி. தொழில் வளம் குறைந்த தொகுதி. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதிகம் வாழ்கின்றார்கள். 40 ஆண்டுகளுக்குப் பின் புரட்சித் தலைவி அவர்கள் மீது கொண்ட அன்பினாலும், பாசத்தினாலும் என்னை அ.தி.மு.க.வின் சார்பாக தேர்ந்தெடுத்துள்ளார்கள். அசுவமாநதித் திட்டம் என்பது மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து மழைக்காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து இந்த நதியினால் பெரும் ஆபத்துக்குரிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இந்த நதித் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தந்தால் 3,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் அடையக்கூடிய ஒரு சூழ்நிலையில் உள்ளதால் இந்தத் திட்டத்தை என்னுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி தரும்படி அவர்களுடைய பாதங்களைத் தொட்டு, பேரவைத் தலைவரின் சார்பாக பணிவுடன் கேட்டுக் கொண்டு இந்தத் திட்டம் அடுத்த ஆண்டிலாவது அல்லது இந்த ஆண்டிலேயாவது பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைத் தலைவர் மூலமாக என்று சொல்ல வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் அசுவமாநதியில் கோம்பையில் அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்காக நீர் அளவுகளின் ஆய்வுகள் எடுக்கப்பட்டு வருகிறது. நீர் அளவு விவரங்களை 1991-92ஆம் ஆண்டு சேகரித்து அதன் பின்னர் இத்திட்டம் 1992-93ஆம் ஆண்டில் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. அந்த ஆய்வுகள் முடிந்ததற்குப் பின்னாலே அரசின் கவனத்திற்கு இந்தத் திட்டம் கொண்டுவரப்படும். அதற்குப் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 91, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.



1992 பிப்ரவரி 7]

91—

<u>திப்பரமலையிலிருந்து கிளைக்கால்வாய் வெட்டுதல்</u>

<u>*1805 திரு. கு. லாரன்ஸ் :</u>

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்குளம் தாலுக்காவில் கப்பியறை வருவாய் கிராம விவசாயத்திற்கும் குடிதண்ணீருக்கும் பட்டணங்கால் கால்வாயில் திப்பரமலையிலிருந்து கிளைக் கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டுவருவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. கு. லாரன்ஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் அரசு இருந்த காலக் கட்டத்தில் பட்டணங்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்று கிள்ளியூர் பகுதியிலே காட்டிய ஆர்வம் கருங்கல் பகுதியினுடைய வடக்கு பகுதியான கப்பியறை பகுதியிலே என்ன காரணத்தினாலோ காட்டாமல் விட்டு விட்டார்கள். ஆகவே, கப்பியறை டிஸ்டிரிப்பியூட்டரி என்று சொல்லப்படுகிற அந்தப் பகுதி முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கிற பகுதி. விவசாய பெருங்குடி மக்கள் வாழ்கிற ஒரு பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னாலும் கூட, திராவிட இயக்கத்தினுடைய வரலாற்றில், நம்முடைய இதய தெய்வத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிற அந்தப் பகுதி வாழ் மக்கள் கண்டிப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சிந்தனையோடு இருக்கிறார்கள். அது மிகக் குறுகிய ஒரு சேனல் 1.90 அடி அளவு நீளம் பொருந்திய, 2 அடி அல்லது 3 அடி அகலத்தில் செய்கிற ஒரு சாதாரணமான சேனல். எனவே, அதை வெட்டி அந்தப் பகுதி வாழ் மக்களை காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுவதோடு அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டத்தில் பட்டணங்கால்வாயில் திப்பிரமலையிலிருந்து கப்பியறை கிராமத்திற்கு கிளைக்கால்வாய் வெட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக முனைந்தபோது அங்கே வீடுகள் தோப்

புகள் நிலங்கள் இருக்கிற காரணத்தாலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப் பெற்றது. ஏறக்குறைய 45 அடி அகலமும் 30 அடி ஆழமும் வைத்து கால்வாய் அமைக்க வேண்டியிருக்கிறது. மேலும், அந்த திட்டம் பொருளாதார அடிப்படையிலே சாத்தியக் கூறுகள் இல்லை என்பதாலும், இந்த திட்டத்தினுடைய அடிப்படை, நம்முடைய பொதுப் பணித்துறையினுடைய நார்ம்ஸ் என்று சொல்லப்படுகிற அளவுகளுக்கு உட்பட்டு வராததாலும், இந்தத் திட்டம் தற்போது எடுத்து செயல்படுத்துவதற்கு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ். கேள்வியாகக் கேட்க வேண்டும். விளக்கம் அளிக்கக் கூடாது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986இல் கண்காணிப்பு பொறியாளர்கள் இது குறித்து இசைவு தரும் நிலையில் உள்ளது என்று தெரிவித்திருந்தார்கள். அரசுக்கு இன்றைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதோ அதற்கு பன்மடங்கு அதிகமாக கோடிக்கணக்கான ரூபாய் நட்டத்தை அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் இதுகாறும் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை நான் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு அந்தப் பகுதியில் 19 குளங்கள் இருக்கின்றன...... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி கேட்கும் போது கேள்வியாகத்தான் கேட்க வேண்டும். நீங்கள் இரண்டாவது கேள்வி கேட்கிறீர்கள். அப்பொழுதும் விளக்கம் எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். அங்கு எத்தனை குளம் இருக்கிறது என்ற விவரங்கள் எல்லாம் அமைச்சரிடமே இருக்கும். கேள்வியாகக் கேளுங்கள்.

முற்பகல் 10–15

திரு. கு. லாரன்ஸ் : எனவே இந்த பட்டணங்கால் சானல் என்று சொல்வதே பல்வேறு கிராமங்களில் 100 அடி ஆழத்திற்கும் ஆசியாவிலே உயர்ந்த மலைகளைக் குடைந்து செல்லுகின்ற ஒரு சானலாக இந்த சானல் செல்லுகிறது. எனவே, இந்தப் பகுதியைப் பொருத்தவரையில் 45 அடி என்று சொல்வது ஒரு சாதாரணமான காரியம். எனவே, வரும் ஆண்டிலாவது இதை ஆய்வு செய்து இந்தப் பகுதிவாழ் மக்களுக்கு போதிய வசதி செய்கின்ற பணியை மேற்கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறையின் மூலம் போடுகின்ற திட்டங்கள் அந்த பெனிபிட் காஸ்ட் ரேஷியோ என்ற





அடிப்படையிலே சில இடங்களிலே செயல்படுத்துகின்றோம், சில இடங்களிலே அவசியத்தின் தேவையைக் கருதி முக்கியத்துவத்தை உணர்ந்து, சில திட்டங்களிலே குறைவாக இருந்தாலும் கூட நம்முடைய ஒப்பற்றத் தலைவி டாக்டர் முதல்வர் இன்றைக்கு சில திட்டங்களையெல்லாம் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை பொருத்தவரையில் பாசனப் பகுதியைப் பெறுகின்ற நிலங்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தத் திட்டத்தினுடைய சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் தெரிவித்தேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று இந்தத் திட்டத்தினுடைய அளவுகோல்களையும் மற்றும் அதனுடைய விகிதாச்சாரங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கு இந்த அரசு எடுத்துக் கொள்ளும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திப்பிரமலையிலிருந்து செல்லுகின்ற இந்த கிளைச் சானல் வெட்டப்பட வேண்டுமென்று நான் இதற்கு முன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் கேட்டு, அதாவது அமைச்சர் அவர்கள் சொன்னது போல, 1986இல் அந்தப் பணி செய்யப்படும் என்கிற உத்திரவாதம் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதற்கிடையில் ஆட்சி மாறிய காரணத்தால் அது முடியாமல் போய்விட்டது. அதைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் தோட்டம், வீடுகள் இருக்கின்ற காரணத்தாலே, அந்த இடங்களை கைவசப்படுத்துவதற்கு சிரமங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நீங்கள் அப்படிப்பட்ட பணியை ஆரம்பிக்கின்றபோது எந்தத் தடங்கல் வந்தாலும் இதில் அரசியல் ஈடுபாடு இல்லாமல் நாங்கள் பொது மக்களின் நலன் கருதி உங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986க்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இடையிலே இருந்திருக்கின்றார்கள். அப்போதும் கூட அவர் பெற்று இருக்கலாம். ஏனோ விட்டுவிட்டார்கள். இருந்தாலும் நான் ஏற்கெனவே சொன்னது போல நம்முடைய ஒப்பற்றத் தலைவியின் ஆட்சியில் இது சம்பந்தமான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 92. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

92—

தச்சநல்லூர் ரெயில்வே மேம்பாலம்.

*2631 திரு. ஆர். முருகையா பாண்டியன்,

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி ஜங்ஷன் வடக்கே உள்ள தச்ச நல்லூர் ரெயில்வே கேட் போக்குவரத்தை முன்னிட்டு மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் திருநெல்வேலி ஒரு முக்கியமான நகர மாகும். ஆனால் அங்கே நாளுக்கு நாள் ஜனத்தொகையும், வாகனங்களும் பெருத்துக்கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி யிலிருந்து மதுரைக்கும், மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கும் வரவேண்டுமென்றால் அங்கே இருக்கின்ற தச்சநல்லூர் ரெயில்வே கேட் அடிக்கடி அடைப்பதன் காரணமாக போக்கு வரத்து அதிகமாகி இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன. எனவே நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் அங்கே ஒரு மேம்பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு திட்டத் தின் கீழ் திருநெல்வேலியில் அமைக்கப்படுகின்ற இன்னர் ரிங் என்று சொல்லப்படுகின்ற அந்த உள் வட்டச் சாலையில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் இன்றைக்கு தீட்டப்பட்டு அதற்கான நடைமுறைகளை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம், அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்



1992 பிப்ரவரி 7]

டிருக்கின்றன. அது தவிர தேசிய நெடுஞ்சாலை பிரிவு மூலம் அமைக்கப்போகும் திருநெல்வேலி பை-பாஸ் என்று சொல்லப் படுகின்ற புறவழிச்சாலையில் மற்றொரு ரெயில்வே மேம்பாலம் அமைக்கின்ற திட்டமும் பரிசீலனையில் உள்ளது. ஆகவே, தச்சநல்லூர் ரெயில்வே கேட்டுக்கு மேம்பாலம் அமைக்க அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 93. திரு. பி.வி. இராஜேந்திரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

93—

ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர்.

*5429 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் டிராக்டர் வழங்கி அதனை விவ சாயிகளுக்கு வாடகைக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

முற்பகல் 10-20

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்பு சட்டத்தை நமது தேசிய கொள்கை வாயிலாக ஏற்று இன்றைக்கு, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்திலெல்லாம் மிகப் பெரிய, நிலவுடைமை எல்லாம் தகர்ந்து சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலம் உள்ளவர்களாக ஆகி இருக்கின்ற இந்த நேரத்தில் எல்லா ஒன்றியங்களிலும் டிராக்டர் இல்லை. இரண்டாவதாக, தனியாரிடம் போனால் ஒரு மணி நேரத்திற்கான வாடகை மிக அதிகமாக, அவர்களிட மிருந்து வசூல் செய்யப்படுகிறது. இரண்டு மூன்று ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு நிச்சயமாக டிராக்டர்கள் நமது அக்ரோ என்ஜினியரிங் வாயிலாகக்கூட கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதனால் கூடுதலாக, ஜெனரல் பண்ட் அதிகமாக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவாவது டிராக்டர்களை வழங்கவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியியல் துறை சார்பாக மாவட்ட தலைநகரங்களிலும், கோட்ட தலைநகரங்களிலும் 177 டிராக்டர்கள் இருக்கின்றன. அவைகள் வேளாண் பணிக்குப் பயன் படுத்தப்படுகின்றன. குறைந்த வாடகையாக ஒரு மணிக்கு 110 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. அதில் தாழ்த்தப்பட்ட, பழங்குடிமக்களுக்கு 50 சதம் மானியமாக அரசு வழங்குகிறது என்பதை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்ரோ என்ஜினியரிங்கைப் பற்றி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய கேள்வியே, ஒன்றியங்கள் வாயிலாக அதைச் செய்து தர முடியுமா என்பதுதான். அதிலும் தமிழ் நாட்டிலே 177 டிராக்டர்கள்தான் அக்ரோ என்ஜினியரிங் மூலமாக இயங்குகிறது என்று சொன்னால் அதிலே நிச்சயமாக, மெக்கானிக்கல் ரீசனுக்காக 50 வண்டிகளாவது ஓடாமல்தான் இருக்க முடியும். அதனால் அரசு இதை நிச்சயமாக பரிவோடு பரிசீலிக்க வேண்டும். அப்படி பரிசீலிக்குமா என்பதை உங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிதிநிலைமையைக் கருதி வருகின்ற ஆண்டில் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய தொழில் நுட்பங்களின் அடிப்படையில் பல ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட வேளாண்மைக் கருவிகள் பல இலட்ச ரூபாய் மதிப்பில் ஒவ்வொரு வேளாண்மை விரிவாக்க மையத்திலும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றினை பொது ஏலம் விடுவதன் மூலமாக அரசுக்கு நிதி வருவாய் இருக்கிறது என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெய்சன் ஜேக்கப், இந்தக் கேள்வி ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் டிராக்டர் வழங்குவது பற்றியது. பழுதடைந்து கிடக்கின்ற விவசாயக் கருவிகளை ஏலம் விடுவது பற்றியதல்ல. இதற்கு தனிக் கேள்வி போடவும். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.



1992 பிப்ரவரி 7]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1967 ஆவது ஆண்டிற்கு முன்பு பல யூனியன்களிலே டிராக்டர்கள் அரசினால் வாங்கிக் கொடுக்கப்பட்டு சாதாரண மக்கள் உபயோகப்படுத்தி வந்தார்கள். அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னது போன்று, எந்தெந்த யூனியன்களில் பணம் இருக்கிறதோ அந்த அந்த யூனியன்களிலாவது டிராக்டர்களை வாங்கி வைப்பதற்கான ஒரு நிலையை அரசாங்கம் உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அக்கா பொன்னம்மாள் அவர்கள் கேட்கின்ற கேள்வி, உள்ளாட்சித் துறையிலே ஒரு காலத்திலே இருந்தது. எனவே, அதுபற்றி தனிக் கேள்வி போட்டால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 94. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

94 —

உர விநியோகத்தைக் கண்காணிக்க குழு.

* 6148 திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கும் உரங்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என கண்காணிக்க அரசு ஒரு குழு நியமிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் உரங்கள் முறையாக வழங்கப்படுவதற்கு வேளாண் உதவி அலுவலர்கள் அடையாள அட்டை வழங்குகிறார்கள். இதன் அடிப்படையில் உரம் வழங்கப்படுகிறது. இவை சரியாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேல் அலுவலர்கள் ஆய்வு செய்கிறார்கள். மேலும் இதனை உயர் அலுவலர்கள் தணிக்கை செய்கிறார்கள். எனவே இதனைக் கண்காணிக்க தனிக் குழு அமைக்கத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

[1992 பிப்ரவரி 7

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் உரங்கள், அதாவது ஒவ்வொரு வினியோக மையத்திற்கும் எவ்வளவு உரங்கள் கொடுக்கப்படுகின்றன? கொடுக்கப்படும் உரங்கள் முறையாக வினியோகிக்கப்படாமல், அந்த வினியோக மையத்திலுல பணிபுரிகிறவர்கள் தவறாக அதிக விலைக்கு விற்பதாகவும் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் அதிக உரங்களை வினியோகிப்பதாகவும் புகார்கள் வரும் நேரத்தில் வினியோக மையத்திற்கு நேரில் சென்று கண்காணிக்கவும் தவறு செய்யும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் விவசாயிகளுக்கு உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்து, மாநில மாவட்டக் கிளைகள் விவசாய உரங்கள் வினியோகிக்கும் மையங்களுக்கும் சேர்த்து இந்தக் குழுவை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்றும் அப்படி குழுக்கள் அமைக்கின்ற போது அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைக் கண்டுபிடித்து, உரங்களை விவசாயிகளுக்கு முறையாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தவறுகள் நடைபெறுவதாக அரசிற்கு எந்தப் புகார்களும் இதுவரையில் வரவில்லை. அப்படி எங்காவது நடைபெற்றிருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் தனியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து சொல் வார்களானால், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப் பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எப்போதும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானிய விலையில் வினியோகிக்கப்படும் உரங்கள் எந்த தேதியில், எப்போது, எந்தெந்த விவசாயிகள் வாங்குகின்ற வினியோக மையங்களில் வினியோகிக்கப்படுகின்றன என்பதனை விவசாயிகள் தெரிந்து கொள்ள அந்த உரங்களை முறையாகப் பெற்றுச் செல்லவும், அந்தந்த வினியோக மையங்கள் மூல மாகவோ பத்திரிகைகள் மூலமாகவோ விளம்பரப் பலகை யாகவோ அறிவிப்பு வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,463 முதன்மை வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் 6,258 விற்பனை மையங்களிலும் இந்த உரங்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இருக்கக்கூடிய அனைத்து விவசாயி களுக்கும் விவசாயச் செலவு, அதாவது உரச் செலவு கூடுதலாகத் தான் இருக்கிறது. அதே நேரத்தில் சிறு விவசாயிகளுக்கு சப்சிடி மூலமாகக் கொடுக்கும்பொழுது பல்வேறு தவறுகள் நடக்கின்றன. ஏனென்றால், சிறு விவசாயிகளுக்கு அங்கே இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீசர்தான் சான்றிதழ் வழங்கவேண்டி யிருக்கிறது. அப்படி இருக்கின்ற நேரத்தில் அவர் சான்றிதழ். கொடுப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய பட்டாதாரர்களே லஞ்சம் கொடுத்தால்தான் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அந்த நிலைமையை மாற்றி அனைத்து விவசாயிகளுக்கும் முன்பு மாதிரி அதை நிரந்தரப் படுத்துவதற்கு, மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டிலே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஒரு முறையை தமிழகத்தி லுடைய முதலமைச்சராக வீற்றிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்குகின்ற திட்டத்தை இந்த அரசு செய்திருக்கிறது. அந்த அட்டையிலே ஒவ்வொரு விவசாயிக்கும் சொந்தமான நிலம் எவ்வளவு இருக்கிறது; குத்தகை நிலம் எவ்வளவு இருக்கிறது; அவர் கடந்த ஆண்டுகளிலே அதற்கு என் னென்ன மானிய விலைகளிலே இடுபொருள்கள் பெற்றிருக் கிறார் என்கின்ற விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 95. திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

95—

உத்திரமேரூர் ஒன்றியத்தைப் பிரித்தல்.

*1752—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1 பேரூராட்சி, 73 ஊராட்சி, 234 கிராமங்கள் அடங்கிய உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 7-ன்படி பரிசீலனை செய்யப்பட்டு, அரசின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு உரிய முடிவு எடுக்கப் படவுள்ளது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உத்திர மேரூர் தொகுதி தமிழகத்திலேயே அதிகமான ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும். ஒரு பேரூராட்சி, 73 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய அந்த ஒன்றியத்தில் குறிப்பாக 234 கிராமங்கள் உள்ளடக்கி இருக்கின்றன. எனவே உத்திரமேரூர் ஒன்றியம் என்றும் சாலவாக்கம் ஒன்றியம் என்றும் பிரித்துத் தரவேண்டுமென்று, அதிலும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலேயே அது நடைபெற வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்படுகின்ற நிதி ஆதாரத்தை மையமாகக் கொண்டு, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 96. திரு. என். பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

96—

## கூட்டுறவு நிலவள வங்கி பணியாளர்கள்.

* 4343—திரு. என். பன்னீர்செல்வம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு நிலவள வங்கிகளில் பணியாற்றும் சூப்ரவைசர்கள், மேனேஜர்கள், கிளார்க்குகள் ஆகியோரை அரசு விதிகளின்படி பணிமாற்றம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?



1992 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு அலுவலர்களுக்கான மாற்றல்விதிகள் நிலவள வங்கிகளின் பணியாளர்களுக்குப் பொருந்தாது. எனவே, அவர்களை அரசு ஊழியர்கள் மாதிரி பணி மாற்றம் செய்யும் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரையாக ஆண்டு வந்த பட்டாண்மையார், கணக்குப்பிள்ளைகளை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் மாற்றினார்கள். அது அனைவரும் அறிந்ததே. அந்த அடிப்படையிலே இதுபோன்ற பணியாளர்களையும் மாற்றம் செய்தால்தான், அரசால் வழங்கப்படுகின்ற, ஏழை எளிய விவசாய மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகைகள் முறையாகக் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அரசு அவர்களை மாற்றம் செய்ய ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகள் தனித் தன்மை கொண்டவையாகும், அவைகளுக்கென்று தனியாக துணை விதிகள், பை-லாஸ் இருக்கின்றன. அவைகளுடைய செயல் திறனும் செயல்பாடும், பணியாளர்களுடைய நிலைமையும் துணை விதிகளுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்படுகின்றன. ஒரு நிலவள வங்கியிலேயிருந்து இன்னொரு நிலவள வங்கிக்கு மாற்றக்கூட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு அரசு விதிகள் பொருந்தும் என்பது முடியாதது ஆகும்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்பெறுகிறது. திரு. காந்திராஜன், கேள்வி மட்டும் கேட்க வேண்டும்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகள் மட்டுமல்ல, ஏ.சி.எஸ். என்று சொல்லப்படுகின்ற அந்தக் கிராம வங்கிகளிலே இருக்கின்ற செயலாளர்களும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து மாற்றியமைக்கவும், இல்லையென்றால் எதிர்காலத்திலே இன்னும் மோசமான சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்திலே கொண்டு இந்த அரசு இதற்கான பைலாவைத் திருத்துகின்ற அந்தச் சட்ட விதிகளை எதிர்காலத்திலே கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்து கொண் டிருக்கின்றன. அங்கே இருக்கிற நிரந்தர ஊழியர்கள், குறிப்பாகச் செயலாளர்கள் தவறு செய்கின்றார்கள். அவர் களை மாற்ற முடியவில்லை என்று தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே வந்து சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 97, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

97—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

*4358—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் மணமகள் திருமணத்திற்குப் பின் இறந்துவிட்டால், உதவித் தொகையினை மணமகளின் பெற்றோர்களுக்கு வழங்குவதற்கான அரசின் பரிசீலனையில் உள்ள கருத்துரு பற்றிய முடிவு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) எம் எனில், விரைவில் முடிவெடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளுடைய திருமணத்திற்கு வாங்கப்பட்ட கடன் தொல்லைகளினால் கடந்த ஒரு வருஷமாக அல்லல்படும் மண மகளின் தந்தைக்கு, திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப் படும் பணம் விரைவில் கிடைக்க அரசாங்கத்தால் ஆவன செய்யப் படுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய் வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்குப்



1992 பிப்ரவரி 7]

பின்னால் ஏறக்குறைய தமிழகம் முழுவதும் இந்த 7 மாத காலத் திற்குள் 10,600 பேருக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் பணம் வழங்கப் பட்டிருக்கிறது. ஆகவே, எந்த மனுக்கள் கொடுக்கப்பட்டாலும் விரைவில் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் மனுக்கள் கொடுக் கிறவர்களுக்கு, மாவட்டத் தலைநகரத்திலே இருக்கிற சமூக நலத் துறை அதிகாரி தான் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து பணம் கொடுக்கிறார். சில பேர் மனுக்களில் நிலை என்னவென்று ஆராய்வதற்காக மாவட்டத் தலைநகரத்திற்குச் செல்வதற்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, நகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற அந்த விண்ணப்பதாரர்களுக்கு நகராட்சி ஆணையாளரே அந்தப் பணத்தைக் கொடுக்கிறார். அதே போல ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே இருக்கிற விண்ணப்ப தாரர்களின் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்யவும் அதற் குண்டான நிதியை வழங்கவும் உண்டான அதிகாரம் அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கே வழங்கப்படுமா, அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, மாவட்ட சமூக நலத் துறை மட்டும் இந்தப் பணியைச் செய்யவில்லை. ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்தும் கூட, அதே போல, நகரியம், நகராட்சி, மற்றும் மாநகராட்சி ஆகிய அலுவலகங் களிலேயிருந்தும் விண்ணப்பங்களைப் பெறுகிறார்கள். அந்த விண்ணப்பங்கள் சமூகநலத் துறை அதிகாரியினால் சரிபார்க்கப் படுகின்றன. அதற்குப் பின்னால் அந்த விண்ணப்பத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்புவார்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகரியப் பகுதிகளுடைய செயல் அலுவலர்கள் திருமண உதவித் தொகை வழங்க ஒப்புதல் அளித்த பிறகு, அந்தத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் இருக்கின்ற செக்குகள் அங்கே அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 98. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

98— [1992 பிப்ரவரி 7

உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை இடமாற்றம் செய்தல்.

* 4391—திருமதி. ப. சரஸ்வதி :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை பொது மாறுதல் என்ற வகையில் இடமாற்றம் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிப்பதை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற அரசு உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊயமுற்றவர்கள் ஓரிடத்திலேயிருந்து பல மைல் தூரம் கடந்து சென்று அங்கு பணியாற்றுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், இதை அரசு பரிவோடு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்று ஆண்டுப் பணிக் காலம் முடிந்த அரசுப் பணியாளர்களை நிர்வாக நலன் கருதி வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று 1990 ஆம் ஆண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணையிலிருந்து உடல் ஊன முற்றவர்களுக்கு என்று விலக்கு எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால், வாகன வசதி இல்லாத இடங்களுக்கு மாற்ற வேண்டாம் என்கின்ற அறிவுரை மட்டும் எல்லாத் துறையினருக்கும் சமூக நலத் துறை அலுவலர்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 99. திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

99—

மோகனூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு பட்டா.

* 1527—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—



(அ) திருவாரூர் வட்டம், மோகனூர் கிராமத்தில் ஆதி திராவிடர்கள் குடியிருக்கும் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கப் படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் கிராமத்தில் கடந்த 2 ஆண்டுகளாக, பட்டா வேண்டுமென்று கோரி. அப்பகுதியிலே இருக்கிற ஆதி திராவிட மக்கள் மனுக்கள் போட்டு, வாரம் ஒரு முறை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அலைந்தால் கூட, அவை கொடுக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல, தொடர்ந்து திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஏறத்தாழ ஆயிரம் மனுக்கள் வரை இப்படி தேங்கியிருக்கின்றன. எவ்வளவோ கடிதம் எழுதினால் கூட பதில் கிடைப்பதில்லை. எனவே, அவ்வாறு தேங்கிக் கிடக்கிற பட்டாவை விரைவாக கொடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் வட்டம், மோகனூர் கிராமத்தில் மொத்தம் 49 ஆதி திராவிட குடும்பங்கள் உள்ளன. அவற்றில், 28 ஆதி திராவிட குடும்பங்களுக்கு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள, 21 ஆதி திராவிட குடும்பங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்று, தேங்கியிருக்கிற அந்தப் பட்டாக்களை—அதாவது, விலை கொடுத்து நிலத்தை வாங்கி, அதற்கு பட்டா கொடுப்பதிலே காலதாமதம் ஆவதைப் பற்றிப் பிரச்சினை இல்லை—ஆனால் குடியிருப்பவர்கள், நீண்ட காலமாகக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு பட்டா கொடுப்பதற்கு காலதாமதம் இருக்கிறது. இதனுடைய விளைவு தமிழக அரசு தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்கும் போது பட்டா கேட்கிறது; அவர்களுக்கு பட்டா கிடையாது. 20 வருடங்கள், 30 வருடங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அரசு திட்டங்களை அவர்களுக்கு செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தேங்கியிருக்கிற பட்டாவை

ஒரு குறித்த காலத்திற்குள் அவர்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த நிதியாண்டிலாவது, அரசு கட்டிக் கொடுக்கக் கூடிய தொகுப்பு வீடுகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற வகையிலே ஒரு காலத்தை நீங்கள் குறித்து அறிவிக்க வேண்டும். அவ்வாறு அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குடியிருந்து வரும் பகுதியாளர்கள், குளத்துப் புறம்போக்கில் இருந்து வருகிறார்கள். ஆகையினால் தான் அரசு தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 100; திரு. கா.சின்னசாமி; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் 100—

## மலைவாழ் மக்களுக்கு புதிய சாலை வசதி.

*3970—திரு. கா. சின்னசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக் குறிச்சியிலிருந்து பூசனிக்குழி வழியாக நரியன்காடு வரை கொல்லி மலைக்கு மலைவாழ் மக்கள் பயனுக்காக புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)



## 2. உரிமைப் பிரச்சினை.

அவை நிகழ்ச்சிகளைத் திரித்து மாலைமுரசு 5–2–1992 ஆம் நாளைய கோவைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சந்திரசேகர் அவர்கள் மாலை முரசு பத்திரிகை மீது ஓர் உரிமைப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொடுத்திருக்கிறார். 5–2–1992– கோவை, மாலை முரசு பத்திரிகையில் முதல் பக்கத்தில், 'இளம்வழுதி தாக்கப்பட்டார்' என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்தியைப் பிரசுரித்து, அந்தச் செய்திக்குள்ளே 'பிராக்கெட்' போட்டு, பொள்ளாச்சி சந்திரசேகர் இளம்வழுதியின் கையல் அடித்தார் என்று பிரசுரித்துள்ள பிரச்சினையை, என்னுடைய கவனத்திற்கு உரிமைப் பிரச்சினையாக எழுப்ப வேண்டுமென்று கொடுத்து இருக்கிறார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபொழுது, அது உரிமை மீறல் பிரச்சினையின் கீழ் வருவதோடு, வேண்டுமென்றே இந்த அவையில் நடக்காத ஒரு செய்தியை நடந்ததாகப் போட்டு, அந்த ஓர் உறுப்பினர் செய்தார் என்றும் செய்தியை வெளியிட்டு இருப்பது எவ்வளவு கண்டிக்கத்தக்கது என்பதை இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற முறையைப் பார்த்தாலே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள முடியும். இந்த அவையில் அவைத் தலைவருடைய கட்டளையையும் மீறி, இங்கே பல்வேறு வகைகளிலே முரண்டு பிடித்த ஓர் உறுப்பினர் வெளியேற்றப் பட்டிருக்கிறார். அந்தச் செய்தியை வெளியிடுகிறபோது, இதைப் போல நடக்காத ஒரு செய்தியை மாலை முரசு பத்திரிகை வெளியிட்டிருப்பது என்பது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு செயல் என்பதை எடுத்த எடுப்பிலேயே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

குறிப்பாக, இந்தப் பத்திரிகை கொஞ்ச நாட்களாகவே அவையில் நடைபெறாத சம்பவங்களை நடைபெற்றதாக இதைப்போல் திரித்துக் கூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருப்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், இந்த அவையும், அரசாங்கமும் ஒரு ஜனநாயகக் கோட்பாட்டின்படி கருத்துச் சுதந்திரம் பெற்றிருக்கிற அமைப்புகள் என்று முழுமையாகக் கருதுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட இந்த அவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில், எங்கள் மீது இருக்கிற குற்றங் குறைகளைப் பத்திரிகைகளில் மிகத் துணிச்சலோடு

வெளியிடலாம் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியினர் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் பத்திரிகையாளர்களுடைய அத்தகைய விமரிசனங்கள் கூட எங்களுக்குப் பெரிதும் பயன்படும். அது தான் ஒரு ஜனநாயகக் கோட்பாடு என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நானும் பத்திரிகைகளைப் பொறுத்தமட்டில், இந்த அவையில் ஒரு அங்கம் என்கிற வகையில் , அவை உறுப்பினர்கள் பெற்றிருக்கிற உரிமைகளை, இங்கே இருக்கிற பத்திரிகையாளர்களும் பெறத்தக்க வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்து வந்திருக்கிறேன். இருந்தாலும், இதைப்போன்ற செய்தியை வெளியிடுவது என்பது மக்கள் மத்தியில் இந்த அவையின் மீது ஒரு தவறான எண்ணத்தை உருவாக்குகிற முயற்சியாக இருக்குமோ என்று கூட ஐயுற வேண்டிஇருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையில் மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோதே உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்கிற காரணத்தினால் நேரிடையாகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க முடியும். இருந்தாலும், இன்னும் இந்த அவை, பத்திரிகையாளர்களிடத்திலே, தான் கொண்டிருக்கிற பெருந்தன்மையை விட்டுவிடவில்லை என்பதன் காரணமாக அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு ''ஏன் உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி, உரிய தக்க நடவடிக்கையை இந்தப் பத்திரிகையின் மீது எடுக்கக் கூடாது'' என்பதற்கான விளக்கம் கேட்டு அந்த விளக்கத்தைப் பெற்று, அவைக்குத் தெரிவிக்கிறேன் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எச்சரிக்கையைப் பத்திரிகையாளர்களும், 'பிரெஸ் அட்வைசரி கவுன்சில்' என்றிருக்கக்கூடிய இந்த அவையில் ஒரு அங்கமாக கருதப்பெறுகின்ற அந்தக் குழுவினரும் கடுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற வேண்டுகோளைப் பத்திரிகையாளர்களுக்கும் தெரிவித்து, இந்தப் பத்திரிகைக்கு விளக்கம் கேட்டு, விவரத்தை அவைக்கு அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) இராமநாதபுரம் , மதுரை மற்றும் காமராஜர் மாவட்டங்களில் நிலவிவரும் வறட்சி நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் வ. சத்தியமூர்த்தி மற்றும் சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வ. சத்தியமூர்த்தி.



திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமநாதபுரம், மதுரை மற்றும் காமராசர் மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவை முன் வைத்திருக்கிறேன்.

## அறிக்கை.

வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கவும், இதர இடர்பாடுகள் ஏற்படின் நிவாரணம் வழங்கவும், நடப்பு நிதியாண்டில் இடர்பாடு நிவாரண நிதியிலிருந்து இது வரை வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 8.69 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட தொகை குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கவும், லாரி மூலம் குடிநீர் வழங்கவும், ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தல், திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், திறந்த வெளிக் கிணறுகள் அமைத்தல், குழாய்களை நீட்டித்தல், தனி மின் தடம் அமைத்தல் முதலிய பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

வறட்சி நிவாரண நிதியிலிருந்து இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 28.86 இலட்சம் ரூபாயும், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்திற்கு 12.09 இலட்சம் ரூபாயும், மதுரை மாவட்டத்திற்கு 19.50 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. தற்போது காமராசர் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நிதி உதவி கோரி அரசுக்கு கருத்துருக்கள் வந்துள்ளன. தென் மாவட்டங்களில் பரவலாக வறட்சி நிலை காணப்படுவதைக் கருத்திற் கொண்டு இது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. கோரப்பட்டுள்ள அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அரசு ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாக, வறட்சிப் பகுதியான மாவட்டங்களுக்குச் சில வறட்சி நிவாரணத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும், நடப்பு ஆண்டில் தமிழகத்தைப் பொறுத்தமட்டில், வடக்கே மழை பெய்து விட்டது. தெற்கே காய்ந்து விட்டது. விளைநிலம் அதனால் காய்ந்து, விவசாயப் பெருங்குடி மக்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஒரு கைப்பிடி சாவி கூட வீட்டுக்கு வந்து சேராத நிலை இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. வேறு வேலைக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினாலும், வேலை வாய்ப்பு இல்லாத நிலைமையினாலும், திசை தெரியாது திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதி பெற்று, உடனடியாக அத்தகைய வறட்சியான மாவட்டங்களுக்கு வந்து, உண்மையான சூழ்நிலையை அறிய முன்வருவார்களா என்பதை நான் இந்த அவையின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், மதுரை, காமராசர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வறட்சி நிலைமை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. ஆய்வு செய்து, அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின் பேரில் என்ன செய்ய வேண்டும் என்பதை அரசு முறைப்படி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

முற்பகல் 10-45.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில்—இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வெள்ள நிவாரண வேலைகள் பற்றிப் பேசினார்கள். நாங்கள் வறட்சிப் பற்றிப் பேச வேண்டிய நிலையில் இருக்கிறோம்—இராமநாதபுரம் மாவட்டத்தி குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. விதைத்து, நாற்று நட்டு, களை எடுத்து, உரம் போட்டு அறுக்கிற வேளையில் ஒரு மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டு பஞ்சம் ஆகிவிட்ட ஒரு கொடிய நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயக் கூலிகள் வேலை தேடி



தஞ்சைக்கும் தூத்துக்குடி துறைமுகத்திற்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள். என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் பொது மக்கள் மட்டுமல்லாமல் கால்நடைகள் கூட அவதிப்படுகின்றன.

நான்கூட நம்முடைய கேரள முதலமைச்சர் அவர்களை டெல்லியில் சந்தித்தபோது இராமநாதபுரத்திற்குக் குடிதண்ணீர் கொடுங்கள் என்று கேட்டேன். அவர்கள் மிக அனுதாபத்தோடு உங்களுடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். மிகுந்த உற்சாகத்தோடு எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வறட்சியைப் போக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேரள மாநில முதலமைச்சரோடு கலந்து பேசி, ஆந்திராவிலே எப்படி ஜனார்த்தன ரெட்டி அவர்களோடு கலந்து பேசினார்களோ அதுபோல் கேரள முதலமைச்சரையும் பார்த்துப் பேசி இந்த வறட்சிப் பகுதிக்குக் குடிதண்ணீராவது வாங்கித் தருவார்களா என்று பணிவுடன் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சிப் பகுதிக்கு, அதிலும் குறிப்பாக குடிதண்ணீருக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து சென்ற ஆண்டு கூட எட்டு கோடியே அறுபத்தொன்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி வேலை வாய்ப்புத் திட்டங்களையும் உருவாக்க வேண்டும் என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேவையானபோது செய்ய எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். கேரள மாநிலத்துடன் தொடர்பு கொள்வதைப் பற்றித் தனியாக முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) கல்வித் துறை பணியாளர்கள் சங்கம் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு கல்வித் துறை அலுவலக பணியாளர் சங்கம் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1992 பிப்ரவரி 7

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ்நாடு கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்கம் பின்வரும் ஒன்பது கோரிக்கைகளை கொடுத்துள்ளது.

1. உதவி கல்வி அலுவலகங்கட்கு கண்காணிப்பாளர் பணியிடம் புதியதாக வழங்க வேண்டுதல்.

2. மேல்நிலைப் பள்ளிகட்கு உதவியாளர் பணியிடம் வழங்க வேண்டுதல்.

3. பதிவறை எழுத்தர்கட்குப் பதவி உயர்வு வழங்க வேண்டுதல்.

4. பட்டம் முடித்த அமைச்சுப் பணியாளர்கட்கு ஆசிரியர் பணியிடம் வழங்க வேண்டுதல்.

5. இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கட்கு நிபந்தனையற்ற தேர்வுநிலை வழங்க வேண்டுதல்.

6. மாவட்டக் கல்வி அலுவலர்/மகளிர் பள்ளி ஆய்வாளரின் நேர்முக அலுவலர்களின் தேர்வுநிலைக்கு கண்காணிப்பாளர் ஊழியத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுதல்.

7. முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக அலுவலர்கள் (கணக்கு) பணியிடத்தை நிரந்தரமாக்க வேண்டுதல்.

8. தேர்வுநிலை கண்காணிப்பாளர்கட்கு மற்ற துறைகளில் ஊதியம் வழங்குவது போன்று கல்வித்துறையிலும் வழங்கிட, விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையை இரத்து செய்யக் கோருதல்.

9. அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை தீர்மானம் 5-ல் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைக்க வேண்டுதல்.

தமிழ்நாடு கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்கத்தின் ஒன்பது கோரிக்கைகளின் கோரிக்கை ஒன்றினையும் கோரிக்கை இரண்டினையும் நிதிநிலை நெருக்கடியான சூழலிலும் அரசு பரிவுடன் பரிசீலித்து வருகிறது. கோரிக்கை மூன்றைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் சிறப்பு விதிகளில் தகுதி வாய்ந்த பதிவு எழுத்தர்கள் பதவி உயர்வுபெற வாய்ப்புள்ளது.





பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏராளமாய் இருக்கும்போது கோரிக்கை நான்கை ஏற்க இயலாது. கோரிக்கை ஐந்து தொடர்பாக கல்வி துறைக்கென தனியாக ஒரு கொள்கை வகுக்க முடியாது. கோரிக்கை ஆறு தொடர்பாக தீர்ப்பாயத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அரசு தற்போது முடிவெடுக்க இயலாது. கோரிக்கை ஏழு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோரிக்கை எட்டு மற்றும் ஒன்பது. ஏற்கெனவே ஊதிய முரண்பாட்டு குழுவின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கல்வித் துறை அலுவலகப் பணியாளர்கள் சங்கம் தங்களின் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு முன்னால் கடந்த மூன்று நாட்களாக சுமார் 5,000 பேர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். தமிழகம் முழுவதும் கல்வித்துறை அரசுப் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள் 13,000 பேர் ஒட்டு மொத்தமாக விடுப்பு எடுத்து தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 9 கோரிக்கைகளில் மூன்றை அரசு பரிசீலித்து வருகிறது என்று விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், நிதிநெருக்கடி நிலையிலும் கருணையோடு 3 கோரிக்கைகளை ஏற்று பரிசிலிப்பதற்காக தமிழ்நாடு கல்வித் துறை அரசுப் பணியாளர்கள்சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கும் மூன்று கோரிக்கைகளில் முதலாவது கோரிக்கை தமிழகத்தில் உள்ள .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் அறிக்கையில் இருக்கிறது. எனவே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கிறேன் என்று மூன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்றைப் பொறுத்தவரையில் 396 உதவிக் கல்வி அலுவலகங்களுக்கு கண்காணிப்பாளர் நியமிப்பது ஒன்று . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் அறிக்கையில் இருக்கிறது. எனவே நீங்கள் அது குறித்துக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதத்திற்குள்ளாக இந்த பட்ஜெட்டுக்குள்ளாக இதனை அரசு ஆணையாக பிறப்பித்து இந்த மூன்று கோரிக்கைகளையும் செயல்படுத்துவார்களா என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உண்ணாவிரதம் மேற்கொண்டு தொடர்ந்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிற நம்முடைய கல்வி அலுவலகப் பணியாளர்கள் சங்கம் ஏதோ இந்த அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி தலைமையில் அமைந்ததற்குப் பிறகுதான் இந்தக் கோரிக்கைகள் தோன்றியது போலவும் அதை உடனே தீர்க்கவில்லை என்றால் நாங்கள் போராட்டத்தில் இறங்குவோம் என்றும் சூளுரைத்து நோட்டீஸ்கள் எல்லாம் அச்சடித்து அதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுடைய வாழ்த்துக்களோடு அவர்கள் இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கி இருக்கிறார்கள். (சிரிப்பு) முதற்கட்டமாக ஆர்ப்பாட்டம். இரண்டாவது கட்டமாக உண்ணாவிரதம். மூன்றாவது கட்டமாகவும் ஒரு போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களையும், இந்த கல்வித் துறை அலுவலகப் பணியாளர்களையும் வேண்டிக் கொள்வது என்னவென்றால், இது நீண்ட நாட்களாக இருக்கின்ற ஒரு பிரச்சினை. இந்தப் பிரச்சினையை நீங்கள் அரசாங்கத்தினிடத்தில் கோரிக்கையாக வைத்திருக்கிறீர்கள். அரசாங்கம் எவ்வளவு நிதி நெருக்கடிகளுக்கு இடையில் மக்களுடைய தலைசிறந்த தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே கோரிக்கைகளை வைத்து போராடுகின்ற இவர்கள், பயணிகள் பயணம் செய்கின்றபோது பேருந்துகளிலே செல்கிறார்கள். அரிசி வாங்குகிறபோது பொதுமக்கள் ஆகிறார்கள்.

முற்பகல் 10-50

மருத்துவ நிலையத்திற்குப் போகிறபோது மருத்துவ உதவி பெறுகிறார்கள். ஆகவே ஏதோ சில ஆயிரம் பேர்கள், 13 ஆயிரம் பேர்கள் ஒட்டுமொத்தமாக விடுப்பு போட்டுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அது அரசாங்கத்திலே நிச்சயமான வருமானம் இருப்பதனாலே அவ்வளவு தைரியமாக செய்ய முடிகிறது. இதையே ஒரு நாளைக்கு வேலைக்கு போகவில்லையானால் விவசாயத் தொழிலாளி கூலியை இழந்துவிடுவான். நான் இதை சொல்வதற்குக் காரணம் நீண்ட நாட்களாக கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு அரசாங்க அமைப்பு ஒரு புதிய அரசு தோன்றி பல்வேறு பிரச்சினைகளை, எல்லோரும் அஞ்சிக் கொண்டிருந்த பிரச்சினைகளை எல்லாம் சமாளித்துக் கொண்டு, இந்த மாநிலத்தை ஒரு மிகச் சிறந்த மாநிலமாக ஆக்கிக்கொண்டிருக்கிறது என்கின்ற பெருமையைப் பெற்றுக் கொண்டிருக்கிற ஒரு அரசுக்கு வேண்டுகோளை வைப்பதிலே தவறு இல்லை. ஆனால் கொஞ்சம் மிரட்டுகிற பாவனையில் இந்தக் கல்வித்துறை பணியாளர்கள் ஈடுபட்டிருப்பதை நான் வருத்தத்தோடு அவர்களுக்கு இந்த முறை சரியானது அல்ல என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



இங்கே அவர்கள் கேட்டிருக்கிற சில கோரிக்கைகள் நடைமுறையில் அரசின் பரிசீலனைக்கு உரிய கோரிக்கைகள். இன்றைக்கு பள்ளிக்கூடங்களினுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்ப நம் அமைச்சு பணியாளர்களும் அதிகப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அதிகப்படுத்தினால் உடனேயே சம்பளமும் வந்துவிடுகிறது. நிரந்தரமும் வந்துவிடுகிறது. வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்குகிற சூழ்நிலையும் வளர்ந்துவிடுகிறது. காரணம் அரசுத் துறையிலே இது சுலபமாக நடைபெறவும் முடிகிறது. ஆகவே, இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு அரசாங்கம். நான் இந்த அறிக்கையிலே தெரிவித்திருப்பதுபோல பல்வேறு கோரிக்கைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், இதை அரசு பரிசீலிக்கிறது என்று இதிலேயே தெரிவித்திருக்கிறோம். ஆகவே அதற்கான முடிவுகளை அரசு எடுக்கும். ஏதோ உடனேயே கையிலேயே இப்போதே கொடுத்துவிடுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அங்கே வாக்குறுதி அறிவித்துவிட்டு வந்து இங்கே கேட்டு பெற்றுவிட முடியும் என்று எண்ணினால் அது அவ்வளவு சுலபமாக நடைபெற முடியாத ஒன்று. ஆகவே இந்த கோரிக்கைகளிலே பரிசீலிக்க வேண்டியவற்றை பரிசீலிக்கும். அவர்களே வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். ஆகவே வழக்கு மன்றத்திலே என்ன தீர்ப்பு வருகிறதோ அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம். ஜி. ஆர். அவர்கள் 1985 ஆம் ஆண்டே இந்த மேல்நிலைப்பள்ளிகளுக்கு உதவியாளர்களை நியமிப்பதற்காக ஒரு உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த அரசு ஆணை இப்போது செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையே நான் நான் முன்பே சொன்னேன். இவை இப்போது தோன்றிய பிரச்சினைகள் அல்ல. 7, 8 ஆண்டுகளுக்கு முன்பே இருந்து தோன்றிய பிரச்சினைகள். கடந்த 2 ஆண்டுகளிலே ஒரு ஆட்சி இங்கே இருந்ததே அப்போது இந்தத் தீவிரம் எல்லாம் எங்கே போயிற்று ? இந்த போராட்டம், அந்த ஆர்வம் எல்லாம் நான் இங்கே துண்டு நோட்டீஸ்கள் எல்லாம்கூட வைத்திருக்கிறேன். அதிலே ஏதேதோ முழக்கங்களை எல்லாம் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள்.

நான் சட்டமன்றமாக இருப்பதாலே கொஞ்சம் அடக்கமாகவும், அமைதியாகவும், பொறுமையாகவும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, 1985-லே போட்ட உத்தரவை இன்றைக்கு வந்து ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்கிறீர்களே, இவ்வளவு காலம் என்ன தூங்கிக்கொண்டு இருந்தீர்களா

ஆகவே, இந்த அரசு நியாயமான கோரிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றும். அது எப்போது நிறைவேற்றும் என்பது அரசு இருக்கிற சூழ்நிலைகளையொட்டி அந்த முடிவுகளை எடுக்கும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின் வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழக அரசின் 1977-78 மற்றும் 1978-79-ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் மீது இந்திய கணிக்கைத் தணிக்கைத் தலைவரின் (சிவில்) அறிக்கைகளில் மேலாண்மைத் துறை குறித்த பத்திகள் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருபத்திரெண்டாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) களில் தொடர்புபட்ட பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய இருபத்தேழாவது அறிக்கை.

1971-72 மற்றும் 1972-73-ஆம் ஆண்டுகளில் அனுமதிக்கப் பட்ட மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதியொதுக்கங்களிலும் மிகைச் செலவு குறித்த பொதுக் கணக்குக் குழு அளித்த ஒன்பதாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருபத்திநான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை)-யில் மேலும் தொடர்புபட்ட பரிந்துரைகளில் மீது அரசு மேற்கொண்டும் எடுத்த நடவடிக்கை பற்றிய இருபத்தெட்டாவது அறிக்கை.

1979-80-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதியொதுக்கீடுகளிலும் மிகைச் செலவு பற்றி பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்திரண்டாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் அறுபத்தி நான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை)-யில் மேலும் தொடர்புபட்ட பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய இருபத்தொன்பதாவது அறிக்கை.



முற்பகல் 10-55

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1991-92-ம் ஆண்டிற்கான குழுவின் இருபத்தைந்தாவது, இருபத்தாறாவது இருபத்தேழாவது மற்றும் இருபத்தெட்டாவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் 1991-92-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஈ) பேரவையுடன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையுடன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எ. ஏகாம்பர ரெட்டி, பேரவையுடன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையுடன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991-92-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை குழுவின் சார்பில் இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அறிவிப்பு

### எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன் வடிவுகள் அறிமுகம் செய்தல். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1992ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன் வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. சட்ட முன் வடிவுகள் — (அறிமுகம் செய்தல்.)

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன் வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.





மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''1992ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல்(திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு : இச்சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்

(இ) வேளாண் விளை பொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

*மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன் :இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவை தலைவர் :1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11.00

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இங்கே 5 நாட்கள் விவாதம் நடைபெற்றிருக்கிறது. இறுதிக் கட்டமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பதற்கு முன்னால் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களைத் தொகுத்துக் கூற நான் அழைக்கப் பட்டிருக்கிறேன். ஆளுநர் மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜண்ட்டாகச் செயல் படுகிறார் என்கிற ஒரு தரப்பாரின் வாதத்தைத் தகர்த்தெறியும் விதத்திலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. தமிழக அமைச்சரவை நம்முடைய முதல் அமைச்சரின் தலைமையிலே விவாதித்து, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் தயாரித்து அளித்திருக்கிற உரையை அப்படியே இந்த மன்றத்திற்கு ஆளுநர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அமைச்சரவைக் கருத்துக்கு மேல் தன்னுடைய கருத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடாமல் கண்ணியத்தையும் மரபையும் அவர் காப்பாற்றி இருக்கிறார். அதற்காக இந்த அவை ஆளுநருக்கு தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறது. பல இடங்களில் முதலமைச்சரைக் குறிப்பிட்டுப் பாராட்டும் வகையில் பேசி இருப்பதை ஒரு சில ஏடுகள் குறை கூறியிருக்கின்றன. ஆனால் அதுவும் மரபு வழியே நடைபெற்றிருக்கிறது என்பதால் ஆளுநரைக் குறை சொல்வது அர்த்தமற்றது என்று ஆகிவிட்டது.

இங்கிலாந்து நாட்டு பாராளுமன்ற நடைமுறையைத்தான் இங்கே நாம் பின்பற்றுகிறோம். அங்கே மன்னர் இருப்பது போல இங்கே ஜனாதிபதி, ஆளுநர் இருக்கிறார்கள். அரசு செய்யும் எந்தத் தவறுக்கும் அங்கே அரசரைப் பொறுப்பாக்க

முடியாது. ஏனெனில் The King can do no wrong என்ற நடைமுறையே அங்கே பின்பற்றப்படுகிறது. எனவே அரசர் மீதோ, ஆளுநரின் மீதோ அரசாங்கத்தின் தவறுகளுக்காக வழக்கு தொடுக்க முடியாது. அந்த அடிப்படையில் ஆளுநரின் உரையை நம்முடைய அரசாங்கத்தினுடைய உரையாகக் கொண்டு கருத்துக்களைக் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

1992 ஆம் ஆண்டு தமிழகத்தின் பொருளாதாரம் படிப்படியாக உயரவும், வறுமை அகலவும், ஏழை எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வில் வளம் காண வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்தை அடையவும் இந்த அரசு முழு மூச்சுடன் மிகச் சீரிய முறையிலே தொடர்ந்து பாடுபட்டு, வெற்றி காணும் என்ற நம்பிக்கையை ஆளுநர் உரையில் ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பது ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. சென்ற ஆண்டு ஆளுநர் நிகழ்த்திய உரையின் போது விலைவாசி உயர்வின் பாதிப்பிலிருந்து ஏழை எளிய மக்களையும், நடுத்தர வகுப்பினரையும் பாதுகாப்பதற்காக மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பு வழங்குமென்றும், பொது விநியோக முறையில் தற்போது காணப்படும் சீர்கேடுகளைக் களைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமென்ற உறுதி அளிக்கப்பட்டது. இந்த ஆளுநர் உரையிலும் அத்தகைய போக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. நாம் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கி இருப்பதையும், அதனால் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டிய ஆளுநர், இந்நிலையைச் சீர்படுத்தி பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்ற வழிகளில் நாட்டை திரும்பவும் இட்டுச் செல்லும் வகையில் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதைக் கோடிட்டு காட்டத் தவறவில்லை.

மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ளும் பொருளாதார சீர்திருத்தங்களாலும், சிக்கன நடவடிக்கைகளாலும் அடித்தளத்து மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற வகையில் முன்னெச்சரிக்கையாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டிசம்பர் 1991 மாதம் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்திப் பேசியதை ஆளுநர் உரை சுட்டிக் காட்டத் தவறவில்லை. நமது முதலமைச்சரைப் போன்று மற்ற சில முதலமைச்சர்களும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் பரிசிலனை செய்து மத்திய அரசு சில நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அரிசி, சர்க்கரை



போன்ற பொருள்களின் விலை உயர்த்தப்பட்டிருப்பதின் கார
ணத்தை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. நெல், கோதுமை,
கரும்பு ஆகியவற்றைப் பயிரிடும் விவசாயிகள் நிலையைக் கருதி
அவர்களுக்கு நியாயமான விலை வழங்க வேண்டுமென்று
கோரிக்கைக் குரல் எழும்பியது. அந்த அடிப்படையில் நெல்,
கரும்பு, கோதுமை ஆகியவற்றின் கொள்முதல் விலைகள் அதி
கரிக்கப்பட்டன. ஆனால் அவற்றின் விற்பனை விலையை
மாற்றி அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
தற்போதைய உயர்வு அந்த அடிப்படையில் தான் அமைந்திருக்
கிறது. இதிலே பாரதீய ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சிகளைச் சேர்ந்த முதலமைச்சர்கள் கூட கடுமையாக எதிர்க்க
வில்லை. நம்முடைய மாநிலத்தில் ஏற்கெனவே சத்துணவு,
மற்றும் இலவச வேட்டி, சேலை வழங்குவது போன்ற சமுதாய
நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் நிதிப் பற்றாக்
குறை, நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 11.05

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக
இருந்த போது, மதுக்கடைகளும் அனுமதிக்கப்பட்டிருந்ததால்
இதைத் தொடர்ந்து செயல்படுத்தினார். தற்போது மலிவு
விலை மதுக்கடைகள் மூடப்பட்டிருப்பதால், அரசாங்கத்திற்கு
வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள்
குறிப்பிட்டு இருக்கிறார். இருப்பினும் ஏழை மக்களின் இடர்பாடு
களைக் கருதி அவர்களின் சுமையைக் குறைக்கும் வகையில்
சாதாரண ரக அரிசி விலையை ஏற்றாமல் சமாளித்திருப்பதை
நான் வரவேற்கிறேன். அதற்காக அவர்களுக்குப் பாராட்டு
தலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது போலவே, மற்ற ரக
அரிசிகளின் விலைகளையும் கட்டுப்படுத்தவேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாண்டு ஏற்பட்டிருக்கும்
அமோக விளைச்சலும் அதற்குக் கைக் கொடுக்கும் என்று
நம்புகிறேன்.

மத்திய, மாநில அரசுகளின் பற்றாக்குறை மட்டுமே இந்த
ஆண்டு 20,000 கோடி ரூபாய்க்கு இருக்கும் என்று கணக்கிடப்
பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பற்றாக்குறை பட்
ஜெட்டைச் சமாளிக்க நோட்டு அச்சடிக்கப்பட்டு, புழக்கத்தில்
விடப்படுகின்றன. இதனால் பணப் புழக்கம் அதிகமாகவும்,
பொருள்கள் குறைவாகவும் இருக்கும் நிலை ஏற்படுகிறது. அதிக
மான பணப் புழக்கம், குறைவான பொருட்களை துரத்திக்
கொண்டு இருப்பதால், பொருள்களின் விலை ஏறுகிறது. நமது
ரூபாயின் மதிப்பு ஓரளவு குறைக்கப்பட்டிருப்பது உண்மைதான்.
ஆனால் யுகோஸ்லாவியா நாட்டில் 500 மடங்கு நாணய மதிப்பு
குறைப்பு போல் இல்லை. ரஷ்யாவின் ரூபிளுக்கு ஏற்பட்ட கதியும்
இங்கே ஏற்படவில்லை.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 பிப்ரவரி 7

ஆறாண்டுக் காலத்திற்குப் பிறகு இந்த ஆண்டு, சரியாகச்
சொல்ல வேண்டுமென்றால் 21.63 இலட்சம் ஹெக்டேர் நெல்
சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. குறுவை மற்றும் சம்பாவில்
மட்டும் இந்த அளவுக்குக் கொண்டு வர முடிந்திருக்கிறது. நவரை
பருவத்தில் இன்னும் நான்கைந்து இலட்சம் ஹெக்டேர் கொண்டு
வரப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நல்ல
மகசூலும் ஏற்பட்டிருக்கிறது. வேளாண்மை உற்பத்தியில்
முதல்வர் அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு நிகழ்த்தியிருக்
கின்ற சாதனையை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்
கிறேன். நடப்பாண்டில் அரிசி உற்பத்தியில் எப்போதும் இல்லாத
அளவுக்கு உயர் அளவாக 65.2 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும்,
மொத்த உணவு தானிய உற்பத்தி 90.45 இலட்சம் மெட்ரிக்
டன்னாகவும் இருக்கும் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்
போன்றே, கரும்பு மற்றும் பயறு வகைகளின் உற்பத்தி மிக
அதிகமாக இருக்கும் என்றும், பருத்தி உற்பத்தி 6 இலட்சம்
பேல் இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்துடன் மத்திய தொகுப்பிலிருந்து எப்போதும் இல்லாத
அளவுக்கு அதிகமான அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே,
அரிசி, பருத்தி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பண்டங்
களுக்கு பற்றாக்குறை இருக்க முடியாது. பதுக்கல், கள்ளக்
கடத்தல், கள்ள மார்க்கெட் போன்றவற்றால் உருவாக்கப்படும்
செயற்கையான பற்றாக்குறைதான் இருக்கும். விலைவாசி
கள் அந்த அடிப்படையில் தான் உயரும். இதைக் கட்டுப்படுத்
தும் முழு அதிகாரமும் இந்த மாநில அரசுக்கு இருக்கிறது.
அதைச் சரியான முறையில் பயன்படுத்தி, விலைவாசியை
கட்டுப்படுத்த முன் வர வேண்டும். பொது விநியோக முறையை
பலப்படுத்த வேண்டும். அதிலுள்ள குறைகளை நிவர்த்திக்க
வேண்டும். 12 கிலோ அரிசி என்று சொன்னால், அனை
வருக்கும் அந்த அரிசி ஒரே தடவையில் வழங்கப்பட வேண்டும்.
வருகின்ற புகார்கள் எல்லாம் அரிசி முழுமையாகப் போடப்பட
வில்லை என்று தான் வருகின்றன. அந்தப் புகார்களைக்
களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விலையேற்றம் என்பது பொது விநியோக முறையில் வழங்கப்
படும் அரிசி பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. வெளி மார்க்
கெட்டில் ஏற்பட்டிருக்கிற விலையேற்றம் தான் மக்களை வாட்டு
கிறது. எங்களுடைய மாவட்டத்தில் அரிசி ரூ. 12 வரை
விற்றது. பருப்பு வகைகள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்
களின் விலைகள் ஏறின. பதுக்கலை வெளியே கொண்டு வாருங்
கள். விலை குறையும். உற்பத்தி செய்யும் விவசாயிக்கு விலை
யேறவில்லை. ஆனால் நுகர்வோருக்கும் விலையேற்றப்பட்டி
ருக்கிறது. பதுக்கல் செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 பிப்ரவரி 7

பால் விற்பனை விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. திரா
விட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபோது, உற்பத்தி
யாளர்களுக்கு 55 காசு விலையை உயர்த்தியது. ஆனால்
உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் கலப்பின தீவனத்தின் விலை
கிலோ ஒன்றுக்கு 75 காசாகவும் உயர்த்தப்பட்டது. பால்
விற்பனை விலையை அப்போது அதிகரிக்கவில்லை. உண்மை
தான். ஆனால் பாலின் தரத்தை குறைத்தது. முன்பு ஸ்டாண்
டர்டு மில்க் என்ற பெயரால், 4.5 சதவீதம் கொழுப்புச் சத்
தும், 8.5 சதவீதம் இதர சத்துக்களும் அடங்கிய பால் லிட்டர்
5 ரூபாய்க்கு விற்கப்பட்டது. விலையேற்றத்திற்குப் பிறகு
அதுவே 4.5 சதவீதம் கொழுப்பு என்பதற்குப் பதிலாக 3
சதவீதம் கொழுப்புச் சத்தும், 8.5 சதவீதம் இதர சத்துக்களும்
கொண்ட பாலை 'டோன்டு மில்க்' என்ற பெயரால் லிட்டர்
5 ரூபாய்க்கு விற்பனை செய்தது. மூன்று சதவீதம் கொழுப்புச்
சத்தும், 8.5 சதவீதம் இதர சத்துக்களும் கொண்ட பாலுக்கு
உற்பத்தியாளர்களுக்கு ரூ. 3.60 காசு வீதம் தரப்படுகிறது.
இந்தப் பால்தான் இப்போது 6 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
ஒரு லிட்டருக்கு ரூ. 2.40 வித்தியாசம் இருக்கிறது. எனவே
உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்திக்
கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல்
வேறு மாநிலங்களை எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா
வில் பால் மொத்த கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு
ரூ. 5.45 காசு.

முற்பகல் 11-10.

குஜராத்தில் ரூ.6, ஆந்திரப் பிரதேசத்தில் ரூ.4.75, ஒரிசா
வில் ரூ. 5.39, உத்திரப் பிரதேசத்தில் ரூ. 5.18, மேற்கு வங்
கத்தில் ரூ. 5.14, ஐதராபாத்தில் நம்மைவிட 70 காசுகள்
அதிகமாகத் தருகிறார்கள். திருவனந்தபுரத்தில் 60 காசுகள்
அதிகமாகத் தருகிறார்கள். தமிழ்நாட்டில் பசும்பாலுக்கு
தரப்படுகிற விலை ரூ. 4.32. அது கூட
மிக அதிகமாகத் தரப்படுகிற விலை... 5.3 சதவீதம் கொழுப்புச் சத்து இருந்தால்தான் அந்த விலை
தரப்படுகிறது. இதிலே இதர சத்துக்கள் 7.9 சதவீதம் என்று
வந்துவிட்டால், 3 சதவிதம் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு
45 காசுகள்தான் தண்டனையாக அளிக்கப்படுகிறது. இந்தக்
கொடுமை வேறு எங்கேயும் இல்லை. இது அதிகாரிகள் செய்த
கோளாறு என்று கருதுகிறேன். இதைக் கவனிக்க வேண்டும்
என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் வரத்து கூட்டுறவுச் சங்கங்களிலே மிகவும் குறைந்து
கொண்டிருக்கிறது. 12 இலட்சம் லிட்டர்கள் வந்துகொண்
டிருந்த இடத்திலே சென்ற மாதம் வரையில் 9 இலட்சம் லிட்
டர்கள்தான் வந்திருக்கின்றன. இப்போது கொஞ்சம் அதி
கரித்திருக்கலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் மிகவும்

குறைந்திருக்கிறது. நேற்றுகூட அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே, கோவையிலே 70,000 லிட்டர்கள்தான் வருவதாகத் தெரிவித்தார்கள். முன்பு கோவை யூனியனுக்கு ஒரு இலட்சம் லிட்டர்கள் வரும். எனவே பால் உற்பத்தியாளர்களுக்கு நாம் அதிக விலையைத் தருவதன் மூலம் அதிகப் பாலைப் பெற முடியும். இப்போது வெளியே வாங்குபவர்கள் அதிக விலையைக் கொடுக்கிறார்கள். நாம் கொடுப்பதற்கும், வெளியே அவர்கள் கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லை. அவ்வளவு அதிகமாகத் தருகிறார்கள். ஆகவே நிச்சயமாக அவர்கள் வெளியேதான் அதிகமாக விற்பார்கள். அதற்கு மேலும் நாமும் ஊக்கம் அளிக்கும் வகையில் உற்பத்தியாளர்களுக்கு பாலுக்கு அதிக விலையைத் தரவேண்டும். அப்படி உற்பத்தியாளர்களுக்கு விலையை ஏற்றும்போது தயவு செய்து எருமைப் பால், பசும்பால் என்று பிரித்துவிடாதீர்கள். பசும்பாலுக்கும் விலை ஏற்ற வேண்டும், எருமைப் பாலுக்கும் விலை ஏற்ற வேண்டும். கொள்முதலில் எருமைப் பால் 5 சதவீதம்தான். எனவே விலையை ஏற்றும்போது எருமைப் பால், பசும்பால் இரண்டுக்கும் ஒரே சீராக விலையை ஏற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய அளவில் பொருளாதாரத் துறையில் உள்ள கட்டாய நிலையை முன்னிட்டும் நம்முடைய வெளிச்செலாவணி கையிருப்பு நிலைமையை முன்னிட்டும், இந்திய அரசு அறிவித்துள்ள புதிய தேசீய தொழில் கொள்கையின் அடிப்படையில், தாராளமயமாக்கும் அனுகூலத்தைப் பயன்படுத்தி மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது வரவேற்கத்தக்கதாகும். சட்டமன்றம் கூடுவதற்கான ஆளுநரின் அறிவிப்பு வந்ததற்குப் பிறகு இந்த அரசின் புதிய தொழில் கொள்கையை முதலமைச்சர் அறிவித்தார். தொழில் வளர்ச்சி தொடர்புள்ள எல்லா அம்சங்களைக் கொண்ட விரிவான கொள்கை விளக்கக் குறிப்பு தொழிலதிபர்கள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டது. ஆனால் ஆளுநர் உரையின் மூலமாக முதன் முதலில் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பெற்ற அந்த அவைக்கும், உறுப்பினர்களுக்கும் அந்த வாய்ப்பை இன்று வரை வழங்காதது வருத்தத்தை தருகிறது.

தொழில் துறையைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கத்தினுடைய முதலீடு 1969 ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது, 1989–90–ல் 5.2 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் மிகப் பெரிய தொழில்களான பாரத கனரக மின் தொழிற்சாலைகள் திருச்சியிலும், இராணிப்பேட்டையிலும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அதே போன்று நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு



நாட்டிலேயே மிகவும் முதல் தரமான தொழிற்சாலையாக கருதப்படும் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தில், மின்சாரம், உரம், எரிபொருள் அனைத்தும் உற்பத்தியாகின்றன. தற்போது ஜெயங்கொண்டத்தில் மிகப் பெரிய அளவில் நிலக்கரி வெட்டப்படவிருக்கிறது. கல்பாக்கம் அணு மின் நிலையம், ஆவடியில் இராணுவ தொழிற்சாலை, இராணுவ உடை தயாரிக்கும் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, மணலி உரத் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, மற்றும் அரவங்காடு, திருச்சி ஆகிய இடங்களில் துப்பாக்கித் தொழிற்சாலைகள் — ஆர்ட்னான்ஸ் பாக்டரீஸ்— சேலம் இரும்பாலை, காவிரி வட்டத்திலே எண்ணெய் எடுத்தல், இந்துஸ்தான் ஃபோட்டோ தொழிற்சாலை, ஊட்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் போன்ற சிறப்புமிக்க தொழிற்சாலைகள் எல்லாம் தமிழகத்திலே தொடங்கப்பட்டு விட்டன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்தியாவில் உள்ள பத்து பெரிய துறைமுகங்களில் இரண்டு நம்முடைய மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ள தொழில்கள் அனைத்தும் தமிழகத்திலே ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்திலே நீர் மின் நிலையங்கள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்டன. இனிமேல் நிறைவேற்றுவதற்கு இடமேயில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக, மத்திய அரசு, பொதுத் துறையில் புதிதாக எந்தத் தொழிலும் தொடங்கவில்லை. இனிமேலும் மத்திய அரசு பொதுத் துறையில் முதலீடு செய்யும் வகையில் புதிய தொழிற்கொள்கை அமையவில்லை. 40 ஆண்டுக் காலமாக ஒரு பாதையிலே நாம் நடந்து வந்தபோது, அந்தப் பாதைக்கு ஏற்ற சில அரண்கள், பாதுகாப்புகள் ஆகியவற்றை நாம் உருவாக்கினோம். வெளிநாட்டினர் நம்மோடு போட்டி போடக் கூடாது என்று எழுப்பப்பட்ட அரண்கள் நாம் அவர்களோடு போட்டி போட முடியாத வகையிலே தடுத்துவிட்டன. இன்று உலகம் ஒரு திசையில் செல்ல ஆரம்பித்துவிட்டது.

முற்பகல் 11–15

பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் புதிய தொழிற்கொள்கையையும், புதிய வர்த்தகக் கொள்கையையும், புதிய நிதிக் கொள்கையையும் அறிவித்து இருக்கிறார்கள். வர்த்தகத்தில் உள்ள 90 சதவீத கட்டுப்பாடுகளை, லைசென்ஸ் முறைகளை நீக்கிவிட்டார்கள். வரும் மார்ச் 31–ஆம் தேதிக்குள் எஞ்சியுள்ள அத்தனைக் கட்டுப்பாடுகளையும் நீக்குவதாக மத்திய அரசு அறிவித்து உள்ளது. 1947–ல் நடந்த யுகப் புரட்சியைப் போல் 1992–ல் நடப்பது பொருளாதார யுகப் புரட்சியாக அதைக் கருத வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நாடுகள் என்றால்
வேறு நாடுகளை எடுத்துக்கொள்வதைவிட, இங்கே அதிகமாக
இந்தக் கொள்கையை விமர்சித்துப் பேசியவர்கள் மார்க்
சிஸ்ட்டுகள். எனவே சைனாவை ஒப்பிட்டுப் பார்க்கலாம்
என்று நான் நினைக்கின்றேன். சைனாவினுடைய பரப்பளவு
மக்கள் தொகை, சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகள்,
நம்மைப் போலவே வேளாண்மையிலே அதிக அக்கறை உள்ள
நாடு என்கிற முறையிலே இந்தியாவோடு சைனாவை ஒப்பிட
லாம். உலகத்தோடு இசைந்து வாழ சைனா 1983-லிருந்து
முடிவு எடுத்துவிட்டது. சைனா ஒரு கம்யூனிச நாடு தான்.
1983-ஆம் ஆண்டிலே இந்தியாவினுடைய ஏற்றுமதி 13 பில்லி
யன் டாலர். ஒரு பில்லியன் என்பது நூறு கோடி. சைனா
வினுடைய ஏற்றுமதியும் அந்த ஆண்டில் 13 பில்லியன் டாலர்
தான்; குறைவாகத்தான் இருந்தது. கடந்த ஆண்டு இந்தியா
வினுடைய ஏற்றுமதி 18 பில்லியன். ரூபாய் கணக்கிலே
சொல்லவேண்டுமென்று சொன்னால், 46 ஆயிரத்து 800
கோடி ரூபாய்; கொஞ்சநஞ்சம் வேறுபாடு இருக்கும். அவ்
வளவுதான். இது மகத்தான வளர்ச்சிதான். இதை நான்
மறுக்கவில்லை; சந்தேகமே கிடையாது. 8 ஆண்டுகளிலே
13 பில்லியனிலிருந்து 18 பில்லியனாக உயர்ந்ததாக நம்மை
நாமே மெச்சிக்கொள்ளலாம். ஆனால், அதே காலக்கட்டத்தில்
சைனாவின் ஏற்றுமதி 13 பில்லியனிலிருந்து 54 பில்லியனாக
அதாவது ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 400 கோடி ரூபாய்
அளவுக்கு உயர்ந்துவிட்டது. கம்யூனிசம் பேசும் சைனா, அமெ
ரிக்காவிடம் மட்டும் செய்துள்ள ஏற்றுமதி—இறக்குமதி வர்த்த
கத்தில், சைனாவுக்கு உபரியாகக் கிடைத்தது 10 மில்லியன்
டாலர். இங்கேயுள்ள மார்க்சிஸ்ட்டு உறுப்பினர் நேற்று
கடுமையாக விமர்சித்தார். அவருக்கு நான் சொல்ல விரும்பு
கிறேன், கம்யூனிச நாடான சைனாவை மார்க்ஸோ, ஏங்கல்
ஸோ, லெனினோ பாதிக்கவில்லை. இந்தியாவிலேதான்
பல பேருக்கு இரவிலே, பகலிலே அவர்கள் வந்து பாதித்துக்
கொண்டு இருக்கிறார்கள். சீனப் பிரதமர் லீ பொங்குக்கு
மார்க்ஸோ, லெனினோ எச்சரிக்கை விடவில்லை. நம்முடைய
நாட்டிலேதான் நம்முடைய தோழர்களுக்குத்தான் நாள்
தோறும் எச்சரிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சைனாவில் அந்நிய முதலீடு இந்த ஆண்டு 1 இலட்சத்து
56 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே வளர்ந்துள்ளது. சைனா
விலே அந்நிய மூலதன உதவியுடன் 37 ஆயிரம் கூட்டுத்துறை
நிறுவனங்கள், ஜாயிண்ட் செக்டார் நிறுவனங்கள் தொடங்கப்
பட்டுள்ளன. மா சேதுங் பிறந்த மண்ணிலேதான் இன்றைக்கு
அமெரிக்க முதலீடு, அமெரிக்க உறவு. சீனாவிலே சில மாநிலங்
களை 'ஃபிரீ டிரேட் ஜோன்' அறிவித்து இருக்கிறார்கள்.
சுதந்திர வர்த்தகப் பகுதிகளாக மாற்றி உள்ளார்கள். முன்பு
தமிழகத்திலே மேடைகளாக இருந்தாலும், போஸ்டர்களாக



இருந்தாலும் அல்லது கோஷங்களாக இருந்தாலும், மார்க்
சிஸ்ட்டுகள் முடிக்கும்போது சீனாவைப் பார், சீனாவைப்
பார் என்றுதான் சொல்லுவார்கள். நாங்கள் இப்போது
சீனாவைப் பார்க்கிறோம், அவ்வளவுதான்.

இன்று பாரதப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்ம ராவ் அவர்
கள் இந்தியாவிலுள்ள 85 கோடி மக்களின் பிரச்சினைகளை
தன் தோள்களிலே சுமந்து, அவற்றைத் தீர்ப்பதற்குக் கடும்
முயற்சி எடுத்து வருகிறார். இந்த உலகமே அவரைப் பாராட்டு
கிறது. இந்தியா, இன்று பொருளாதாரத் துறையிலே ஒரு
யுகப் புரட்சியை நடத்தி வருகிறது. உலக நாடுகள் இசைந்து
வாழக்கூடிய புதிய பொருளாதாரப் பாதையைத் தேர்ந்
தெடுத்துள்ளன. நமக்கு புதிய தொழில் நுட்ப அறிவும் அவசிய
மாகத் தேவைதான். நம்மிடத்திலே தொழில் நுட்ப அறிவு
இருக்கிறது. யாரும் அதை மறுக்கவில்லை. ஆனால், இந்தத்
தொழில் நுட்ப அறிவைக் காட்டிலும் உலகில் இருக்கிற பிற
நாடுகளில், வளர்ந்துவிட்ட நாடுகளிலே பெரிய மாற்றம் வந்து
விட்டது. எனவே, இப்போது புதிய மூலதனத்தை வரவழைக்
கின்ற நேரத்திலே தொழில்நுட்ப அறிவு கிடைக்கிறது. மூல
தனம் கிடைக்கிறது, இளைஞர் சமுதாயத்திற்கு வேலை
வாய்ப்புக் கிடைக்கிறது. ஆக, பொருளாதாரம் மேம்பாட்
டுக்கு வழி கோல, நாம் வழி காண்பதில் விவேகம் இதற்கு
இருக்க வேண்டியது அவசியம். இந்த நாடு யாருக்கும் சந்தைக்
காடாக மாறாது என்று பாரதப் பிரதமர் திரு. பி. வி. நர
சிம்ம ராவ் அவர்கள் மிகத் தெளிவாக அறிவித்து இருக்கிறார்
கள். எனவே அந்தப் பயம் யாருக்கும் தேவை இல்லை.

புதிதாக தொழில் தொடங்குபவர்களை ஊக்குவிக்கும்
வகையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள தொழிற்
கொள்கை வரவேற்கத்தக்கது ஆகும். நடுத்தர மற்றும் பெரிய
தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு மட்டுமே புதிய தொழிற்
கொள்கை ஊக்கம் அளிக்கிறது. அதிகமான தொழிலாளர்
களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் சிறிய தொழிற்சாலை
கள் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதாக
நம்முடைய புதிய தொழில் கொள்கை அமையவில்லை. அதைப்
போக்குகிற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பல நலி
வடைந்து இருக்கின்றன. அதிக லாபம் ஈட்டக் கூடிய வகை
யில் அவற்றின் நிருவாகங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்
டும். பொதுத்துறை நிறுவனங்கள் நலிவுற்றால் தொழிலாளர்
கள்தான் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்
என்பது சரியல்ல.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 பிப்ரவரி 7
முற்பகல் 11-20

அரசாங்கத்தின் நிதித்துறை மற்றும் தொழில்துறையின் சார்பில்
இயக்குநர்கள் இத்தகைய துறைகளுக்கு நியமிக்கப்படுகிறார்
கள். அவர்களை மீறி எந்த முடிவும் எடுக்கப்படுவதில்லை. அவர்
களுடைய நிர்வாகக் கோளாறுகளால் ஏற்படும் இழப்புக்கு
அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும்.

தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் ஏற்பட்ட மிகப்
பெரிய ஊழலை தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின. ஆனால்
இன்னும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கும்ப
கோணம் சோழன் போக்குவரத்து கழகத்தில் நடைபெற்ற
மோசடியை, ஊழலை தொழிற்சங்கங்கள்தான் கண்டுபிடித்துக்
கொடுத்தன. ஆனால் அது சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரிகள்
ஊதிய உயர்வும், பதவி உயர்வும் பெற்று தொடர்ந்து இன்றும்
பணிகளை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகம்
கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அதிகாரிகள் தங்களுடைய உற
வினர் பெயரில் காண்ட்ராக்ட் எடுத்து கொள்ளையடிக்கிறார்கள்.
இதிலே தொழிலாளர்கள் எடுத்துரைத்தும் நடவடிக்கையெடுக்க
வில்லை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, சோழன் போக்குவரத்துக்
கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி 1977–78 முதல் 1983–84 வரை
நடைபெற்றது ஆகும். அதற்குக் காரணமான அலுவலர்கள் மற்றும்
உள் தணிக்கையாளர்கள் மீது சட்டப்படி தக்க ஒழுங்கு
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : துணைத் தலைவர்
அவர்களே, நான் இப்போது சொன்ன விஷயங்கள் எல்லாம்
பழைய சம்பவங்கள். நிச்சயமாக நான் இப்போது நடைபெற்ற
தாகச் சொல்லவில்லை. அந்த அதிகாரிகள் மீது இன்றுவரை
யில் நடவடிக்கையெடுக்கப்படவில்லை என்றுதான் நான்
சொல்கிறேன். எனவே, பொதுத் துறை நிறுவனங்களில் நியமிக்கப்
படும் அதிகாரிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பொறுப்புள்ள
திறமையான வேறு நிர்வாகிகளை எப்படி தேர்ந்தெடுத்து நிய
மிக்கலாம் என்பதற்கு வழிவகைகளை காணவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இது அதிகாரிகளின் ராஜ்யமாக மாறாமல்
பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்
களை கேட்டுக்கொள்கிறேன்.



1992 பிப்ரவரி 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

முதல்வர் அவர்களுடைய சிரமங்கள் எனக்கு புரியும். பாது
காப்பு பெற வேண்டியவர்களில் அவர்கள் ' இசட் ' கேட்டகிரியில்
வருகிறார்கள் என்றாலும் எம்.எல்.ஏ.க்களை—ஆளுங்கட்சி
எம்.எல்.ஏ.க்களையும் சரி, எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களையும்
சரி அவர்கள் சந்திக்க வேண்டும். அதற்கான சிறப்பு ஏற்பாடுகளை
செய்துகொள்ள வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்
கிறேன். நாட்டு நடப்புகளை உங்களுடைய கவனத்திற்கு அவ்வப்
போது கொண்டுவர இது பயன்படும் என்று நான் நம்புகிறேன்.
பொதுத்துறை நிறுவனங்களில் எவ்வளவு நஷ்டம் வந்தாலும்
மூடக்கூடாது என்று வாதிடப்படுகிறது. அத்தகைய நிறுவனங்
களை தொடர்ந்து நடத்துவதற்கு மக்களுடைய வரிப்பணம் பட்
ஜெட் மூலமாக வழங்கப்படுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.
ஆண்டு ஒன்றுக்கு பொதுத் துறை நிறுவனங்களில் டணியாற்று
கின்றவர்களுக்கு சம்பளமாக வழங்குவதற்கு மட்டும், ரூ. 1,500
கோடி ரூபாய்க்கு வரிவிதிப்பு செய்ய வேண்டியிருக்கிறது. அவர்
களுக்கு பஞ்சப்படி வழங்குவதற்கு மட்டும் 800 கோடி ரூபாய்
வரி விதிக்க வேண்டும். இப்படி ஆண்டுதோறும் 2,300 கோடி
ரூபாய் நாட்டு மக்கள் தலையில் கட்டுவது சரிதானா என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டும். ஏற்கனவே பொதுத் துறை நிறுவனங்
களில் ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் முதலிடு செய்து
விட்டு மூன்று சதவீதம் வருமானம் கூட வராத நிலை இருக்கிறது.
அதை மாற்றுகிற வகையில் மத்திய அரசின் பொருளாதாரக்
கொள்கையும், மாநில அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை
யும் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

திருத்தப்பட்ட காட்கில் விதிமுறைகளின்படி மாநிலங்களுக்
கான 20 சதவீத நிதியுதவி பெற நம்முடைய மாநிலம் தகுதி
பெறவில்லை என்று ஆளுநர் உரை சுட்டிக்காட்டி இருக்கிறது.
எனவே 1982 முதல் 1985 வரையில் நமது மாநிலத்தில் நபர்
வாரி வருமானம் தேசிய சராசரி வருமானத்தை விட குறைவாக
இருந்து வந்தது. ஆனால், அதற்கு பின்னால் நமது வருமானம்
தேசிய சராசரி வருமானத்தை விட அதிகமாகச் சென்று விட்டது.
திருத்தப்பட்ட காட்கில் விதிமுறைகளின்படி பிரணாப் பார்முலா
படி கூடுதலான நிதியாதாரத்தை திரட்டுகிற மாநிலங்கள் அதிக
படியான நிதியொதுக்கீட்டை பெறுகின்றன. அடிஷனல்
ரிசோர்சஸ் மொபிலைசேஷன் மூலம்தான் அதிகமாக நிதி
யொதுக்கீடு கிடைக்கிறது. தேசிய வளர்ச்சிக் குழுவில் ஒப்புக்
கொள்ளப்பட்ட விதிமுறைகள்தான் இது. நம்முடைய மாநிலத்
தில் இந்த அதிகமான நிதியாதாரத்தைத் தேடுகிற
முயற்சியில் முதல்வர் அவர்கள் வெற்றி காண்பார்கள் என்று
நிச்சயமாக நான் நம்புகிறேன்.

நேற்றையதினம் திட்டக்குழு இந்த ஆண்டுக்கு நாம் கேட்டுள்ள
படி 1,750 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக முதலமைச்சர்
அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். விவாதத்தின் துவக்க

நாளன்றே நமக்கு ஒதுக்கப்பட்ட நிதி இறுதியானதல்ல. ' இட் இஸ் நாட் பைனல்' என்று பிரணாப் முகர்ஜி அவர்கள் சொன்னதை குறிப்பிட்டேன். தமிழகத்தின் கோரிக்கையை திட்டக்குழு பரிவு டன் பரிசீலிக்கும் என்று திட்டக் குழுவின் துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறியதை நான் இங்கே குறிப்பிட்டேன். நிச்சயமாக அதிகமான நிதிகிடைக்க எல்லாவகையிலும் உங்களுக்கு ஒத்துழைப்பாக இருப்போம் என்பதை நான் இங்கே குறிப்பிட் டேன். திட்டக் குழு துணைத் தலைவருக்கும், பாரதப் பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கும் நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள். நாங்களும் உங்களோடு சேர்ந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்பகல் 11-25

மாநிலத்திலே காவல்துறையை நவீனப்படுத்தவும், தென் பகுதியிலுள்ள கடல் எல்லைகளைக் காக்கவும், போதுமான நிதி உதவியை கூடுதலாக மத்திய அரசிடம் கோரியிருப்பது நியாயமான ஒன்றுதான். அந்தக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு அதிகமாக நிதி தரவேண்டும் என்று நாங்கள் கேட்டு கொள்கிறோம் இந்தப் பேரவையின் வாயிலாக நான் கேட்டு கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில், இந்த அரசுடன் எங்களுக்கு முழுமையான உடன்பாடு உண்டு. மது அருந்துவதை ஒரு சமூக கேடாகக் கருதி, முழு மதுவிலக்கை இந்த மாநிலத்திலே அமல்படுத்தியதே, முன்பு இருந்த காங்கிரஸ் அரசு கள் தான் என்பதை இந்த மாமன்றத்தின் சவனத்திற்குகொண்டு வர விரும்புகிறேன். கடுமையான நிதி நெருக்கடியும், பற்றாக் குறையும், நிலவும் இன்றைய சூழ்நிலையில் நிதி இழப்பைப் பெரிதாகக் கருதாமல், மக்களின் நல்வாழ்வையே முக்கியமாகக் கருதி, உயர்ந்த நோக்கத்தோடு இந்த அரசு மதுக்கடைகளை மூடியதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த இழப்பை ஈடுகட்டும் முறையில், மத்திய அரசு உதவிக்கு வர வேண்டும் என்பதை, தேசிய வளர்ச்சிக் குழு, திட்டக்குழு போன்றவற்றில், பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ள நம் முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கு வலியுறுத்திட வேண்டு மென கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய முயற்சிகளுக்கு நாங்கள் எல்லா வகையிலேயும் உறுதுணையாக இருப்போம் என் கிற உத்தரவாதத்தினை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் நெறிகளாக பல நல்ல அம்சங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு அளிப்பது, நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டத்தை அமுல்படுத்துவது, 14 வயது வரை யுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பது, மக்களின்



வாழ்க்கைத் தரத்தையும் உணவுத் தரத்தையும் உயர்த்துவது, சுற்றுப்புறச் சூழ்நிலையையும் காடுகளையும் பாதுகாப்பது, மற்றும் உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது, பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவது, உடல் ஆரோக்கியத் தைக் கெடுக்கும் மது வகைகளை உட்கொள்வதைத் தடுக்கும் வகையில் மது விலக்கை அமுல்படுத்துவது, போன்றவற்றை அரசு களுக்கு வழிகாட்டும் நெறிகளாக அரசியல் சட்டம் வழங்கி யிருக்கிறது. அவற்றுக்கு சட்ட அந்தஸ்து கிடையாது என்பதையும் அவற்றை அமுல்படுத்தாவிட்டால், நீதிமன்றத்திற்குச் சென்று பரிகாரம் கேட்க முடியாது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் கள் நன்கு அறிவார்கள். சுருங்கச் சொன்னால், அவை நெறி முறைகளே தவிர, சட்ட விதிகள் அல்ல. அது ஒரு வைட்டமின் டேப்ளட். நாம் உடல் ஆரோக்கியம் கருதி, தேவையென்றால், அதைச் சாப்பிடலாம். மருந்து அல்ல. கண்டிப்பாக அதை உட்கொண்டே தீரவேண்டும் என்ற மருந்து அல்ல.

காவிரி நீர்த் தகராறைப் பொறுத்தவரையில், நம்முடைய கோரிக்கையை ஏற்று, நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசு கெஜட்டில் வெளியிட்டது. இவ்வாண்டு நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரும் தங்கு தடையின்றி கிடைத்துக் கொண்டிருக்கிறது. இருப்பினும் கர்நாடக மாநிலத்தில் உள்ள விவசாயிகள் மத்தியில் தேவையற்ற ஒரு அச்ச உணர்வு ஊட்டப் பட்டு வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனி சாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள் பேசுகிறபோது, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில், நமக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது, கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கிறதாகச் சொல்கிறார்களே, கர்நாடக அரசு அப்படி ஒன்றும் வழங்கவில்லையே. அப்படிப்பட்ட நிலையில், இப்படி ஒரு தவறானத் தகவலை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> அது தவறான தகவல் அல்ல. அந்த அரசு வழங்கித்தான் நமக்கு தங்குதடையின்றி இந்த ஆண்டு, தண்ணீர் வந்திருக்கிறது. நீங்கள் ஏதாவது பேசி, அதைக் கெடுத்து விடவேண்டாம். அங்கு சுமுகமான உறவு ஏற்பட்டு, நமக்கு அது முறையாக கிடைக்க வேண்டும் என்பதற் காகத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். அதிலே ஏதாவது பேசி நீங்கள் கெடுத்துவிட வேண்டாம். அங்கே ஏற்கனவே என்ன பிரச்சினை என்றால், 205 டி.எம்.சி. தண்ணீரை நமக்கு விட்டதற்குப் பின்னாலேதான் அவர்களுக்கு மற்ற தண்ணீர்

கிடைக்கும் என்கிற ஒரு எண்ணத்தை, பிரச்சாரத்தை அங்கே இருக்கிறவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். இடைக்காலத் தீர்ப்பின்படி நமக்கு முதலிலே 205 டி.எம்.சி. தண்ணீர் விட்டுவிட வேண்டும். அதற்குப் பிறகுதான் ஒரு சொட்டு தண்ணீர் கூட அவர்களுக்கு கிடைக்கும் என்கிற ஒரு எண்ணத்தை, அங்கேயிருக்கிற விவசாயிகள் மத்தியிலே ஒரு தரப்பினர் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். எனவேதான், தண்ணீர் வருவதற்கு வழிகாண வேண்டுமே தவிர, மேலும் மேலும், பிரச்சினையைப் பெரிதுபடுத்தக் கூடாது என்ற நோக்கத்தில் சொல்லுகிறேன். இப்போது தண்ணீர் கிடைத்திருப்பது உண்மை. மேலும் தொடர்ந்து அதுபோல, நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேனே தவிர...... (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இடைக்காலத் தீர்ப்பின்படி, நமக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, தண்ணீர் கிடைக்காத நேரத்தில் கிடைத்திருப்பதாக ஒரு சூழ்நிலையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> அடுத்த கட்டமாக நான் என்ன சொல்வேன் என்றால், அதிகமாக வந்துவிட்டது என்று சொல்வேன். அது வேண்டாம் என்பதற்காகத்தான் இவ்வளவு நிதானமாக நான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். அது வேண்டாம். அது தேவையில்லை என்பதற்காகச் சொல்கிறேன். அங்கேயிருக்கிற பதட்டத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குத் தண்ணீர் வரவேண்டும். ஆண்டுதோறும் தண்ணீர் வரவேண்டும். இது இடைக்கால ஏற்பாடு மட்டுமல்ல. நிரந்தரமான ஏற்பாடாக அது வருகிற நேரத்திலே, நமக்கு அது சாதகமாக வரவேண்டும். என்பதற்காக நான் சொல்கிறேன். நான் பழைய கதைகளை நிறைய பேசமுடியும். என்ன தவறு இங்கே ஏற்பட்டது என்பதை என்னால் சொல்ல முடியும். 1968-லே, 1970-லே, 1972-லே, 1974-லே என்ன செய்து கொண்டு இருந்தார்கள் என்பதை என்னாலே, இந்த அவையிலே பேச முடியும். யார் தவறு செய்தார்கள்? ஹேமாவதி அணையைக் கட்டுவதற்காக நான் தடையாக இருக்க மாட்டேன் என்று இதே அவையிலே பேசியவர்கள் யார் என்பதை என்னாலே சொல்ல முடியும். இதே அவையிலே அன்றைய முதல்வர் பேசியிருக்கிறார். ஹேமாவதி அணையைக் கட்டக் கூடாது என்று நான் சொல்லமாட்டேன். அவர்கள் எவ்வளவு அணைகளை வேண்டுமானாலும் கட்டிக்





கொள்ளட்டும் என்று சொன்னவர், அன்றைய முதல்வர், இங்கே இருந்த திராவிட முன்னேற்றக் கழக முதல்வர் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

முற்பகல் 11-30

இங்கே இதே அவையிலே கருத்திருமன் தனிக் கேள்வி கேட்டிருக்கிறார். மேலவையிலே என். ஆர். தியாகராஜன் கேள்வி கேட்டிருக்கிறார். அவையெல்லாம் பதிவாகியிருக்கிறது. எங்கேயும் போய்விடவில்லை. அவர் சொல்லியிருக்கிறார். ஹேமாவதி அணையை தாராளமாக கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். ஹேமாவதியோடு நின்று விடவில்லை, கபினியில் கட்டிக் கொண்டார்கள்; அதற்குப் பிறகு ஹேரங்கியில் கட்டிக் கொண்டார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அதற்குப் பதிலாக அதற்கு முன்பு ஒரு திட்டம் இருந்தது. ஏன் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை? ஒகனேக்கல்லிலே நீர் மின் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமென்றால், இரண்டு பேருக்கும் மின்சாரம் சமமாக மின்சாரம் என்றுசொல்லியிருந்தோம். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணர்ச்சி வசப்பட்டு ரொம்ப பின்னாலே போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேலும் சொல்லுகின்றபோது எதையும் கெடுத்து விடவேண்டாம் என்று சொன்னார்கள். அதே அடிப்படையிலே தொடர்ந்து பேசுவது நல்லது என்று கருதுகின்றேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> நான் அதை விட்டு விடுகிறேன். அதிலே ஒரு சர்ச்சையை ஏற்படுத்தி, அரசியல் லாபம் காணவேண்டுமென்று நான் எப்போதும் நினைக்க மாட்டேன். நமக்கு தண்ணீர் வரவேண்டுமென்பது தான் முக்கியமே தவிர, சர்ச்சை வரவேண்டும், அதிலே நமக்கும் கொஞ்சம் லாபம் கிடைக்க வேண்டுமென்று நான் நிச்சயமாக நினைக்க மாட்டேன் என்ற உறுதியை அளிக்கின்றேன். அங்கே பதற்றம் நிலவுகின்றது. அதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏன் அந்த பதற்றம்? உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காது என்று அவர்கள் சொல்கிறார்கள். சொல்கின்றவர்களுடைய வாதங்களை உங்களிடத்திலே தனியாக வேண்டுமானால் சொல்கிறேன். அது கூட இங்கே சொல்வது முறையாக இருக்காது. அவர்கள் என்ன

சொல்கிறார்கள்? ஏன் அங்கே அச்ச உணர்வு வருகிறது என்று நான் இங்கே சொல்வது முறையாக இருக்காது. அது பத்திரிகையிலே நாளைய தினம் வரும். அங்கேயே பேசியிருக்கிறார்கள் என்று வரும். ஆகவே அதெல்லாம் வேண்டாம். அந்த வாதம் வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் இங்கே பேசுகின்ற சில வார்த்தைகளால் கர்நாடக மாநிலத்தில் மேலும் பதட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கும் இல்லை. ஆனால் இங்கே பேசுவதெல்லாம் இங்கே பதிவாகின்ற காரணத்தால், ஒன்றைத் தெளிவுபடுத்துவது என் கடமை என்றே கருதுகின்றேன். இந்த ஆண்டு காவிரியில் தமிழகத்திற்கு நிறையவே தண்ணீர் வந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் வெள்ளப் பெருக்கால், உபரி தண்ணீர்தான் இங்கே வந்திருக்கிறதே தவிர, கர்நாடக மாநில அரசு இதுவரை தண்ணீர் திறந்துவிடவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்றே கருதுகின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் அவர்கள் இரண்டு பேரும் பேசியதற்குத்தான் பதில் சொன்னேனே தவிர, இதை சர்ச்சையாக்கக் கூடாது என்று நான் இப்போதும் நான் நினைக்கிறேன். இன்னும் நிச்சயமாக அங்கே பதற்றம் இருக்கிறது. இங்கே அதை எல்லாம் பேசுகின்ற காரணத்தால் தமிழ் மக்கள் மீது அங்கே தாக்குதல் தொடுக்கப்பட்டிருக்கிறது. கசப்பு உணர்வு அங்கே வளர்த்து விடப்பட்டிருக்கிறது. காலாகாலமாக காவிரி நீர் மடியினிலே தவழ்ந்த கன்னட தமிழ் சகோதரர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்கின்ற நிலைமை அங்கே உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல அந்த நிலைமைகள் அங்கே ஏற்பட்டபோது, தமிழர்கள் மீது தாக்குதல் ஏற்பட்ட போது டிசம்பர் 26 ஆம் தேதி மதியம் நான் பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்தேன். சந்தித்து அவரிடத்திலே அங்கே நடைபெறுகின்ற கொடுமையான நிகழ்ச்சிகளை எடுத்துச் சொன்னேன். உடனடியாக தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இந்தப் பிரச்சினைக்கும் ஒரு நிரந்தரமான தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நான் சந்தித்த அன்று மாலையே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் பிரதமரோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டார்கள். நான் கேட்டுக்கொண்டபடி அன்று இரவே அறிவிப்பு வந்தது. மத்திய ரிசர்வ் போலீஸ் அந்தப் பகுதிக்கு அனுப்பப்படுவார்கள் என்ற செய்தி அன்று மாலையே வந்தது. நான் அத்தோடு நிற்கவில்லை. கோவை மாவட்டத்



திற்கும், பெரியார் மாவட்டத்திற்கும் ஏராளமானவர்கள் அங்கே இருந்தவர்கள் எல்லாம் அங்கேயிருந்து ஓடி வரவேண்டியிருந்தது. முதல் தாக்குதலிலே அவர்கள் அதிகமாக பாதிக்கப்படவில்லை. முதல் தாக்குதல் பெங்களூரிலும், மாண்டியாவிலும் நடைபெற்றது. அது டிசம்பர் 13 ஆம் தேதி. 23 ஆம் தேதிக்குப் பிறகு, 25, 26 ஆம் தேதிகளில் நடைபெற்ற சம்பவங்களிலே பாதிக்கப்பட்டவர்கள் அந்த இரண்டு மாவட்டங்களிலிருந்து ஏராளமானவர்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் திரும்பிப் போகாமல் இருக்க முடியாது. அந்த இக்கட்டான சூழ்நிலையும் இருக்கிறது. பெரும்பாலானவர்கள் விவசாயிகள். இங்கே இருக்கின்ற அனைத்தையும் விற்றுவிட்டு அங்கே போய் காடு, காணி என்றெல்லாம் வாங்கி, அதை வளம் கொழிக்கும் பூமிகளாக மாற்றியிருக்கிறார்கள். நல்ல விவசாயம், வேளாண்மை அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்தனை பேரையும் நாம் இங்கே வைத்துக் கொண்டு அவர்களுக்கு வாழ்வு அளிக்க முடியுமா என்றால் வாழ்வு அளிக்க முடியாது. அவர்கள் அங்கே போயாக வேண்டும். விளைச்சல் என்று பார்த்தால் அற்புதமான விளைச்சல். சென்று பார்க்கின்ற இடங்களிலெல்லாம், அது பருத்தியாக இருந்தாலும், கரும்பாக இருந்தாலும், மஞ்சளாக இருந்தாலும், வெங்காயமாக இருந்தாலும், நம்முடைய பகுதியிலே கூட அவ்வளவு நல்ல விளைச்சல் ஏற்படும் என்று சொல்ல முடியாது. அவ்வளவு அற்புதமான விளைச்சல் அங்கே இருக்கிறது. காடுகளில் அவ்வளவும் மகசூலுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. பருத்தி எடுக்க வேண்டிய நேரம், கரும்பு வெட்ட வேண்டிய நேரம், மஞ்சள் மகசூலுக்கு காத்துக் கொண்டிருக்கிறது. நான் போய் பார்த்த போது அந்தப் பகுதிகள் எல்லாம் காய்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஏதோ ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். ஏற்பாடு செய்யவில்லை என்று நான் சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும், பூமிக்கு உரியவர் இல்லாத நேரத்தில் என்ன ஏற்பாடு செய்ய முடியும்? எனவே அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும். அந்த மக்கள் அங்கே போக வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தின் காரணமாக, நான் மைசூர் மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். மைசூர் மாவட்டத்திலே முதல் நாள் ஜனவரி 9-ல் கொள்ளேகாலம், டி. நர்சிபுரா, மைசூர் ஆகிய மூன்று தாலுக்காக்களையும் நான் பார்வையிட்டேன்.

முற்பகல் 11-35

இரண்டாவது நாள் நஞ்சன்கூடு, சாம்ராஜ்நகர், குண்டலுபட்டு போன்ற பகுதிகளுக்கு நான் சென்றிருந்தேன். மைசூர் பகுதியில் இந்த 5 தாலுக்காக்கள்தான் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட தாலுக்காக்கள். இன்னொன்று எச். டி. கோட்டே அங்கு நான் செல்லவில்லை. செல்ல முடியவில்லை என்னால். ஆனால் அவ்வளவு பகுதிகளுக்கும் நான் நேரிலே சென்று பார்த்த போது ஒரே முறையைத்தான் பின்பற்றி இருக்கிறார்கள் என்பது

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 பிப்ரவரி 7

தெரிந்தது. அங்கே வாழுகின்றவர்கள் பெரும்பாலும் விவசாயி
களாக இருந்தாலும், விவசாய தொழிலாளர்களாக இருந்தாலும்,
கட்டிட தொழிலாளர்களாக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்
தாலும் நம்மவர்கள் பெரும்பாலும் தனித்தனி வீடுகளிலே சாலை
களிலே குடியிருக்கிறார்கள். அவர்கள் மீது தாக்குதல் நடத்து
வது வெகு சுலபம். எப்படி தாக்குதல் நடைபெற்றது என்றால்
ஒரு வேடிக்கை பார்க்கின்றோம். ஒரு சிறிய கும்பல் வரும்,
வந்து ஓடிவிடுங்கள் பெரிய கும்பல் வந்துக் கொண்டிருக்கிறது
என்று சொல்லி விரட்டுவார்கள். பழைய காலத்திலே நம்மு
டைய அவை முன்னவர் அவர்கள் சொல்வார்கள். போர்
முறையிலே வெட்சி முறை என்ற ஒரு முறை உண்டு. முதலில்
தண்டோரா போடுவார்கள். படை உள்ளே நுழைவதற்கு
முன்னால்' களம் அமைப்பதற்கு முன்னால் தண்டோரா போடு
வார்கள். ''ஆவும் பார்ப்பன மாக்கள், பெண்டிர், நோயுற்
றோர், குழந்தைகள், முதியோர் ஆகியவர்கள்'' வெளியேறிவிட
வேண்டும் என்று தண்டோரா போடுவார்கள். தண்டோரா
போட்ட காரணத்தினாலே மக்கள் செய்தி அறிந்து வெளியேறி
விடுவார்கள். ஆனால் பசுக்களுக்கு புரியாது அல்லவா, தெரி
யாது அல்லவா, எனவே பசுக்களை கவர்வார்கள். ஆநிரை
கவர்தல் என்று சொல்லுவார்கள். அதைப் போல அங்கே
ஆநிரை கவர்தல் போன்று தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.
அவர்களை வெளியே போங்கள் என்று விரட்ட வேண்டியது.
விரட்டியதற்குப் பிறகு அந்தச் சாலையிலே அந்த வீடுகளிலே
இருக்கும் அத்தனை பொருள்களையும் கொள்ளை அடிக்க
வேண்டியது. பிறகு முடிந்தால் கதவு போன்ற நிலைகளை
தோண்டி எடுக்க வேண்டியது. பிறகு அந்த வீட்டிற்கு நெருப்பு
வைத்து விடுவது. இதே மாதிரி ஒரே மாதிரியான பேட்டர்ன்
னில் முழுவதுமாக நடைபெற்றிருக்கிறது. சரி இதற்கும்
காவிரிக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்றால் இல்லை
அந்தப் பகுதிகளிலே பிரச்சினைக்கு உள்ளான பகுதிகளுக்கும்.
காவிரிக்கும் சம்பந்தமே கிடையாது. மைசூர் தாலுக்கா
வேண்டுமானால் சம்பந்தப்பட்டிருக்கலாம், கொள்ளேகாலத்
திலே ஒரு மூலையிலே சம்பந்தம் இருக்கலாம். மற்றபடி சம்
பந்தமே கிடையாது. அவர்களுக்கும் காவிரிக்கும் சம்பந்தமே
கிடையாது. ஆனால் கசப்பு உணர்வுகளை அவர்கள் வளர்த்துக்
கொண்டார்கள். இதில் என்ன பிரச்சினை என்று சொன்னால்
கொள்ளேகாலமும், சாம்ராஜ நகரும் முன்பு தமிழ்நாட்டில்
இருந்த பகுதிகள். சென்னை ராஜதானியிலே கோவை மாவட்
டத்திலே இருந்த பகுதிகள். மொழி வாரி மாநிலம் பிரிக்கப்
பட்டபோது கொள்ளேகாலமும், சாம்ராஜ் நகரும் கர்நாடகத்
தோடு சேர்க்கப்பட்டது. ஆனால் இதே மலைப் பகுதியிலே
தாளவாடி நம்மோடு நின்று விட்டது. எனவே தாளவாடியை
கர்நாடகத்தோடு இணைக்கவேண்டுமென்று ஒரு இயக்கம் நடை
பெற்றது. அந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கிய சக்திகள்
இன்னமும் அங்கே இருக்கிறார்கள். அந்த சக்திகள்தான்
இன்றும் அந்த வன்முறையை அந்தப் பகுதியிலே தூண்டி



1992 பிப்ரவரி 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

விட்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் தெரியும். அவர் யார்?
அவர் இன்னமும் கூட அங்கே ஒரு பிரதிநிதியாக இருக்கிறார்.
இதற்கு மேலே நான் பேர் சொல்ல வேண்டாம் என்று நினைக்கி
றேன். இந்த அவையிலே அந்தப் பெயர் தேவையில்லை என்று
நினைக்கிறேன். அவர்கள்தான் செய்து வருகிறார்கள். அந்தப்
பகுதியிலே நடைபெற்ற அத்தனை தாக்குதல்களுக்கும் அவா
தான் காரணம். முழுக்க முழுக்க இதைப் பயன்படுத்திக்
கொண்டு அங்கே வெறியாட்டம் ஆடுகிறார்கள் சமூக விரோதி
கள்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் இதில் என்னுடைய குற்றச்சாட்டு, நண்பர்கள் கேட்
டால்கூட அதை நான் ஒப்புக்கொள்வேன். 23ஆம் தேதி குண்டுலு
பேட்டையில் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது; வன்முறை நடை
பெற்றிருக்கிறது. அன்றைய தினம் சந்தை தினம். சந்தை
தினத்திலே எப்போது தாக்குதல் நடைபெற்றதோ, வன்முறை
நடைபெற்றதோ அதை அரசாங்க இயந்திரம் எதிர் பார்த்திருக்க
வேண்டும். மற்ற பகுதிகளுக்கும் பரவும் என்று தெரியும்.
நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும். தடுப்பு நடவடிக்கையை
எடுத்திருக்க வேண்டும், எடுக்கவில்லை. ஏனென்று கேட்டால்
அவர்கள் சொல்கிறார்கள் ''மேன்பவர்'' இல்லை என்று. ஒரு
போலீஸ் ஸ்டேஷனிலே 8 பேர் இருந்தார்கள். இன்னொரு
போலீஸ் ஸ்டேஷனிலே 5 பேர்தான் இருந்தார்கள். ஏன்
இவ்வளவு குறைவு என்று கேட்டால், நாங்கள் எதிர் பார்க்க
வில்லை, எங்களிடம் மேன்பவரும் இல்லை, அதனால் எங்களால்
நடவடிக்கை எடுக்க முடியவில்லை, இருந்தாலும் உயிருக்கு நாங்
கள் பாதுகாப்பு அளித்திருக்கிறோம் என்றுதான் சொன்னார்கள்.
அங்கேயிருக்கின்ற அத்தனை பெரியஅதிகாரிகளையும் நான் சந்தித்
தேன். கலெக்டரை சந்தித்தேன், டெபுடி கமிஷனர், அடிஷனல்
கலெக்டர் என்று ஒருவர் இருக்கிறார், அவரையும் சந்தித்தேன்,
எஸ்.பி-ஐ சந்தித்தேன். எல்லோரும் என்னை வந்துபார்த்தார்கள்.
அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புகேட்கவில்லை என்றாலும் வருத்
தத்தை தெரிவித்தார்கள். நான் அங்கே போனதன் விளைவாக
நம்மவர்கள் மேலே போவதற்கு வசதி ஏற்பட்டது. நான்
அங்கே இருந்த நாட்களில் காடு காடாக சென்று போய் பார்த்
தேன். அது முடிந்த அளவிலே பயன் உள்ளதாக இருக்கும்
என்ற காரணத்தாலே நான் அந்த பயணத்தை மேற்கொண்டேன்.
நிச்சயமாக இங்கே உள்ள தமிழர்கள் மீண்டும் அங்கே
செல்வதற்கு வழி வகை பார்க்க வேண்டுமே தவிர, அவர்க
ளெல்லாம் அங்கேயிருந்து இங்கேயே வந்துவிட வேண்டுமென்று
நினைப்பது சரியாக இருக்காது. அவர்களெல்லாம் காடு
கழனி உள்ளவர்கள். அவர்கள் சம்பாத்தியம் அனைத்தையும்
சேமிப்பு அனைத்தையும் அதிலே போட்டவர்கள். ஆகவே அவர்
கள் அங்கே போவதற்கு வழி வகை செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

டி2ஏ 53-417—10

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 பிப்ரவரி 7

அங்கே இப்போதிருக்கிற நிலையிலே மத்திய ரிசர்வ் போலீஸ்
இன்னும் பல காலம் அங்கே இருக்க வேண்டும். அவர்கள்
உடனடியாக திரும்பி போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
இதை நான் கோரிக்கையாக வைக்கிறேன். நிச்சயமாக இன்னும்
சில காலம் மத்திய போலீஸ் அங்கே இருக்கும் என்று நம்புகிறேன்.

அதே போல பொருள் சேதம் பற்றி அவர்கள் ஒரு குறிப்பு
தயாரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் தாசில்
தாரை வைத்துக் கொண்டு, அசிஸ்டென்ட் கலெக்டரை வைத்துக்
கொண்டு தயாரித்திருக்கிறார்கள். அது மட்டுமே போதுமா
என்றால் போதாது. எனவே அது குறித்து முழுவதுமாக
விசாரிக்க ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு
கமிஷனை நியமிக்க மத்திய அரசாங்கம் அந்த மாநில அரசாங்கத்
திற்கு அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அதே போல அத்தனை பேருக்கும் நஷ்ட ஈடு கொடுக்க
வேண்டும்.

முற்பகல் 11–40

அதுமட்டுமல்லாமல் பயிர்க் கடன் வாங்கியிருப்பவர்கள்
நிறைய பேர் இருப்பார்கள், அவர்கள் எல்லாம் அதை விட்டு
விட்டு வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பயிர்க் கடன்
ரத்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அதை நீண்டகால
கடனாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தொழில்
செய்பவர்களுக்கு கலவரத்தாலே பாதிக்கப்பட்ட சீக்கியர்
களுக்கு வழங்கியதைப்போல எளிய தவணை முறையில்
சலுகை வட்டியில் திருப்பிச் செலுத்துகின்ற வகையில் அவர்
களுக்கெல்லாம் கடன் கிடைக்க வேண்டும். அதே போல,
பெரிய தொழில் நடத்துகின்றவர்களுக்கும் வர்த்தக வரி
போன்ற வரிகளிலே அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும்
அல்லது சலுகை காட்ட வேண்டும். இது போன்ற நடவடிக்கை
களை மத்திய அரசாங்கம் மேற்கொள்வதற்கு நாமும் முயற்சிகள்
மேற்கொள்ள வேண்டும். நீங்கள் எடுக்கின்ற முயற்சிக்கு நாங்
கள் நிச்சயமாக உறுதுணையாக நிற்போம் என்று மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கு உறுதி அளிக்க விரும்புகிறேன். பிரச்
சினைக்கு ஒரு நல்லதீர்வு காணவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே
இருக்கவேண்டுமே தவிர பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டு
மென்று தயவு செய்து யாரும் நினைக்க வேண்டாம் என்று
கேட்டுக்கொள்கிறேன். அமைதியான ஒரு நல்வாழ்வு திரும்பு
வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு
பாரதப் பிரதமர் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்
என ஆளுநர் உரையிலேயே கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அது வரவேற்கத்தக்க ஒன்று என்று குறிப்பிட விரும்புகிறேன்.
மக்களின் மாபெரும் ஆதரவைப் பெற்றுள்ள நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் நிச்சயமாக
நல்ல பலன் தரும் என்று நான் நம்புகிறேன்.



1992 பிப்ரவரி 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதே போல மாநிலத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள
சில பிரச்சினைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடி
யாகத் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்மு
டைய மாநிலத்திலே உள்ள என். ஜி. ஓக்கள் கோரிக்கைகள்
வைத்து போராடுவதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படி
போராட்டம் எதுவும் வெடித்து விடாமல் முதல் கட்டத்திலேயே
அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அதே போல கடந்த சில நாட்களாக 67 நாட்களாக சென்னை
யிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் வரலாறு
படைத்த சென்னை கிருஸ்துவக் கல்லூரியிலே இன்னும் பிரச்சினை
தீரவில்லை. தீர்ந்துவிடும் என்று நாம் எதிர்பார்த்தோம்.
நேற்றைய முன்தினம், கல்வி அமைச்சர் அவர்கள் என்னிடத்
திலே தீர்ந்துவிட்டது என்று சொன்னார்கள். நேற்று இரவு
திரும்பவும் இரு தரப்பினரும் என்னிடத்திலே சொன்னார்கள்.
இன்னும் பிரச்சினை தீரவில்லை என்று சொன்னார்கள்.
பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டாக வேண்டும். இது
கிருஸ்தவ கல்லூரியோடு முடிந்துவிட்டால் நாம் அதை மறந்து
விடலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. கிருஸ்துவக் கல்
லூரியோடு நிற்பதாகத் தெரியவில்லை. அது மற்ற இடங்களிலே
பரவிக்கொண்டிருக்கிறது. சென்னையிலே, வேறு மாவட்டங்
களிலே, இன்றையதினம் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்திலே
ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் ஒரு
முடிவிற்கு நீங்கள் கொண்டுவர வேண்டும். நீங்கள் நேரடியாகத்
தலையிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல காமராஜர் மாவட்டத்தில் கடுமங்குளம், சென்
னல்குளம் என்ற ஊர்களில் அண்மைக்காலத்திலே ஒரு பதட்ட
நிலை உருவாகியிருக்கிறது. அதுவும் ஒரு பள்ளிக்கூட பிரச்சினை
தான், ஒருவர் அதிலே கரெஸ்பாண்டென்ட்டாக, செயலாளராக
12 ஆண்டுக்காலமாக இருந்துக்கொண்டிருக்கிறார். அந்த ஊர்
பழக்கம் என்னவென்றால் சுற்றுமுறை. ஒரு ஆண்டுக்கு ஒருவர்
வரவேண்டும். அந்த சுற்றுமுறைப்படி வேறொருவருக்கு கிடைக்
காமலேயே அவர் செய்து வந்த காரணத்தினாலே குழந்தைகளை
பள்ளிக்கு அனுப்ப மாட்டேன் என்று பெரியவர்கள் எல்லாம்
சொல்லிவிட்டார்கள். பிறகு கல்வி அதிகாரிகள், மற்றவர்கள்
எல்லாம் சமாதானம் செய்து அவரிடத்திலிருந்து அடுத்தவருக்கு
சுற்றுமுறையிலே செயலாளர் நியமனத்தை கொடுத்தார்கள்.
அதை ஏற்றுக் கொள்ளாமல் அங்கே பெரிய சமுதாய
விரோத சக்திகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கலவரம்
செய்கின்ற சூழ்நிலை உருவாகி, கடைகளை அழித்தல், தோட்டங்
களின் மீது தாக்குதல் நடத்துதல் போன்ற சூழ்நிலை ஏற்பட்டது.
இத்தனைக்கும் காரணம் என்னவென்றால் கல்வி அதிகாரி

ஒரு உத்திரவு போடுகிறார். போட்ட உத்திரவை ஒரு வார
காலத்திலே அந்த கல்வி அதிகாரி மாற்றிவிடுகிறார். மீண்டும்
அந்த பழைய ஆளையே செயலாளராகப் போடுகிறார். இத
னாலேதான் இவ்வளவு பிரச்சினையும் அங்கே முளைத்திருக்
கிறது. எனவே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பி. அண்டு சி மில்லைத் திறக்கின்ற முயற்சியிலே நீங்கள்
வெற்றி கண்டதைப் போலவே கோவை மாவட்டத்திலே மூடப்
பட்டிருக்கின்ற பல பஞ்சாலைகளையெல்லாம் திறக்க நீங்கள்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இப்போது புதியதாக 200 ஆண்டுக்காலம் வரலாறு படைக்கின்ற
ஈ.ஐ.டி. பாரியிலேயும் ஏதோ பிரச்சினை முளைத்திருப்பதாகத்
தொழிலாளர்கள் தரப்பிலே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்
அந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தின் உரிமைகளுக்காகவும்,தொழில் வளர்ச்சிக்காகவும்
குரல் கொடுக்கும் நமது முதலமைச்சர் தேச நலனையும் பாது
காப்பதில் முனைந்து நிற்கிறார் என்பதை நாட்டு மக்கள் நன்கு
அறிவார்கள். புரட்சித் தலைவரின் வாரிசாக நின்று அவருடைய
அடிச்சுவட்டை பின்பற்றி அரசியல் நடத்திவரும் முதல்வர்,
இன்று இந்தியத் திருநாட்டின் குறிப்பிடத்தகுந்த முதல்வர்களில்
ஒருவராக உருவெடுத்திருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி).
மற்ற மாநில முதல்வர்கள் இவருடைய கருத்துக்கு மதிப்பு
அளித்து, ஆதரவும், ஆலோசனையும் கேட்கும் சூழ்நிலை உரு
வாகியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). மறைந்த அன்னை
இந்திரா காந்தியும், ராஜீவ் காந்தியும், புரட்சித் தலைவர்
எம். ஜி. ஆர். மீது கொண்டிருந்த மதிப்பும், நம்பிக்கையும் உல
கறிந்த ஒன்று, எனவே எம். ஜி. ஆருக்கு பாரத ரத்னா என்ற
மிக உயரிய விருதையும் மத்திய அரசு வழங்கி கௌரவித்தது.
அந்தத் தலைவர்களின் உயர்ந்த நோக்கங்களுக்கு செயல் வடிவம்
கொடுக்கும் வகையில் நமது முதலமைச்சர், தலைவர் ராஜீவ்
காந்தி அவர்கள் உருவாக்கிய உயர்ந்த நல்லுறவு நாளுக்கு நாள்
வலுப் பெறவேண்டும் என்பதே நாட்டு மக்களின் விருப்பம் ஆகும்.
நமது இரு இயக்கங்களும் கூட்டணி அமைத்து மத்தியில் நிலை
யான அரசு அமைய காங்கிரஸ் கட்சிக்கும், மாநிலத்தில் ஒரு
நல்லாட்சி நடைபெற அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்திற்கும் வாக்களிக்குமாறு கோரியதை தமிழக
மக்கள் முழுவதுமாக ஏற்றுக் கொண்டார்கள்.

முற்பகல் 11–45

அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில்
கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துக் கொண்டு



நிமிர்ந்த நன்னடையும், நேர்க்கொண்ட பார்வையும், நிலத்தில்
யாருக்கும் அஞ்சாத (மேசையைத் தட்டும் ஒலி) ஞானச்
செருக்கும் கொண்டு செயல்படும் நமது முதலமைச்சரை
ஆளுநர் தன்னுடைய உரையில் புகழ்ந்து இருப்பது நியாயமே,
அதற்காக அவருக்கு என் நன்றியறிதலை காணிக்கையாக்கி
அமைகிறேன். வணக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா வழியில்
அயராது உழைத்து, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின்
புனித அடி ஒற்றி, நமது மக்களின் நம்பிக்கைக்கும், பேராதரவுக்
கும் பாத்திரமாகி இந்திய துணைக் கண்டத்தின் தேர்தல் வர
லாற்றில் மகத்தான வெற்றியை ஈட்டி, தமிழகத்தில் நல்லாட்சி
நடத்தி வருகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசு மேதகு ஆளுநர் அவர்களின் இரண்டாவது உரை
யினை இந்த மாமன்றத்திற்கு வழங்கி அதில் தனது கொள்கை
விளக்கத்தினை தந்து, அரசின் எதிர்கால செயல்முறை திட்டங்
களை அறிமுகப்படுத்துகிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது.

மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்காக இந்த மாமன்ற
உறுப்பினர்கள் நன்றியினை தெரிவிக்க வேண்டுமென்பதற்காக
எங்கள் இயக்கத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.
தென்னவன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது
பேரவையில் கடந்த ஆறு நாட்களாக விவாதம் நடைபெற்று
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்றும் மாண்புமிகு
உறுப்பினர்களும் தங்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்து
வைத்து உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத்
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே பேசிய இந்த மாமன்ற உறுப்பினர்களில் அரசுக்கு
நல்ல ஆலோசனைகளை வழங்கியவர்களும் உண்டு. அரசின்
மீது குறை கூறுவதற்கான ஒரு வாய்ப்பாக மட்டும் இதனை
எடுத்துக் கொண்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி
இராமச்சந்திரன் போன்ற சிலரும் உண்டு. (மேசையைத் தட்டும்
ஒலி) இந்தஅவைக்கு வந்து பேசும் வாய்ப்பை இழந்த சில பெரிய
மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்களும் வெளியிலே இருந்து
தங்கள் மனம் போன போக்கில் மேதகு ஆளுநர் இந்த உரையில்
தெரிவித்துள்ள சில கருத்துக்களுக்கு தன் மேதாவிலாசம்
தொணிக்கின்ற வகையில் சில விமர்சனங்களை செய்து
வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இப்பதிலு
ரைமூலம் அவர்களுக்கு மட்டும் அல்லாது இப்பேரவைக்கும் இதன்

மூலம் இந்த நாட்டு மக்களுக்கும் சில விளக்கங்களை, விவரங்களை
வெளியிட விரும்புகிறேன். அறிவாற்றலின் மொத்த குத்தகை
தாரர்கள் என தங்களை நினைத்துக்கொண்டுள்ள சிலர் இந்த
உரையிலே எதுவுமே இல்லையெனக் கூட விமர்சனம் செய்துள்
ளார்கள் என கேள்விப்பட்டேன். இதே போக்கில் அவர்களை
இன்னும் கொஞ்ச நாட்கள் விட்டால் இந்த உரையில் எழுத்துக்
கள், வார்த்தைகள் கூட இல்லை (மேசையைத் தட்டும் ஒலி)
வெறும் வெற்றுத்தாள்கள் என்று கூட சொல்லுவார்கள் என
என்னிடம் சிலர் வேடிக்கையாக தெரிவித்தனர். இப்படி எங்
களை குறை கூறுவதை மட்டுமே தங்களது வாடிக்கையாக கொண்
டுள்ள அவர்களின் விமர்சனங்கள் மூலம் அவர்கள் இதயம்
எவ்வளவு இருண்டு இருக்கிறது; எவ்வளவு இறுகி இருக்கிறது
என்பதை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டனர்.
எங்களை தூற்றுவோர் அந்த அளவுக்கு ஒரு புறம் தூற்றிக்
கொண்டு இருந்தாலும் போற்றுவோர் பலர் உண்டு என்பதை
இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியது
(மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு இதம் அளிக்கும் செய்தி
யாக இருந்துள்ளது. இவ்வாளுநர் உரை மீது குறை கண்டு
பிடிப்பதில் சிலர் காட்டுகிற அளவுக்கு அதிகமான ஆர்வத்திற்கு
என்ன காரணம் என்று கேட்டால் எப்படி இந்தப் பெண் ஆளலாம்
என்ற எரிச்சல்தான் காரணம் என்பதைத் தவிர வேறு காரணம்
எதுவும் அவர்களாலே வெளிப்படையாகக் கூற முடியவில்லை.
நான் அடிக்கடி கூறி வந்துள்ளதைப் போல இந்தப் பதவிக்கு
எந்தவித சங்கடமும் இல்லாமல், எவ்வித கஷ்டமும் இல்லாமல்
மலர்ப் பாதையில் நடந்து வந்து நான் திடீரென உட்கார்ந்து
விடவில்லை என்பதை மீண்டும் இப்பேரவையில் நினைவூட்ட
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெண்ணுக்குப் பெருமை தருகிற தமிழ்நாட்டின் முதலமைச்ச
ராக நான் பொறுப்பு ஏற்று செயல்படுவது பெருமைக்கும் பெரு
மிதத்திற்கும் உரிய சாதனை என்றாலும் கூட இந்தப் பெருமையை
அடைய நான் எனது அரசியல் பயணத்தில் எதிர்க் கொண்டிருக்
கிற இடர்பாடுகள், ஏகடியங்கள், இன்னல்கள் கொஞ்சம் நஞ்சம்
அல்ல என்பதை இப்பேரவை உறுப்பினர்களும் இந்நாட்டு மக்
களும் நன்றாகவே அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

நான் சட்டசபைக்கு வரமாட்டேன் என்று கூறியவர்கள்,
சட்டமன்றத்திற்குள்ளேயே நுழைய முடியாத பின்னணி உருவான
தையும் (மேசையைத்தட்டும் ஒலி) வன்முறையால் என்னை வீழ்த்
திவிடலாம் என எண்ணியவர்கள், அந்த வன்முறையையே தங்
களது வாழ்க்கைத் தத்துவமாகப் பின்பற்றியவர்கள், அந்த வன்
முறை காரணமாகவே இன்று சிக்கித் தவிக்கும் நிலைக்குத் தள்
ளப்பட்டுள்ளார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி)
ஜாதியத்தைத் தூண்டி என்னை அவமானப்படுத்த நினைத்தவர்



களை, மக்கள் அவமானப்படுத்திய நிலையையும் எண்ணிப்பார்க்
கிறபோது (மேசையைத் தட்டும் ஒலி) தாய் தந்தையை இழந்த
எனக்கு, தமிழகப் பெருமக்களும், தாய்மார்களும், தாயும் தந்தை
யுமாய் இருந்து, என்னைக் காத்து வருகிறார்கள் என்கிற நிம்
மதியோடு (மேசையைத்தட்டும் ஒலி) நான் எனது அன்றாடப்
பணிகளை ஆற்றி வருகிறேன்.

என்னைத் தூற்றுவோர்களும்— விமர்சிப்பவர்களும், எந்த
அடிப்படையை வைத்துப் பேசுகிறார்கள் என்பதை, எண்ணிப்
பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு ஆளுகிற வாய்ப்பை
வழங்கிய இந்த மாநிலத்து மக்களைக் காக்க, நான் கடுமையான
முயற்சி மேற்கொண்டால், என்னை 'ஆணவக்காரி' என்று தூற்று
கிறார்கள். இந்த மாநிலத்தின் உரிமையைக் காக்க, தமிழ்
மண்ணின் கௌரவத்தை நிலைநாட்ட, நான் கருத்துச் சொன்
னால் 'அதிகாரத் திமிர்' என்று அர்த்தம் கொள்ளுகிறார்கள்.
இந்த மாநிலத்திற்குரிய நிதி தேவை என்று நான் முழக்க
மிட்டால், 'மக்கள் மன்றத்தில் அதைச்சொல்ல நீ யார்' என்று
குதர்க்கம் பேசுகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் நான் சொல்கிற ஒரே பதில், வாழ்
நாளெல்லாம் தொண்டு செய்து, பழுத்த தந்தை பெரியாரைப்
போற்றுகிற தமிழக மக்களால்; வாழ்நாள் முடியும் வரை மக்
களுக்கு உழைத்த பேரறிஞர் அண்ணாவை பூஜிக்கிற தமிழக
மக்களால்; 'இறந்தும் மக்கள் மனதில் இறவாமல் வாழுகிற புரட்
சித்தலைவரின் புகழ்பாடுகிற தமிழக மக்களால் (மேசையைத்
தட்டும் ஒலி) தங்கள் சகோதரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்
ளேன்; மக்கள் ஆதரவு பெற்ற ஒரு அரசியல் கட்சியின் பொதுச்
செயலாளராக, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளேன்; இந்த மாநிலத்தின்
முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி, எனப்
பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும்
ஒலி) எனவே, அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வழிகளை, அவர்
களுக்கு பாதுகாப்பு வழங்குகிற பணியினை, அவர்களது எதிர்
காலத்திற்கு உத்திரவாதம் வழங்குகிற முயற்சியினை, எவர்
தடுத்து நிறுத்த முயன்றாலும், அவர்களை, அவர்களது எதிர்ப்பை
உடைத்தெறியத் தயங்கமாட்டேன் என்பதை இந்த நேரத்தில்
திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத்
தட்டும் ஒலி).

தமிழக மக்களின் நலனுக்காக அயராது உழைக்கிற ஆர்
வத்தை வெளியிடுகிற வகையிலும், மக்களுக்கு வழங்கப்பட்ட
வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற பணிகளில், வேகத்தைக் கூட்டு
கிற நிலையிலும், இந்த அரசின் ஆளுநர் உரை உருவாக்கப்பட்டுள்
ளதால், அது பலராலும் பாராட்டப்படுகிற நல் வாய்ப்பினைப்
பெருவாரியாகப் பெற்றிருக்கிறது. அதே நேரத்தில், திட்டங்
களை செவ்வனே செயல்படுத்த வேண்டி, சிலரால் வழங்கப்
பட்டுள்ள ஆலோசனைகளையும், யோசனைகளையும், ஆளும்

கட்சி, எதிர்க்கட்சி என்று பாராது, இந்த அரசு கவனத்தோடு கருத்தில் கொண்டு செயலாற்றும் என்பதை, இந்த மாமன்றத்தில் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

''ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்ற வள்ளுவர் வாக்கினை மனதில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் பல்வேறு செயல்பாடுகளையும், ஆங்காங்கே காணப்படும் சில குறைபாடுகளையும் எடுத்துக் கூறியுள்ளதாகவே நான் கருதுகிறேன். எனவே அவற்றின் தன்மைகளையும்—உண்மைகளையும் நல்லுணர்வோடு கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்திடும் என்ற உறுதியினை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய சில விளக்கங்களை, முதற்கண் எடுத்து விளக்க முற்படுகிறேன். அவ்வகையில் நம் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ள தற்போதைய பிரச்சினை, ''காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை'' ஆகும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இப்பிரச்சினையில், தமிழகம் தன்னுடைய உரிமையை நிலை நாட்ட எடுத்துக் கொண்ட நிலையும், அணுகுமுறையும், நமது நியாயத்திற்குத் தேவையான வெற்றிகளை வழங்கி வந்திருக்கிறது. நமது முயற்சிகளின் பலனாக, நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை, மத்திய அரசு அரசிதழில் பதிவு செய்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் அறியும். இப்பிரச்சினையில் தமிழகத்தின் குரலை, ஒருமித்த வகையில் எடுத்துச் சொன்ன அனைத்துக் கட்சிகளுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பிரச்சினையின் விளைவாக, கர்நாடக வெறியர்களின் வன்முறை காரணமாக, தமிழகத்திற்கு ஓடி வந்த தமிழ் சகோதர, சகோதரிகளுடைய நிலைமைகளை சரி செய்யவும் அவர்கள் திரும்ப கர்நாடகத்தில் வாழ்வதற்கு வழிவகை செய்யவும், நாம் முயற்சி மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மேலும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்குரிய நஷ்ட ஈட்டினை பெற்றுத் தருவதனையும், அவர்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பினை வழங்குகிற பணியினையும், நாம் மேற்கொண்டு வருகிறோம்.

முற்பகல் 11-55

இப்பிரச்சினையில் தமது உரிமையும், நியாயமும் காக்கப்பட தமிழகத்தில் உள்ள அனைவரும் ஒரே அணியில் நம் அனைவருடைய உணர்வினையும் வெளிப்படுத்துவதற்கு இன்று மட்டுமல்ல, என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு உள்ளேன்.





காவிரி நதி நீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மைய அரசின் அரசிதழில் 10-12-1991 அன்று வெளியிடப்பட்டது. இதை எதிர்த்து, கர்நாடக மாநிலத்தில் அந்த அரசின் ஆதரவோடு, 13-12-1991 தேதியில் பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. இந்தக் கதவடைப்பு கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டு, வன்முறையாளர்களால் தமிழர்கள் தாக்கப்பட்டனர்; தமிழர் உடைமைகளும் தாக்கப்பட்டன. இதில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தமது மானத்திற்கும், உயிருக்கும் அஞ்சி கர்நாடகத்தை விட்டுத் தமிழ் நாட்டுக்கு வரத் தொடங்கினர். 13-12-1991 தேதியில் தொடங்கி இதுநாள் வரை 1,17,000 பேர்கள் இதுபோல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவலாக வந்துள்ளனர்.

தொடக்கத்தில் தர்மபுரி, வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு மட்டும் வரத் தொடங்கிய கர்நாடகத் தமிழர்கள், கர்நாடகத்தில் மேலும் வன்முறை பெருகவே, 25-12-1991-க்குப் பிறகு பல்லாயிரக் கணக்கில் பெரியார், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கும் திரளாக வந்து சேர்ந்தனர்.

அதைத் தொடர்ந்து, தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் இவ்வாறு தப்பி வந்த கர்நாடகத் தமிழர்கள் வந்து சேர்ந்துள்ளனர். கர்நாடகத் தமிழர்கள், தமிழ் நாட்டுக்கு வரத் தொடங்கிய முதல் நாளில் இருந்தே அவர்களுக்குத் தக்க புகலிடமும், உடனடி நிவாரணமும் வழங்க நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டேன்.

அதன்படி, மாவட்ட எல்லைகளிலும், இரயில் நிலையங்களிலும் உதவி மையங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அமைக்கப்பட்டு, கர்நாடகத் தமிழர்களுக்குத் தங்க இடமும், உண்ண உணவும், உடனடியாக வழங்கப்பட்டன. மேலும் அவர்கள் தத்தம் ஊர்களுக்கும், உறவினர்களிடமும் செல்லுவதற்குப் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இது தவிர்த்து, கர்நாடகத் தமிழர்களுக்கான உதவி மையங்கள் அமைக்கும்படியும் ஆணையிட்டு உள்ளேன். அதற்கேற்ப ஏழு மாவட்டங்களில் 41 உதவி மையங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாறு, தமிழகத்திற்குத் திரும்பி வந்த கர்நாடகத் தமிழர்களுக்குத் துயர் துடைக்கும் வகையில், தமிழக அரசு, அரிசி, சமையல் பாத்திரங்கள், தட்டு, டம்ப்ளர், கரண்டிகள், துணிகள், பாய், போர்வை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்க உத்தரவு இட்டது.

இது தவிர, பொது மக்களிடமிருந்து நன்கொடை பெறுவதற்குத் தமிழக அரசின் ''கர்நாடகத் தமிழர் மறு வாழ்வு நிதி'' என்ற நிதியை நான் என்னுடைய சொந்தப் பணத்தில்

இருந்து நன்கொடையாக ரூ. 1.8 இலட்சம் தந்து துவக்கி உள்ளேன். 7—2—1992 வரை இந்த நிதிக்கு 19.26 இலட்சம் ரூபாய் நன்கொடை வரப்பெற்றுள்ளது.

30—12—1991 அன்று திங்கள் காலை 10-30 மணிக்குத் தமிழக அமைச்சரவை கூடி, கர்நாடகத் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர கர்நாடக அரசு தவறியது குறித்து வருத்தம் தெரிவித்தும், கர்நாடகத்தில் நடக்கும் வன்முறைச் செயல்களைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றியது. மத்திய அரசு கலவரப் பகுதி களுக்கு மத்தியப் பாதுகாப்புப் படைகளை அனுப்பக் காலம் தாழ்த்தி நடவடிக்கை எடுத்தது குறித்தும் அதிருப்தி தெரிவித்தது. கர்நாடக அரசுக்கு மத்திய அரசு தக்க அறிவுரைகளை வழங்க வேண்டும் என்றும், தமிழக அரசு கர்நாடகத் தமிழ் மக்களுக்குப் புகலிடம் அளிப்பதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்றும், உச்ச நீதிமன்ற நீதிபதி யைக் கொண்டு ஒரு விசாரணைக் குழுவினை மத்திய அரசு அமைக்க வேண்டுமென்றும், கர்நாடகத் தமிழர்களுக்குக் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்க வேண்டு மென்று கோரும் தீர்மானங்களையும் அமைச்சரவை நிறை வேற்றியது.

இதைத் தொடர்ந்து, 30—12—1991 திங்கள் கிழமையன்று மாலை அனைத்துக் கட்சியினர்கள் கூட்டம் ஒன்றினை நான் கூட்டினேன். அந்தக் கூட்டத்தில் 2—1—1992 அன்று தமிழகத்தில் முழு அடைப்பு நடத்துவது என்று ஒருமனதாகத் தீர்மானிக்கப் பட்டது. அதன்படி 2—1—1992 அன்று எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இன்றி மிக அமைதியான முறையில் தமிழ்நாடு முழு அடைப்பு மேற்கொண்டது.

இதனைத் தொடர்ந்து நான், 4—1—1992 அன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் வகையில் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி வலியுறுத்தினேன். கர் நாடக தமிழர்கள் திரும்ப கர்நாடக மாநிலத்திற்குச் சென்று பாதுகாப்புடன் இயல்பான வாழ்க்கையை மீண்டும் தொடங்கி நடத்தவும், அவர்கள் இழந்த சொத்துக்களை ஈடுகட்டும் வகை யில் கர்நாடக அரசும், மத்திய அரசும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் இந்த அரசு வலியுறுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

நண்பகல் 12-00.

காவல் துறையினர் பணி பற்றியும், அவர்கள் பணிபுரியும் பாங்கினைப் பற்றியும் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பலபட பாராட்டிய அதே நேரத்தில், சிலர் குறையைச் சுட்டிக்காட்டி, சாடியும், விமர்சித்தும் இருக்கிறீர்கள். நீங்கள்



கோடிட்டுக் காட்டிய கருத்துக்களை நான் உன்னிப்பாகக் கவனித்து, கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், நீங்கள் சுட்டிக் காட்டியபடி, விடு தலைப் புலிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் ஆகியவர்களின் கொட்டத்தை அடக்கியதில், காவல் துறையினர் நமது பாராட்டை தாராளமாகப் பெற வேண்டியவர்களே. ஆயுதக் கலாச் சாரத்தை அடியோடு ஒழித்து, அமைதியை தமிழகத்திற்குக் கொணர்ந்ததில் அவர்களின் பங்கு மகத்தானது தான். முக்கியஸ் தர்களின் உயிருக்கு உரிய பாதுகாப்பை நன்றாகவே நல்கியிருக்கி றார்கள். அங்கும், இங்கும் நடந்துவரும் சிறு சிறு வன்முறைச் சம்பவங்களை அடக்குவதில் சளைக்காமல் தமது கடமையைச் செய்து வருகிறார்கள். வேண்டுமென்றே தூண்டிவிட்டு திட்ட மிட்டு கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைச் சம்பவங்களை அடக்குவதில் இந்த அரசு பிசிரற்ற, தீர்க்கமான முடிவிற்கு வந்து இருக்கிறது. மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளித்து, பொதுச் சொத்தைக் காத்து, சட்டம், ஒழுங்கைக் காப்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. அதற்கு உரிய முறையில், காவல்துறையினர் பயன்படுத்தப்படுவார்கள் எனக் கூறிக் கொள்கிறேன். இந்த வகையில் பாராட்டுக்குரிய காவல் துறை, மற்றும் சில வகையில் தமது பணியைத் தீவிரப்படுத்த வேண்டும்; மேலும் திறமை காட்டி, வினைத் திட்பம் காட்ட வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. திருட்டு, கொள்ளை போன்ற குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று பரவலாகப் பேசப்பட்டது. இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் காவல்துறை நவீனப்படுத்தப்பட வேண்டும்; காவல்துறைக்கு ஏற் பட்ட சவால்களைச் சந்திக்க வேண்டும்; அதற்கான புதுப்புது கருவிகளை, யுக்திகளைக் கையாள வேண்டுமெனக் கருதி, ரூ. 80·45 கோடி திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி, ரூ. 10 கோடியை இதுவரை பெற்றிருக்கிறோம். எஞ்சிய தொகையைப் பெற எல்லா வகையிலும் முயன்று கொண்டிருக்கி றோம். இந்தத் திட்டம் முழு அளவில் செயல்படும்போது ஆயுத ரீதியில், ஊர்தி ரீதியில், தொலைத் தொடர்பு செய்தி ரீதியில், ஏனைய செயல்பாடு ரீதியில், தமிழக காவல்துறை மிகச் சிறப்பான வகையில் செயல்பட நிச்சயம் வாய்ப்பு ஏற்படும். அவர்களின் பணி சிறக்கும்; பயன் பெருகும். இதற்கிடையில் காவல் துறையினர் செம்மையாகச் செயல்பட முடுக்கி விடப்படு வார்கள் எனக் கூறிக் கொள்கிறேன். அவர்கள் திறமையுடன் பணிபுரிய தக்க சூழ்நிலை உருவாக்கப்படும். திறமை மிக்க அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து, முக்கியப் பொறுப்புகள் வழங் கப்படும். அதாவது, the right persons for the right jobs will be selected தேவையானால், பணிபுரியும் பாங்கு (Style of functioning மாற்றியமைக்கப்படும். இவ்வாறு பணிபுரியும் காவலர் நலம் பேண, அவர்களுக்கென வீட்டுவசதி வாரியத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடனே புதுப்பித்து உருவாக்கியதை நீங்கள் அறி வீர்கள். இன்றைய நிலையில், அந்த நிறுவனம் காலூன்றி

விரைந்து செயல்படத் துவங்கிவிட்டது. இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகளை, திருச்சி, மணிமுத்தாறு, விழுப்புரம், தர்மபுரி, சென்னை போன்ற இடங்களில் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வரும் காலங்களில், காவலர்களுக்கான வீடுகளைக் கட்ட, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தயாராக உள்ளன. இவற்றில் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்ட இயலும். காவல் துறை வளர்ச்சியில் மற்றும் ஒரு முக்கிய அத்தியாயம் தான் காவல் துறையினோடு கூடிய சீருடைப்பணியாளர்களுக்கான பணி நியமனக் குழு, ஏற்படுத்திய செயலாகும். Tamil. ai . Uniformed Services recruitment Board காலியாகக் கிடக்கும் பணியிடங்களை நிரப்பவும், அதற்காக தகுதி படைத்தவர்களை முறையாகத் தேர்ந்தெடுக்கவும் இக்குழு ஏற்படுத்தப்பட்டு செயல்படத் தொடங்கி விட்டது. இக்குழுவிற்கு 'Director General of Police' அந்தஸ்திலுள்ள உயர் காவல்துறை அதிகாரி தலைவராக உள்ளார்.

பிற்பகல் 12-05.

மதுவை விலக்கி, மனித இனத்தைக் காக்க அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிக்கு வந்த உடனே மலிவு விலை மதுவை ஒழித்த, மகத்தான சாதனையை இம் மாமன்றம் நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறு செய்வதன் மூலம், அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டம் என்றாலும் கூட, அதைப் பொருட்படுத்தாது மக்களின் நலனே எங்களது முன்னுரிமையாக இருந்தது. மலிவு விலை மதுவை ஒழித்த சூட்டோடு சூடாக, கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடுமென்று எதிர்பார்த்தார்கள். ஏசினார்கள், பேசினார்கள். இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் கள்ளச் சாராயம் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது என்றும், சிலர் இல்லை, இல்லை, தாராளமாகக் கிடைக்கிறது, அண்டை மாநிலத்திலிருந்து வருகிறது என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் யதார்த்தமாகப் பேச விரும்புகிறேன். கள்ளச் சாராயம் முழுக்க முழுக்க ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை விட, பெருவாரியாக நிறுத்தப்பட்டு விட்டது என்பதே உண்மை. அங்கும், இங்கும், சிற்சில இடங்களில் கள்ளச்சாராய நடமாட்டம் இருக்கிறது. இருக்கக் கூடும் என்பதை உணர்கிறேன். இது எப்படியாவது முழுவதும் ஒழிக்கப்பட வேண்டும், தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு துடிப்பாக இருக்கிறது. (மேசையை தட்டும் ஒலி) இதற்கென நியமிக்கப்பட்ட மதுவிலக்குப் பிரிவு காவல் துறையினர் முடுக்கி விடப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியாளர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் தக்க வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மதுவிலக்கை அமல்படுத்துவதில் தீவிரம் காட்டிச் செயல்படுத்தும் அதே நேரத்தில், ''குடிப்பது தீது; அது குடியையே கெடுத்துவிடும்'' என்ற சித்தாந்தத்தைத் தீவிரப்படுத்த மாநில மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரச்சாரக் குழு என்



தலைமையில் கூடி அரும்பெரும் ஆலோசனைகளைத் தந்துள்ளது. அவை செயல்வடிவம் பெற்று வருகின்றன. இதற்கென தரமான நாடகம், திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். குடிப் பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை அக் கொடிய பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மையங்களை நிர்மாணிக்கவும் தீர்மானித்துள்ளோம்: சுருங்கக் கூறின், இத்திட்டம் நிறைவேற மக்கள் ஒத்துழைப்பும், ஈடுபாடும் வெகுவாகத் தேவை. அந்த வகையில் இம் மாமன்ற உறுப்பினர்களின் உண்மையான ஒத்துழைப்பை என்றும் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கைத் தமிழ் போராளிகள் தமிழ்நாட்டு கடலோரப் பகுதிகளில் கண்காணிப்போ, கட்டுப்பாடோ இன்றி வெகு சாதாரணமாகத் தங்களது சட்டவிரோத வன்முறைச் செயல்கள் மற்றும் கள்ளக் கடத்தலை நடத்திக் கொண்டிருப்பதை உணர்ந்த இவ்வரசு இதற்கு ஒரு முடிவுகட்டும் வகையில், இவ்வரசு பதவி ஏற்ற நாள்முதல் பல்வேறு தீவிர மற்றும் திடமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக முதன்முதலில் இந்தியக் கடலோரப் படை (Navy) மற்றும் கடலோரப் பாதுகாப்பு படையினரின் (Coast Guard) உதவியுடன், கடலில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. தமிழக மீனவர்கள் உட்பட எவரும் கடலில் இந்திய எல்லையைத் தாண்டிச் செல்வதும், ஊடுருவல் புரிவதும் இனியும் இயலாது என்ற அளவில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் மீன்பிடி படகுகளில் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் நடமாட்டம் புரிவதைக் கண்டுபிடித்து ஒடுக்கும்பொருட்டு, தமிழக மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வடையாள அட்டைகள் இல்லாத மீனவர்கள் கப்பல் படை மற்றும் கடலோரக் காவல் படையினரால் பிடிக்கப்பட்டு, காவல்துறையினரிடம் ஒப்படைக்கும் முறை செயல்பாட்டில் உள்ளது. மேலும், அந்நியர்களின் படகோ, அல்லது விசைப் படகோ நடமாடுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழக மீனவர்களின் படகுகளுக்கு வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு எண் பொறிக்கப்படாமல் நடமாடும் படகுகள் இனம் கண்டுகொள்ளப்பட்டு பறிமுதல் செய்யப்படுகின்றன. கடலோரப் பகுதிகளில் 39 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அவைகளில் ஆயுதம் தாங்கிய காவல் படையினர் இடைவிடாது சோதனைப் பணியினைப் புரிந்து வருகிறார்கள். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 10 பிரிவினர் ரோந்து புரிந்து வருகிறார்கள். மேலும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 10 பிரிவுகளும் இவர்களுடன் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். வாகனங்களிலும், கால்நடையாகவும், கடலோரக் கிராமங்களில் காவல் துறையினர் ரோந்து புரிந்து வருகிறார்கள். முக்கியமான இடங்களில் அதிரடிப் படையினரும் (Striking Force) நிறுத்தப்பட்டுள்ளனர். அரசு மேற்கொண்டுள்ள

மிகத் தீவிரமான நடவடிக்கைகள் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கள்ளக் கடத்தல் தடுப்பு என்ற இரண்டு வகையிலும் விரும்பத் தக்க பலனை அளித்துள்ளது. இவ்வரசு மேற்கொண்டுள்ள இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் இலங்கைத் தமிழ் போராளிகளின் ஊடுறுவலையும், அவர்களின் நடவடிக்கைகளை யும் ஏறக்குறைய முழுக்க முழுக்க கட்டுப்படுத்தி விட்டது என்று கூறும் அளவுக்கு உயர்வு பெற்றுள்ளது.

பிற்பகல் 12–10

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது உரையாற்றும்போது பல உறுப்பினர்கள் விலைவாசி உயர்வைப் பற்றி பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். இந்தியப் பொருளாதார வளர்ச் சிக்கு உள்ளபடியே ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வெளிச்செலாவணியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினாலும் வரவுகளைவிட செலவினங்கள் மிக அதிகமாக இருந்ததன் விளை வாகவும் மற்றும் நாட்டின் உற்பத்தித் திறனில் போதுமான அளவுக்கு முன்னேற்றம் இல்லாததனாலும் இந்திய நாட்டின் பொருளாதாரநிலை உள்ளபடியே ஒரு அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளது. பொருளாதார நிபுணர் எவரைக்கேட்டாலும் சொல்வார்கள். ''ஒரு நாட்டின் பொருளாதார அடிப்படை. அம்சங்களில் அதாவது மேக்ரோ எக்கனாமிக் வேரியபில்ஸ் என்று சொல்லப்படும் அம்சங்களில் மாற்றம் ஏற்படுத்துவது என்பது மத்திய அரசின் கையில்தான் உள்ளது என்று. மாநில அரசு பற்றாக்குறையை ஈடுசெய்யும் முறையில் நிதியைத் திரட்ட இயலாது. அதாவது டெஃபிசிட் ஃபைனான்சிங் செய்ய இய லாது. நாட்டின் மொத்தத் தேவை, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய அனைத்தையும் கண்காணிக்கவேண்டிய முழுப் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. இதனைச் சீராக, செம்மையாக மத்திய அரசு நிர்வகித்தால்தான விலைவாசியைக் கட்டுப்படுத்தி, படிப்படியான பொருளாதார வளர்ச்சியைக் காண இயலும். மத்தியில் எந்த ஆட்சி இருந்தாலும் இந்த நிலை எப்போதும் பொருந்தும்.

தற்போது மத்திய அரசில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியும் நாட்டின் பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள சோதனை மிகுந்த நிலையும் கடந்த பல ஆண்டுகளாக மதியில் நிதி நிர்வாகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட தொய்வினால்தான் நிகழ்ந் துள்ளது என்றால் அது தவறாகாது. தற்போதுள்ள மத்திய அரசுதான் இதற்குக் காரணம் என்பது என்னுடைய வாதமல்ல. உண்மையில் தற்போதுள்ள மத்திய நிதியமைச்சரும், பாரதப் பிரதமரும் இந்த இக்கட்டான நிலையிலிருந்து நாட்டை மீளச் செய்வதற்கு பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். (மேசை யைத் தட்டும் ஒலி) குறிப்பாக உலகம் எங்கும் நம்முடைய நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மையில் ஓரளவுக்கு நம்பிக்



கையை ஏற்படுத்தியுள்ளார்கள். அன்னியச் செலாவணியில் ஏற் பட்டுள்ள தொய்வைச் சரிக்கட்டி தற்போது ஓரளவுக்கு திருப்தி கரமான நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை எல் லாம் நான் முழு மனதுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கும் எங்கள் பாராட்டுக்களை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் நாட்டின் சோதனை மிகுந்த பொருளாதார நிலையை ஒழுங்கு படுத்த வேண்டுமென்ற முயற்சியில் ஏழை எளியவர்களைப் பாதிக் காத வகையில் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கலாம் என்பதுதான் இந்த அரசின் வாதம். குறிப்பாக சர்வதேச நிதி நிறுவனங்களிடம் அன்னியச் செலாவணியை முறைப்படுத்தும் போது ஏற்படும் ஒப்பந்தத்தில் உணவு மானியத்தை நாட்டின் மொத்த வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பங்குக்குள் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. ஆனால் நிபந் தனையில் குறிப்பிட்டதற்குமேல் மத்திய அரசு மானியத்தை குறைத்துவிட்டது என்று தெரிய வருகிறது. இதற்கு முக்கியக் காரணம் மத்திய அரசு நிதிப்பற்றாக்குறையைக் கணிசமான அள வுக்குக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப் படையில்தான். மேற்கூறிய அடிப்படையில் மத்திய அரசு அணுகி இருந்தால் உணவு மானியத்தை இந்த அளவுக்குக் குறைத்து மத்திய பொதுத் தொகுப்பிலிருந்து வழங்கக் கூடிய அரிசியின் மீதான விலை உயர்வைத் தடுத்து இருக்கலாம். இதனைத்தான் நான் 1991 டிசம்பர் மாதத்தில் புதுடில்லியில் நடைபெற்ற பொருளாதார வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந் தேன்.

மேலும், கடந்த ஜூலை மாதத்தில் மத்திய நிதியமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசும்போதுகூட தாங்கள் எதைச் செய் தாலும் சரி, அரிசியின் விலையை மட்டும் அதிகரிக்க வேண்டாம் என்று மிகவும் வலியுறுத்திக் கூறினேன்; அவரிடம் கேட்டுக் கொண்டேன. கொள்முதல் விலையை அதிகரித்துக் கொடுக்கும் போது அதற்கேற்ப விநியோக விலையைக் கூட்டுவது பொருத்த மாகும். இவ்வாறு செய்தால் அரிசி உற்பத்தி விலைக்கு ஈடாக விநியோக விலையை வைத்துக்கொண்டு மானியத்தைத் தவிர்க்க லாம். தமிழ்நாட்டிலும், இதர சில மாநிலங்களிலும் கடந்த பல ஆண்டுகளாக அரிசி விலையைக் கட்டுப்படுத்த மாநில அரசால் உணவு மானியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒரு கட்டத்தில் அதாவது 1981 வரை மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்பட்ட அரிசியின் விலை மாநில அரசு நுகர்வோர்களுக்கு வழங்கிய விலையைவிட குறைவாகவே இருந்தது. அதற்குப் பிறகு 1982-ல் மத்திய அரசு சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தியபோதும் மாநில அரசு இதனை தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1-75 என்ற அளவுக்கு விநியோக விலையை வைத்துக்கொண்டது.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

பிற்பகல் 12-15.

மேலும், 1982-ல் சன்னம் மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலையை மத்திய அரசு உயர்த்தியபோதும் மாநில அரசு தன்னுடைய விநியோக விலையில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை. ஏனென்றால், மத்திய அரசின் விலையும், மாநில அரசின் விலையும் ஒன்றாக இருந்தது. 1984-ஆம் ஆண்டில் சன்னம் மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலையை மத்திய அரசு மறுபடியும் உயர்த்தியது. அப்போதும்கூட மாநில அரசு விநியோக விலையில் மாற்றம் எதுவும் செய்யவில்லை. 1985-ல் மத்திய அரசு மறுபடியும் அரிசியின் விலையை அதிகரித்தபோது புரட்சித் தலைவர் ஆட்சியில் சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தாமல் தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூபாய் 1.75-க்கு வழங்கப்பட்டது. அதில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை.

ஆனால், சன்னம் மிகச்சன்ன ரக அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தியதனால் புரட்சித் தலைவர் ஆட்சியிலும் சன்ன, மிகச் சன்ன ரக அரிசியின் விலையையும் உயர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதே போன்று நான் புரட்சித் தலைவர் ஆட்சியைப் பின்பற்றும் எங்களுடைய ஆட்சியிலும் சாதாரண ரக அரிசியின் விலை தொடர்ந்து ரூபாய் 2 என்ற ..... கயிலே எந்தவித மாற்றமும் இல்லாமல், பொது விநியோக ..... ற மூலம் வழங்கி வருகின்றோம். சன்ன மிகச் சன்ன ..... அரிசியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு வெளியீட்டு விலையை உயர்த்தியுள்ளதனால் வேறு வழி இல்லாமல் அந்த ரக அரிசி விலையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நான் மீண்டும் ஒன்றை நினைவுகூற விரும்புகிறேன். 1985-ல் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே மதுவிலக்கு அமல் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கைப் பார்த்தோம் என்றால் ஒவ்வொரு ஆண்டும் கணிசமான உபரிநிலை இருந்து வந்தது. ஆனால் 1987-88-லிருந்து தொடர்ந்து வருவாய்க் கணக்கில் மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக 1986-87-ல் வருவாய்க் கணக்கில் ரூபாய் 103.61 கோடி உபரியாக இருந்தது. 1987-88-ல் அதாவது மறுபடியும் மதுவிலக்கு கொண்டுவந்த தருணத்தில் ரூபாய் 282.92 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது. இது 1988-89-ஆம் ஆண்டு ரூபாய் 274.18 கோடியாகவும், 1989-90-ல் ரூபாய் 350.3 கோடியாகவும், 1990-91-ல் பற்றாக்குறை மிக அதிக அளவான ரூபாய் 416.71 கோடியை எட்டியது. நடப்பாண்டில் இது ரூபாய் 902.49 கோடியை எட்டியது. தொடர்ந்து வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏற்பட்டதன் விளைவாக நாம் மூலதனச் செலவிற்காக வாங்கக்கூடிய கடனை, வருவாய்க் கணக்கில் ஏற்பட்டுள்ள



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பற்றாக்குறையை அடைக்க பயன்படுத்துகிறோம். இதனால் வட்டி சுமை கிடுகிடு என்று உயர்ந்துகொண்டு வருகின்றது. 1987-88-ல் ரூபாய் 283.91 கோடி என்ற வட்டி சுமை தற்போது ரூபாய் 647.14 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டு அதிக வட்டியில் கடன்களை எழுப்பி அதனை ஈடுகட்டுவது என்ற போக்கு மாநில அரசின் நிதி நிர்வாகத்திற்கு ஒரு அபாயகரமான நிலையையும் உருவாக்கும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

இந்த சூழ்நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் அரிசியின் விலையைச் சற்று உயர்த்த வேண்டிய நிலைமை மாநில அரசுக்கு ஏற்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் சாதாரண அரிசியின் விலை கிலோ ஒன்று ரூபாய் 2 அளவில் உள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு நமக்கு வழங்கக்கூடிய அரிசியின் விலையும் இதர மாநிலங்களில் உள்ள விநியோக விலையும் பின்வருமாறு அமைந்துள்ளது. கிலோ ஒன்றுக்கு மத்திய அரசின் விலை ரூபாய் 3.77 காசு. ஆந்திர பிரதேசத்தில் விற்கப்படுகின்ற விலை ரூபாய் 3.50 காசு, கர்நாடகத்தில் விற்கப்படுகின்ற விலை ரூபாய் 3.50 காசு, கேரளத்தில் விற்கப்படுகின்ற விலை ரூபாய் 3.15 காசு, மேற்கு வங்காளத்தில் விற்கப்படுகின்ற விலை ரூபாய் 4.61 காசு, ஒரிசாவில் விற்கப்படுகின்ற விலை ரூபாய் 4.32 காசு. ஆனால் தமிழ்நாட்டில் இந்த சாதாரண ரக அரிசியின் விலை ரூபாய் 2. அனைத்து மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில் தான் அரிசி விலை மிகக் குறைந்த அளவான கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 என்று விநியோகம் செய்யப்படுகிறது, இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும் தமிழக அரசு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். காட்டிய பாதையில், அதாவது சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தவேண்டாம் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தொடர்ந்து சாதாரண ரக அரிசியின் விலை தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 என்று நிர்ணயித்துள்ளது. சன்னம் மற்றும் மிக சன்ன ரகத்தைப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற விலைக்கு விற்கப்படுகின்ற இந்த அரிசி, பல மாநிலங்களில் கிலோ ரூபாய் 5-க்கு மேல் விற்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில் மட்டும் மிகக் குறைந்த விலையானது கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 காசு என்ற அளவில் உள்ளது. அதே நேரத்தில் இதர மாநிலங்களில் மிகச் சன்ன அரிசியின் விலை பின்வருமாறு அமைந்துள்ளது. மேற்கு வங்காளத்தில் இதே அரிசி கிலோ ஒன்றுக்கு ரூபாய் 5.20 காசு என்ற விலைக்கு விற்கப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் விலை ரூபாய் 5.15 காசு. ஒரிசா மாநிலத்தில் விலை ரூபாய் 5.20 காசு.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7]

ஒரு பக்கம் திட்ட ஒதுக்கீட்டில் தொய்வு ஏற்படக்கூடாது
என்று உறுப்பினர்கள் இங்கே அரசு எச்சரிக்கையுடன் செயல்பட
வேண்டும் என்று கூறுகிறார்கள். மறுபக்கம் அரிசியைத்தமிழ்
நாட்டில் குறைந்த விலையில் விற்க வேண்டுமென்றும் கூறுகிறார்
கள். இதனைச் செய்வதற்கு தமிழகததில் நிதிநிலை இடம்
கொடுக்காது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறி
வார்கள். எனினும், இதில் ஒரு நடுநிலை காண வேண்டுமென்றும்,
குறிப்பாக, ஏழை எளிய மக்களின் அத்தியாவசியப் பொருளான
அரிசியின் விலையை அனைத்து மாநிலங்களுடன் ஒப்பிட்டுப்
பார்க்கும்போது குறைந்த விலையிலேயே விற்க வேண்டுமென்ற
மிகச் சிறந்த நோக்கத்துடன், சன்னம் மற்றும் மிகச் சன்ன
அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 காசு என்று
இந்த அரசு நிர்ணயித்துள்ளது. இதனால் தற்போதுள்ள உணவு
மானியம் சுமார் ரூபாய் 343 கோடி என்ற அளவிலிருந்து ரூபாய்
503 கோடி என்ற அளவிற்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தப்
பட்டது. உணவு மானியம் ஏதோ குறைக்கப்பட்டுள்ளது என்று
தவறாகக் கொள்ளக்கூடாது. இவ்வாண்டு வழங்கப்பட்ட உணவு
மானியம் தொடர்ந்து நீடிக்கும். மத்திய அரசு,அரிசியின் விலை
யைக் கூட்டியதாலும், கொள்முதல் விலையில் ஏற்பட்ட உயர்வி
னாலும், கூடுதல் மானியத் தொகையை தவிர்க்கும் முயற்சியாக
இந்த விலை உயர்வு அமைந்துள்ளது. இதனை உறுப்பினர்கள்
அனைவரும் தவறாகப்புரிந்துகொள்ள மாட்டார்கள் என நான்
நம்புகிறேன்.

விலைவாசி சம்பந்தமாக நான் இங்கே விவரமாக விளக்கங்
களைத் தெரிவித்துள்ளேன். அண்மையில் ஏற்பட்டுள்ள விலை
வாசி உயர்வுக்கு இந்த அரசு பொறுப்பு அல்ல. ஏற்கெனவே,
நாட்டில் பொருளாதார நிலையில் இருந்த குறைபாடுகளின் விளை
வாகத்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்கும்
முயற்சியை, மத்திய அரசு எடுத்துவரும் பல நடவடிக்கைகளை
இந்த அரசு ஆதரிக்கின்றது. அதே நேரத்தில் ஏழையெளியவர்
களைப் பாதிக்காத வகையில் சில நடவடிக்கைகளை மாற்றிக்
கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அரசின் வாதம்.

குறிப்பாக, பொது விநியோக முறையில் வழங்கப்படும்
பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவது ஒரு அத்தியாவசியத்
தேவை. இதனை உணர்ந்து, மத்திய அரசு விலையை நிர்ண
யிப்பதிலும் சரி, இந்தப் பொருள்களை இறக்குமதி செய்ய
அனுமதிப்பதிலும் சரி, இன்னும் சற்று கவனம் செலுத்த
வேண்டும் என்பதுதான் இந்த அரசின் வாதம். இதனைச் செய்
நால் ஏழையெளியவர்களைப் பாதிக்காத வண்ணம் விலை உயர்
வினைக் கட்டுப்படுத்த இயலும் என்ற முழு நம்பிக்கையினை
இந்த அரசு கொண்டுள்ளது.

அரிசி விலையைப் பற்றி நான் இங்கே விவரமாக எடுத்துக்
கூறியுள்ளேன். நாட்டின் பொருளாதார நிலவரத்தைக் கண்
காணிக்கும் பொறுப்பை வகித்துள்ள மத்திய அரசு, இப்பொழு



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சில பொருள்களின் மீது ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வைக்
கட்டுப்படுத்த தேவையான சில உறுதியான நடவடிக்கைகளை
எடுக்க வேண்டும். நாட்டின் அந்நியச் செலாவணியில் நல்ல
முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எந்தெந்தப் பொருள்களில்,
குறிப்பாக ஏழையெளியவர்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்
களில் பற்றாக்குறை ஏற்படுகிறதோ, அவைகளை இறக்குமதி
செய்ய வேண்டும். இதற்குத் தேவையான அந்நியச் செலா
வணியை ஒதுக்குவதில் நாம் தயக்கம் காட்டக் கூடாது. அந்நியச்
செலாவணியில் மறுபடியும் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்ற
அச்சம் இருந்தாலும், துணிச்சலுடன் ஏழையெளியவர்களைக்
காக்கும் முயற்சியில் மத்திய அரசு இறங்க வேண்டும். உணவு
தானியங்களில், குறிப்பாக, கோதுமை, அரிசி போன்ற
தானியங்களில் நாட்டில் பற்றாக்குறை ஏற்படக்கூடாது. வெளிச்
சந்தை விலையைக் கட்டுப்படுத்துவது மத்திய அரசின் பொறுப்
பாகும். அரிசி இறக்குமதி செய்யவேண்டுமென்று நான் எடுத்துச்
சொல்லும்போது, மற்றொரு செய்தியையும் நான் இங்கு வெளி
யிட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே பாரத பிரதமரிடம் நம்
நாட்டிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்வதை தடை செய்ய வேண்டு
மென்று எழுதியிருந்தேன். இதற்கு மூல காரணம், வெளிச்
சந்தையில் அரிசியின் விலையைக் குறைப்பதுதான் என்று இங்கே
தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய இந்தக் கடிதத்திற்கு
பாரதப் பிரதமர் பதிலளித்து, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்
டுள்ள 7 இலட்சம் டன் பாசுமதி அல்லாத அரிசிக்கு மேல் ஏற்று
மதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று திட்ட
வட்டமாக தெரிவித்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-25

ஒரு மாநில அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தாலும், நாட்
டில் நிலவக் கூடிய பொருளாதாரச் சூழ்நிலையையொட்டிதான்
விலைவாசி அமைகின்றது. அண்மையில்கூட, வர்த்தகர்கள்
செலுத்தும் லெவி முறையை இடைக்காலத்திற்கு இவ்வரசு
தளர்த்தியுள்ளது. இதனால் அரிசி விலை கணிசமாக குறையும்
என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் நாட்டில் பொருளாதார
நிலையைக் கருத்தில்கொண்டு அரிசி விலை கூடாமல் இருப்பதற்கு
மத்திய அரசு ஒரு முயற்சி எடுக்க வேண்டும். அரிசியை போதுமான
அளவில் இறக்குமதி செய்து இந்த விலை உயர்வைத்
தடுக்க வேண்டும். நான் ஒன்றும் அந்நியச்
செலாவணி நிலைமை புரியாமல் பேசவில்லை.

It is the duty of the Centre to ensure that necessary essential
commodities are imported so that they are made available to protect
the poor throughont the structural adjusment process.

தற்போதுள்ள அன்னியச் செலாவணியைச் செம்மை
பயன்படுத்தி, அத்தியாவசியப் பொருள்களை இறக் ம
செய்வதில் மத்திய அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

இந்த நேரத்தில் வலியுறுத்தி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.
இதற்கு உதாரணமாக சமையல் எண்ணெயை எடுத்துக் கொள்
வோம். சமையல் எண்ணெயின் விலை எதற்காக உயர்ந்துள்ளது,
எவ்வாறு உயர்கிறது என்று புரிந்துகொள்வதில் சங்கடம் ஏற்
படுகிறது. அண்மையில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் குஜராத்
மாநிலத்தில் சமையல் எண்ணெயின் விலையைக் கட்டுப்படுத்த
பல முயற்சிகளை எடுத்தார். ஆனால் சமையல் எண்ணெயின்
விலை அவ்வளவு குறையவில்லை. நாம் எண்ணெய் வித்துக்
களின் உற்பத்தியை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், எண்
ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க
அதிக கவனம் செலுத்தி வருகிறோம். அதைப்போல எண்ணெய்
உற்பத்தி ஆலைகளை நிறுவுவதில் தனிக் கவனம் செலுத்தி
வருகிறோம். இவையெல்லாம் நடுத்தரக் கால திட்டமாக இருக்
கின்றது. அதாவது, மீடியம் டேர்ம் பிராஜக்ட். மக்கள், சமையல்
எண்ணெய் நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்றே
கேட்டுக் கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்த அரசு
சிறப்பான முயற்சி எடுத்துள்ளது. முதலாவதாக மத்திய அரசு
உதவியுடன் நகரப் பகுதிகளில் பாமாயில் ஏழை எளிய மக்க
ளுக்குக் குறைந்த விலையில் விநியோகிக்கப்பட்டது. அதனைத்
தொடர்ந்து மத்தியத் தொகுப்பிலிருந்து கிராமப் பகுதிகளுக்கு
வழங்க போதுமான எண்ணெய் கிடைக்குமா என்ற ஐயப்பாடு
ஏற்பட்டது. நாம் என்ன செய்வது என்று இந்தப் பிரச்சினையைக்
கைவிட்டுவிடவில்லை. நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்வது என்னவென்றால் தமிழக அரசுதான் இந்தியாவிலேயே
முன்னோடியாக ஒரு சிறப்பான முயற்சியை எடுத்து 18,000
டன் பாமாயில் வெளி நாட்டிலிருந்து பெறுவதற்கு வழிவகை
களைச் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)
இதற்குத் தேவையான அன்னியச் செலாவணியை ஒதுக்க இய
லாது என்ற ஒரு பிரச்சினையைக் கடந்து, அன்னியச் செலாவணி
பெறுவதற்கான ஒரு சிறப்பான முயற்சியை ஏற்படுத்திக்
கொடுத்து, 12,000 டன் பாமாயிலை மலேசியாவிலிருந்து
பெற்று, அது விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,000 டன்
பாமாயில் வெகு விரைவில் கொண்டு வரப்பட்டு, விநியோகிக்கப்
படும். உள்ளபடியே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு
சிறப்பான முயற்சி எடுக்கப்படவில்லை. மேலும் தமிழக அரசு
நேரடியாக இறக்குமதி செய்துள்ள பாமாயில் விலையை கிலோ
ஒன்றுக்கு ரூ. 22.50 காசு என்று நிர்ணயித்து விநியோகம் செய்
துள்ளது. மத்திய அரசு தொகுப்பிலிருந்து நிர்ணயித்துள்ள
விலை கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்று இருக்கிறது. இதி
லிருந்து ஏழை எளியவர்கள் பயன்படுத்தக்கூடிய அத்தியாவசியப்
பொருள்களின் விலையைக்கட்டுப்படுத்த இந்த அரசு எடுத்துள்ள
சிறப்பான முயற்சியை அனைத்து உறுப்பினர்களும் பாராட்டு
வார்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழ்நாட்டில் 1992-93 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறி உள்ளார்கள். ஆளுநர் உரையில் தமிழ்நாடு திட்ட ஒதுக்கீடு பற்றி விவரமான அறிக்கை இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நான் சில விளக்கங்களைத் தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு மாநிலத்தின் வளர்ச்சிப் பாதையின் அளவுகோலாக திட்ட ஒதுக்கீடு இதுவரை கருதப்பட்டு வந்தது. பொதுத் துறையில் அதிக மூலதனச் செலவு செய்தால்தான் ஒரு மாநிலம் வளர்ச்சி அடைய இயலும் என்பது பழைய கருத்து. தற்போது உலகம் எங்கிலும் தனியார் துறையை ஊக்குவித்து, அதிக மூலதனச் செலவை ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே மாநிலத்தின் வளர்ச்சியை பொதுத் துறையில் செய்துள்ள ஒதுக்கீட்டினை வைத்து மட்டும் கணக்கிட இயலாது. இதற்கு எடுத்துக்காட்டாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுவரையில் மின் உற்பத்தியை பொதுத் துறையில் நான் செய்து வருகிறோம். இனிமேல் தனியார் துறையில் அல்லது கூட்டுத் துறையில் இதற்கு அனுமதி உண்டு என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. எனவே, கூட்டுத்துறை மற்றும் தனியார் துறையில் மின் உற்பத்திக்கு வழிவகை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இதனையெல்லாம் எடுத்துக் கூறுவதன் நோக்கம், பொதுத் துறையில் உள்ள திட்டச் செலவை வைத்து மட்டும் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிப் பாதையை கணக்கிட இயலாது என்பதுதான். மேலும் திட்டச் செலவை உயர்த்த வேண்டுமென்ற முயற்சியில் கூடுதலான, கடுமையான விலை உயர்வைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் வழங்கக்கூடிய மானியங்களை அறவே நீக்கி விட்டால் ஏழை எளிய மக்களுக்கு உள்ளபடியே அதிக பாதிப்பு ஏற்படும். குறிப்பாக தமிழ்நாட்டில் ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் மானியங்களை அறவே நீக்கி விட்டோம் என்றால் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 2,200 கோடிக்கு மேலே எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தி இருக்கலாம். ஆனால் எங்கள் அரசின் அணுகுமுறை வாய் அளவில் இல்லாது, செயலளவில் ஏழை எளியவர்களுக்கு உதவுகிற நோக்கத்தைக் கொண்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-30

ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலையை உயர்த்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அதே நேரத்தில் திட்டச் செலவில் தொய்வு ஏற்படாமல் கண்காணிக்கவேண்டிய பொறுப்பும், கடமையுணர்வும் இருக்கின்றது. நடைமுறையில் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. இதில் நியாயமான ஒரு நடுநிலையை காணவேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம். பல மாநிலங்களில் அதிக அளவில் உதவித் தொகைகள், மானியங்கள் வழங்கப்படுவதில்லை. இதனால் அவர்களால் திட்டச் செலவை

அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நம் மாநிலத்தில் ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அதிக மானியத் தொகைகள், வழங்கவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவேதான் தொடர்ந்து உணவு மானியத்திற்காக ரூ. 300 கோடியும், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதற்காக மின்சார வாரியத்திற்கு ரூ. 350 கோடியும், இலவச வேட்டி சேலை வழங்கப்படுவதற்காக ரூ. 41.58 கோடியும் இதர நலத் திட்டங்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகளைக் கணக்கிட்டுப் பார்த்தோம் என்றால், ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 900 கோடி அளவுக்கு செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் எந்தவிதமான குறைபாடும் ஏற்படாமல் கண்காணிக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. எனவேதான் திட்டச் செலவினை உயர்த்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த அடிப்படைப் பிரச்சினையை அனைத்து உறுப்பினர்களும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "You cannot have the cake and eat it too" அதாவது அருமையான இனிப்பு ஒன்றை சாப்பிட்டுவிட்டு, அது கையிலும் இருக்கவேண்டுமென்று எண்ணிப் பார்க்க முடியாது. இந்தத் திட்ட ஒதுக்கீடு இதனைப்போலத்தான் இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்குப் பயன்தரும் வகையில் அதிகச் சலுகைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதால், திட்டச் செலவினை உயர்த்த முடியாமல் போகிறது. உண்மை நிலை என்னவென்றால், விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் ஏழை எளியவர்களையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற எண்ணம் நம்முன் தெளிவாக உள்ளது. எனவே, திட்ட ஒதுக்கீட்டில் அதிக உயர்வை இந்த நேரத்தில் பெறவேண்டுமென்ற ஆர்வம் இருந்தாலும், ஏழை எளியவர்களைப் பாதுகாக்கும் சமுதாயக் கடமைக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த அரசு இயங்கி வருகிறது.

வளர்ச்சித் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு, நாம் மானியத் தொகைகளைக் குறைக்கவேண்டும் என்றால், அதை நாம் படிப்படியாக, ஏழை எளியவர்களைப் பாதிக்காத வகையில்தான் செய்யவேண்டும். இதனை நாம் உடனே, குறிப்பாக இந்த நேரத்தில், செயல்படுத்தினோமென்றால், பாதிக்கப்படுபவர்கள் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் தான் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றபோது, தமிழகத்திலிருந்த சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். குறிப்பாக, சோதனை மிகுந்த, கடுமையான நிதி



நெருக்கடியை இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. துவக்கத்திலேயே சுமார் ரூ. 898 கோடி பற்றாக்குறையை இவ்வரசு ஏற்கவேண்டியிருந்தது. ஏழை எளியவர்களின் லட்சோபலட்சம் இல்லங்களில் ஒளியேற்றவேண்டி, தாய்மார்களின் துன்பங்களைத் துடைக்கும் நேரத்தில், வருமானம் தந்துகொண்டிருந்த மலிவுவிலை மதுக்கடைகளை நாம் மூடிவிட்டோம். இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆண்டொன்றுக்கு ரூ. 322 கோடியாகும். ஆகவே, மொத்தம் ரூபாய் 1,600 கோடி ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 1,220 கோடி பற்றாக்குறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன்பிறகு பல நிதியாதாரங்களை திரட்ட, சிறந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. வணிகவரித் துறையில் கூடுதல் நிதி திரட்டுதல், கள்ளச் சாராயம் ஒழிப்பினால் ஐ.எம்.எஃப்.எல். மீது கூடுதல் ஆயத் தீர்வையைப் பெறுதல், செம்மையான வரி வசூல் செய்தல், சிறு சேமிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைதல், ஆகியவை போன்ற பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது.

அதே நேரத்தில், நஷ்டத்தைத் தடுக்கும் முயற்சியாக, தவிர்க்க முடியாத சில நடவடிக்கைகளான மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பேருந்துக் கட்டணத்தை சற்று உயர்த்துவது போன்றவற்றை செயல்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் கடுமையான நிதி நெருக்கடியிருந்தபோதிலும், நடப்பாண்டில் ரூ. 1,600 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை இந்த அரசு முழுமையாக, வெற்றிகரமாக செயல்படுத்தும் என்பதை நான் இங்கே திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-35

சிலர் விமர்சிப்பது போல தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களின் மேல் அக்கறையின்றி இந்த அரசு செயல்படுவதாக இருந்தால் இந்த அரசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த திட்ட ஒதுக்கீடான ரூ. 1,600 கோடியை செயல்படுத்த இயலாது என்று முதற்கட்டத்திலேயே கைவிட்டிருக்கலாம். இந்த முறையைத்தான் முன்பிருந்த ஆட்சி 1988-89இல் செய்தது. குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 1,457 கோடி என்று திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை செயல்படுத்த இயலாது என்று கூறி ரூ. 1,457 என்ற திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 1,202 கோடி என்று முன்பிருந்த ஆட்சி மாற்றிக் கொண்டது. இதனை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், நாங்களும் மிகச் சுலபமாக ரூ. 1,600 கோடி என்ற நடப்பாண்டு திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 1,400 கோடி என்று குறைந்துக் கொண்டு வரும் ஆண்டில் ஒரு உயர்வை காண்பிப்பது போல் ஒரு கண் துடைப்பு வேலையைச் செய்திருக்கலாம். ஆனால் இந்த அவையிலும் சரி, மக்கள் மத்தியிலும் சரி,

உண்மையான நிலையை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்
என்று நான் விரும்புகிறேன். அதைத்தான் மக்களும் என்னிடம்
எதிர்பார்க்கிறார்கள். எனவே பயன் தடைப்பு முயற்சிகளில்
ஈடுபடாமல் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆண்டுத் திட்டத்தை முழுமை
யாகச் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள்
எடுத்திருக்கின்றோம். ரூ. 1,600 கோடி என்ற ஆண்டுத் திட்ட
ஒதுக்கீட்டினை முழுமையாகச் செயல்படுத்த இந்த அரசு
அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என்பதை
நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அண்மையில் 1992–93 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்
கீடு பற்றி மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு.
பிரணாப் முகர்ஜி அவர்களிடம், டில்லியில், விவரமாக
விவாதித்தேன். 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதி ஆதாரங்கள்,
அலுவலர்கள் மட்டத்தில் வெறும் ரூ. 646 கோடி என்று
கணக்கிடப்பட்டது. இதனை வைத்து எந்த திட்டத்தையும்
செயல்படுத்த இயலாது. எனவே நிதி ஆதாரங்களைத் திரட்டு
வதில் தனிக் கவனம் செலுத்த விருக்கிறோம் என தெரிவித்
தேன்; மேலும் ரூ. 800 கோடி அளவிற்கு நிதி ஆதாரங்களைத்
திரட்ட அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என அவரிடம்
உறுதியளித்தேன். இந்த அளவிற்குக் கூடுதல் நிதி ஆதாரங்
களைத் திரட்ட இயலுமா என்ற ஐயப்பாட்டினை திரு.
பிரணாப் முகர்ஜி அவர்கள் எழுப்பினார்கள். திட்ட வளர்ச்சி
யில் தொய்வு ஏற்படாமல் இருக்க இதனைச் செய்யக் கடமைப்
பட்டிருக்கின்றோம் என்றும் இதனைக் கட்டாயமாகச் செய்ய
இயலும் என்றும் உறுதியளித்தேன். ரூ. 800 கோடி அளவிற்கு
கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட தமிழக அரசு முயற்சி
செய்யும்போது, மத்திய அரசும் தன் முழு ஒத்துழைப்பையும்
நல்குவதோடு, தன் பங்காக ரூ. 300 கோடி ரூபாய் அளவிற்
காவது கூடுதல் நிதியை வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி
னேன். மத்திய அரசின் நிதி நிலையைச் சுட்டிக்காட்டி கூடுதல்
நிதியை வழங்க இயலாது என்றும், கூடுதல் நிதி ரூ. 40 கோடி
என்ற அளவிற்கு மட்டும்தான் கிடைக்கும் என்றும் தெரிவித்
தார். இதன் அடிப்படையில்தான் திட்ட ஒதுக்கீடு ரூ. 1,486
கோடியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அந்தக்
கட்டத்தில்தான் தமிழகத்தின் ஆண்டுத் திட்டத்தைக் குறைத்
ததை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், சிறப்பு நிதியுதவி
வழங்க வேண்டும் என்றும் திட்ட ஒதுக்கீட்டை மறு ஆய்வு
செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இதனையடுத்து
நிதி ஆதாரங்களை திரட்டுவது பற்றி மறு ஆய்வு செய்
தோம். மக்கள் மீது மேலும் சுமையை ஏற்றாமல், கூடுதல்
நிதி ஆதாரங்களை எப்படி திரட்டுவது என்று ஆராய்ந்
தோம். மானியத் தொகைகளை, குறிப்பாக உணவு மானியம்
மற்றும் இதர மானியங்களைக் குறைத்துக் கொண்டால்
மிகவும் எளிதாக திட்ட ஒதுக்கீட்டினை உயர்த்தலாம் என்பது
எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதைச் செய்ய வேண்



டாம் என்ற தீர்மானத்தில்தான் நான் உறுதியாக இருந்தேன்.
ஏழை மக்களுக்கு வழங்கப்படும் மானியங்களைக் குறைப்
பதற்குப் பதிலாக சிறுசேமிப்புத் திட்டம் மற்றும் இதர
சிக்கன நடவடிக்கைகளின் மூலமாக கூடுதலாக ரூ. 165
கோடி திரட்டுவது என்று முடிவு செய்தோம். இதனையும்
மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருக்கு கடிதம் மூலம்
தெரிவித்து எங்களுடைய முயற்சியின் மூலம் ரூ. 1,652 கோடி
அளவிற்கு திட்ட ஒதுக்கீடு செய்ய இயலும் என்று குறிப்பிட்டு,
மாநில அரசு இவ்வளவு முயற்சிகளை எடுக்கும்போது மத்திய
அரசு ரூ. 100 கோடி அளவிற்காவது கூடுதல் நிதி உதவி அளிக்க
வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தேன். எனவே இதன்
அடிப்படையில் திட்ட ஒதுக்கீடு ரூ. 1,751 கோடியாக நிர்ண
யிக்க வேண்டும் என்ற எனது கோரிக்கை நியாயத்தின் குர
லாய் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மீண்டும் மீண்
டும் வலியுறுத்திக் கூற விரும்புவது என்னவென்றால், ரூ.
1,751 கோடி என்ற அளவிற்கு ஆண்டுத் திட்டத்தை இந்த
அரசு உயர்த்தி செயல்படுத்த இயலும், அதே நேரத்தில்,
விலைவாசிகள் உயர்ந்துள்ள இந்த நேரத்தில் ஏழையெளிய
மக்களை பாதிக்காத வண்ணம் முயற்சிகள் அனைத்தும்
மேற்கொள்ளப்படும். நேர்மைக்கு எப்போதும் தோல்வி
வந்ததில்லை. நியாயத்திற்கு எப்போதும் கேடு வந்ததில்லை
(மேசையைத் தட்டும் ஒலி). அதை நிரூபிக்கும் வகையில்
நேற்றுதான் ஒரு நற்செய்தி வந்துள்ளது. மத்தியத் திட்டக்
குழுவின் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள்
என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்
டிற்கு 1992–93 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 1,751
கோடி என அறிவித்துள்ளார் என்பதை நேற்றே
இந்த அவையில் அறிவித்தேன். இவ்வளவு சோதனைக்குள்ளான
நிதி நிலையிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்காத வண்
ணம் இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள் முழு வெற்றி அடைந்
துள்ளதை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என
நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எங்கள் வேண்டு
கோளை, நியாயத்தைப் புரிந்து செயல்பட்ட மத்திய அரசின்
திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய
நன்றியை இந்த அவையின் மூலம் மீண்டும் தெரிவிக்கக் கடமைப்
பட்டுள்ளேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–40

மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன்
அவர்கள் இங்கே திட்ட ஒதுக்கீடுகளைப் பற்றி நேற்றைய
தினம் சில விளக்கங்களைக் கோரியுள்ளார்கள். நேற்று
இதைப்பற்றி பட்ஜெட் கூட்டத்தொடரின்போது பேசிக்
கொள்ளலாம் என்று கூறினேன். ஆனால் நேற்றே இந்த
அவையில் உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினைகளை
எழுப்பி, அவைகளும் இங்கே பதிவாகி பத்திரிகைகளிலும்
இச்செய்திகள் வெளிவந்திருப்பதால் விளக்கங்களை இன்றே,
இப்போதே கூறுவது எனது கடமை என்று நினைக்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு அரசி
யலில் மட்டுமல்ல; நிர்வாகத்திலும் நீண்ட அனுபவம் உண்டு.
எண்ணும் வரும் ஆண்டுக்கு அதாவது 1992–93 ஆம் ஆண்
டுக்கு திட்ட ஒதுக்கீடு ரூ. 1,751 கோடி அளவுக்கு உயர்த்தி
நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறும்போது விலைவாசி உயர்வை
ஈடுகட்டும் வகையில் இது அமையாது என்று கூறினார்
அவருக்குத் தெரிந்திருக்கும். ஒவ்வொரு ஆண்டும் முந்தைய
ஆண்டைவிட எப்போதுமே சாதாரணமாக 6–லிருந்து
சதவீதம் கூடுதல் திட்ட ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. சில
ஆண்டுகளில் இதை நாம் வேகப்படுத்த இயலும். சில
ஆண்டுகளில் அதிக அளவில் எடுத்துச்செல்ல இயலாது. உதா
ரணத்திற்கு, 1990–91 திட்ட ஒதுக்கீடு ரூ. 1,450 கோடி.
அதற்கு முந்தைய ஆண்டுத்திட்ட ஒதுக்கீடு ரூ. 1,360 கோடி.
இரண்டு ஆண்டுக்கும் இடையில் உள்ள உயர்வு வெறும் 6.6
சதவீதமாக இருந்தது. இப்போது, 1992–93 ஆம் ஆண்டில்
உள்ள திட்ட ஒதுக்கீட்டை 1991–92 ஆம் ஆண்டுடன் ஒப்
பிட்டுப் பார்ப்போம் என்றால் ஏற்பட்டுள்ள உயர்வு 9.44
சதவீதமாகும். ஆண்டுக்காண்டு விலைவாசி உயர்வு ஏற்படு
கிறது. திட்ட ஒதுக்கீடும் ஆண்டுக்காண்டு இதனை ஈடுகட்டு
முன்னேறுவதற்கு வழிவகை செய்யப்படுகின்றது. நம்முடைய
திட்டங்கள் வகுக்கப்படும்போது நிலையான முன்னேற்றம்
ஏற்பட வேண்டும். அதாவது முன்னேற்றம் என்றால் 'இ
ரியல் டர்ம்ஸ்' என்ற அடிப்படையில்தான் வகுக்கப்படுகின்றன

ஆனால் சில நேரங்களில் விலைவாசி உயர்வு சற்று அதி
மாக இருந்தால் நாம் திட்ட ஒதுக்கீட்டை சற்று கூட்ட வேண்
டும். அதைத்தான் இப்போது செய்திருக்கிறோம். மேலும்
திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது
மாநில அரசு கூடுதல் திட்ட ஒதுக்கீட்டுக்கு அனுமதி பெறும்
போது எல்லாமே மாநில அரசின் முயற்சியாகவும் மக்கள்
மீது கூடுதல் வரி போடும் முயற்சியாகவும் இருக்கிறதே என்
றும் மத்திய அரசு கூடுதல் ஒதுக்கீடு எதுவும் தரவில்லை என்
றும் கூறி இருக்கிறார். நான் நேற்றைய தினம் திரு.
பிரணாப் முகர்ஜி அவர்களின் கடிதத்தைப் படித்துக் காட்டி
னேன். அந்த கடிதத்தில் கூறப்பட்டபடி மாநில அரசின்
கூடுதல் முயற்சி வரி போடுவதன் மூலம்தான் திரட்ட வேண்டு
மென்பது இல்லை. குறிப்பாக ரூ. 165 கோடி கூடுதல் முயற்சி
என்று சொல்லும்போது இதில் முக்கியமாக சிறு சேமிப்பில்
முன்னேற்றமும் சில சிக்கன நடவடிக்கைகளும் அடங்கும்
என்று நான் இங்கே விளக்க விரும்புகிறேன்.

மேலும் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மத்திய அரசு
கூடுதலாக ரூ. 100 கோடி உதவி அளிக்கும் என்று குறிப்
பிட்டுள்ளார். இதில் ரூ. 50 கோடி வெளிநாட்டு உதவி நிறு



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வனங்களிலிருந்து பெற்று செயல்படுத்தக்கூடிய திட்டங்
களுக்கு வழங்கக்கூடிய மத்திய அரசின் உதவித் தொகையாகத்
தான் கணக்கிடப்படுகிறது.

அது மட்டுமல்லாமல், மேலும் 50 கோடி ரூபாய் மத்திய
அரசின் நிதியிலிருந்து மாற்றியமைக்கப்பட்ட சில திட்டங்
களுக்கு வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே
ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உதவியைவிட கூடுதலாக
ரூ. 100 கோடி மத்திய அரசு வழங்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

மாற்றியமைக்கப்பட்ட காட்கில் கோட்பாட்டின்கீழ்
நாம் பெறக்கூடிய உதவியை உயர்த்த வேண்டுமென்று தமி
ழக அரசு கோரியுள்ளது. ஆனால் 1992–93 ஆம் ஆண்டுக்கு
காட்கில் கோட்பாட்டின்கீழ் மொத்தமாக அனைத்து மாநிலங்
களுக்கும் வழங்கக்கூடிய நிதி உதவியில் உயர்வு எதுவும்
இல்லை என்பதுதான் தற்போதைய நிலைமை.
எனவேதான் காட்கில் கோட்பாட்டின் கீழ்
அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கக்கூடிய நிதி உதவியில்
கணிசமான முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. தமிழ்
நாட்டைப் பொறுத்தவரை 1991–92 ஆம் ஆண்டுக்கு காட்
கில் கோட்பாட்டின்கீழ் ரூ. 431 கோடி வழங்கப்பட்டு வரு
கின்றது. திட்டக் குழுவின் துணைத் தலைவர் 1992–93 ஆம்
ஆண்டுக்கு மேலும் ரூ. 40 கோடி, அதாவது மொத்தமாக
ரூ. 471 கோடி காட்கில் கோட்பாட்டின்கீழ் தமிழ்நாட்டுக்கு
வழங்கப்படும் என்று கூறி உள்ளார். நாம் மேலும் எதிர்பார்க்
கின்றோம். காட்கில் கோட்பாட்டின்கீழ் சிறப்புப் பிரச்சினை
களுக்காக ஒதுக்கப்படும் 7½ சதவீதத்தில் தமிழ்நாட்டுக்கு அதிக
தொகை வழங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய வாதம்.
தமிழ்நாட்டில் 1992–93 ஆம் ஆண்டில் வெளிச் சந்தை
யிலிருந்து எழுப்பப்படும் கடன்களில் 'ஓபன் மார்கெட் பாரோ
யிங்ஸ்'–ல் எந்தவிதமான உயர்வும் காணப்படவில்லை.
இதனையும் கூட்டித் தர வேண்டும் எனக் கேட்டு வருகின்
றோம். மத்திய அரசின் திட்டத்திலும் தொய்வு ஏற்படக்
கூடிய சூழ்நிலையில் உடனடியாக கூடுதல் நிதி வழங்க இய
லாத நிலை இருப்பதாக மத்திய திட்டக் குழுத் துணைத்
தலைவர் தெரிவித்து உள்ளார். பொருளாதார நிலையில்
முன்னேற்றம் அடைந்து வரும் இந்தியாவில் போகப் போக
மத்திய திட்டக் குழுவிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்
கேட்பதன் அடிப்படையில் கூடுதல் நிதி பெறுவதற்கு அனைத்து
முயற்சிகளும் எடுக்கப்படும்.

3–2–1992 தேதியிட்ட 'தாய்' வார இதழில் பிரசுரிக்கப்பட்ட
ஒரு கதையில் பொற்கொல்லர் சமூகத்தினரைக் கேவலப்படுத்திய
தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள்
அவையின் கவனத்திற்கு நேற்று கொண்டு வந்தார். ஆபாசம் எந்த
உருவில் வந்தாலும், அது தண்டிக்கப் படவேண்டிய குற்றம் என்
பதில் இந்த அரசுக்கு எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை.
எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பத்திரிகை ஆசிரியரிடம் விளக்கம்
கேட்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. செ. கு.
தமிழரசன் அவர்கள் தமிழக அரசின் உயர்வான கொள்கைகளைப்
பாராட்டி மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பேசுகிற போது, தாழ்த்தப்
பட்டவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுத்தாலும், வீடு
கட்டித் தருவதற்கு நிதி ஒதுக்கீடு இருந்தாலும், வீடு
நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற போது, நிலச் சொந்தக்காரர்கள்
அதை எதிர்த்து தடை ஆணை பெற்று விடுகின்றனர். இதற்கு
ஒரு தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கோரி இருந்தார்.
செப்டம்பர் 1991 வரை சென்னை உயர்நிதிமன்றத்தில் ஆதி
திராவிடர்களுக்கு நில எடுப்பு சம்பந்தமாக 761 வழக்குகள்
நிலுவையில் உள்ளன. 1991 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம்
தேதி, புது தில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்
என்னுடைய உரையில் ஆதிதிராவிடர் நலனுக்காக நில எடுப்பு
சம்பந்தமான வழக்குகளில் பெறப்படும் நீதிப் பேராணைகளில்
முடிவு எடுப்பதற்காக உயர் நீதி மன்றத்தில் தனியாக
'பென்ச்' ஒன்றை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்டு இருந்தேன்.
அதன் அடிப்படையில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.
முழுமையான விவரங்கள் கிடைத்தவுடன் நீதிமன்றம் அமைப்பது
பற்றியோ அல்லது உயர் நீதிமன்றத்தில் இதற்காக ஒரு
'பென்ச்' அமைப்பது பற்றியோ முடிவு செய்யப்படும் என்
பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்
(மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. தமிழரசன்
பேசுகின்றபோது மத்திய மாநில அரசுகள், ஆதிதிராவிடர்
களுக்கும் பழங்குடியினருக்கும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு
செய்துள்ளன; ஆனால், அந்த இட ஒதுக்கீட்டின் பேரில் ஆதி
திராவிடர்களையும் பழங்குடியினரையும் கொண்டு நிரப்பப்பட
வில்லை என்ற வகையில் இங்கு பேசினார். சில துறைகளில் 4
விழுக்காடு கூட ஆதிதிராவிடர்களைக் கொண்டு பணி இடங்கள்
நிரப்பப்படவில்லை என்ற செய்தியைத் தெரிவித்தார். தமிழக
அரசைப் பொறுத்த வரையில் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்
பட்டு இருக்கின்ற 18 விழுக்காடு இடங்களையும், பழங்
குடியினருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற 1 விழுக்காடு இடத்தை





யும் முழுமையாக ஆதிதிராவிடர் பழங்குடியினர் மக்களைக்
கொண்டே நிரப்ப வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையும்
ஆர்வமும் காட்டி வருகிறது. கடந்த ஆண்டுகளில் எல்லாம்
ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்
படாமல் இருக்குமேயானால் அவற்றையெல்லாம் மற்ற இனத்
தவர்களைக் கொண்டு நிரப்பப்பட்ட நிலைமை எல்லாம் இருந்
தது. அவற்றை எல்லாம் மாற்றி, ஆதிதிராவிடர், பழங்
குடியினர் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் சில பல
காரணங்களினால் நிரப்பப்படாமல் இருக்குமேயானால், அவற்றை
அவர்களுக்கெனவே ஒதுக்கீடு செய்து ஆதிதிராவிடர் பழங்குடி
யினர் வகுப்பைச் சேர்ந்தவர்களைக் கொண்டே நிரப்பப்படும்
வரை காலியாக வைக்கும் முறை இப்போது பின்பற்றப்படுகிறது.
ஆகையினால், ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட 18
விழுக்காடும், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 1 விழுக்காடும்
அவர்களைக் கொண்டே நிரப்பப்படும் என்பதை நிச்சயமாகத்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-50

மேலும் மாநிலக் கல்லூரியில் வேதியியல், கணிதவியல் மற்றும்
பௌதீகம் ஆகிய படிப்புத் துறைகளில் ஒரு இடத்திற்கு கூட
ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனுமதிக்கப்பட
வில்லை என்ற பெரிய குற்றச்சாட்டை இங்கே எடுத்துக் கூறி
னார். இது சம்பந்தமாக உடனடியாக தொடர்பு கொண்டு
மாநிலக் கல்லூரியில் வேதியியல், கணிதவியல் மற்றும் பௌதீகம்
ஆகிய பிரிவுகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை
யைப் பற்றி அறிந்தேன். உதாரணமாக வேதியியல்பிரிவில் அனு
மதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 48 எனவும்
தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மாணவர்களுக்கு ஒதுக்கப்
பட்ட இடம் 9 எனவும், அதில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
மாணவர்களுக்கு 11 இடங்கள் அளிக்கப்பட்டதாகவும், இதில்
ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு மேலேயே இரண்டு பேர்களுக்கு கூடு
தலாக சேர அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். எனவே, ஆதிதிராவிட பழங்குடியினர்
இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு கூட அனுமதி அளிக்கப்
படவில்லையே என்று குற்றம் சாட்டியிருப்பது சரியல்ல என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த அரசு ஆதி
திராவிட பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு
நன்மைகளை செய்து கொண்டு வருகிறது. தொடர்ந்து செய்யும்
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால்
அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை எடுத்துக்
கொள்வதற்கு இந்த அரசு ஏற்கனவே ரூபாய் 30 கோடி ஒதுக்கி
யுள்ளது. நிவாரணப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. பெரும்
வெள்ளம் ஏற்பட்ட தருணத்தில் மத்திய அரசு நிபுணர் குழுவை

அனுப்பி வைத்து கூடுதல் நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமென்று
இந்த அரசு வலியுறுத்தியுள்ளது. ஒன்பதாவது நிதிக்குழுவின்
பரிந்துரையின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு வெள்ளம்
மற்றும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு என்று மொத்தம் ரூபாய்
39 கோடி நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது. இதிலே மத்திய
அரசின் பங்கு ரூ. 29.25 கோடியாகும். இந்த நிதியொதுக்கீட்டில்
நடப்பாண்டில் வறட்சி நிவாரண பணிகளுக்கென ஏற்கனவே
ரூபாய் 9 கோடி செலவிடப்பட்டுள்ளது, மீதமுள்ள ரூபாய் 30
கோடி வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.
எனவே, மேலும் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டு
நிறைவேற்றுவதில் நிதிப் பற்றாக்குறையால் சங்கடங்கள் ஏற்
பட்டுள்ளன. வெள்ளத்தினால் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதை
நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக ஏரிகள், கால்வாய்கள் போன்ற
பாசன வசதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் ஒழுங்குபடுத்தப்பட
வேண்டும். மற்றும் சாலை வசதிகளை சீர்படுத்த வேண்டும்.
இவற்றிற்கு கூடுதல் தொகை தேவைப்படுகிறது. கடுமையான
நிதி நெருக்கடியினால் கூடுதல் தொகை ஒதுக்க முடியாத சூழ்
நிலையும் இருக்கிறது. இருந்தபோதிலும் நிவாரணப் பணிகளில்
எந்தவிதமான தொய்வும் ஏற்படாமல் இருக்க உடனடி தேவை
களுக்கென கூடுதலாக — அதாவது ஏற்கனவே நான் குறிப்பிட்ட
30 கோடிக்கு மேலாக ரூபாய் 6 கோடி ஒதுக்கப்படுகிறது.
சாலை வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூபாய் 4 கோடியும்,
பாசன வசதிகளை முறைப்படுத்துவதற்கு ரூபாய் 2 கோடியும்,
ஆக மொத்தம் ரூபாய் 6 கோடி கூடுதலாக ஒதுக்கீடு உடனடி
யாக வழங்கப்படும். வரும் ஆண்டில் மத்திய அரசு ஒதுக்கக்கூடிய
ரூபாய் 29.25 கோடியில் 25 சதவீதம் அதாவது சுமார் ரூபாய்
7.31 கோடி தொகையை மத்திய அரசு உடனடியாக வழங்க
வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் நான் தெரி
விக்க விரும்புகிறேன். மத்திய அரசின் உதவிகளை எதிர்பார்த்து
கூடுதல் பணிகளை இப்போது மேற்கொள்ள இருக்கிறோம்.
தொடர்ச்சியாக புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளாகிற
பகுதிகளில் நிரந்தர தீர்வு காணும் வகையில் உறுதியான பணி
களை மேற்கொள்ளுவதற்கு உலக வங்கியை அணுக இருக்கிறோம்.
இதற்கான திட்ட அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத்
திட்ட அறிக்கையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள வழிவகை
செய்யப்பட்டுள்ளது. அண்மையில் ஆந்திர மாநிலத்தில் இதே
போல் கடுமையான புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
பகுதிகளில் பணிகளை மேற்கொண்டு நிரந்தர தீர்வு காண உலக
வங்கியின் உதவி பெறப்பட்டுள்ளது. அதே அடிப்படையில்
தமிழ்நாட்டுக்கும் சிறப்புதவி அளிக்கும் வகையில் திட்டத்தை
வகுக்க உள்ளோம் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். தமிழகத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில்
வெள்ளம் ஏற்பட்ட போது நான் பல பகுதிகளைச் சுற்றிப்
பார்த்தேன். குறிப்பாக வடசென்னையில் இராயபுரம் பகுதி
யில் கடற்கரையை ஒட்டிய எண்ணூர் நெடுஞ்சாலை கடலரிப்
பினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததை என்னால்காணமுடிந்தது.



பிற்பகல் 12-55

அதனால் இந்தச் சாலையைப் பயன்படுத்த முடியாமல் போகக்கூடிய அபாயம் ஏற்பட்டு உள்ளதையும் நான் உணர்ந்தேன். பல ஆண்டுகளாக இந்த நிலை இருந்து வந்தபோதிலும், இதற்கு நிரந்தர முடிவு காணும் வகையில், எவ்விதத் திட்டமும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. கடல் அரிப்புப் பகுதிகளுக்கு மத்திய அரசு சுற்றுப்புறச் சூழல் துறையின் வாயிலாக நிதி உதவி அளிக்க வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. இதனைப் பெறும் வகையில், திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து நிதி உதவி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டு உள்ளேன். எனினும், இந்தப் பிரச்சினைக்கு உடனே தீர்வு காணவேண்டும் என்ற உறுதியைக் கொண்டுள்ள இந்த அரசு இதில் மேலும் தீவிர ஆய்வை நடத்தியுள்ளது. இதன் வாயிலாக 1.71 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையில், கடல் அரிப்பினால் ஏற்பட்ட சேதம் பற்றிய விவரம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அதில் 0.20 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையினை கடல் அரிப்பிலிருந்து தடுக்கும் வகையில் வீராணம் திட்டத்திற்கு என தயாரித்து, அதற்குப் பயன்படுத்த முடியாத, வீணாக உள்ள குழாய்களை ஏதாவது ஒரு நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்த அண்மையில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து மீதமுள்ள 1.51 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதியை முழுமையாக கடல் அரிப்பின் பாதிப்பிலிருந்து தடுத்து நிறுத்த ரூ. 3.6 கோடி செலவில், ஒரு திட்டத்தைச் செயலாக்க அனுமதி வழங்கப்படும். இவ்வகையில் ரூ. 3.6 கோடி செலவில் நிரந்தரமாக இந்தப் பகுதியில் கடல் அரிப்பால் பாதிப்பு ஏற்படாத வண்ணம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தாழ்ந்த பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு சேதம் அடைந்துள்ள குடிசைகள் பலவற்றை நான் காண முடிந்தது. அதனால் பாதிக்கப்பட்ட் ஆயிரக்கணக்கான மக்கள், இதற்குத் தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டனர். குடிசைகள் அமைந்துள்ள பகுதிகளில் மேடான நிலங்களைத் தேர்ந்தெடுத்து, குடிசை மாற்று வாரியம் பல மாடிக் கட்டிடங்கள் கட்டுவது போன்று, மாடிக் கட்டிடங்களை எழுப்பி, அக்கட்டிடங்களை இவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு ஆணையிட்டுள்ளேன். இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுமாதிரியான அடுக்கு மாடிக் கட்டிடங்களை வியாசர்பாடி, சைதாப்பேட்டை போன்ற பகுதிகளில் கட்டுவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டங்

களினால், குடிசைவாழ் மக்கள் அந்தந்தப் பகுதிகளிலேயே குடி
யிருப்பதற்கும், ஆண்டுதோறும் வெள்ளத்தால் ஏற்படும்
இன்னல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும்,
நல்ல வாய்ப்புகள் ஏற்படும். ஏழை எளிய மக்களுக்கு வெள்ளப்
பாதிப்பிலிருந்து நிரந்தர நிவாரணம் அளிக்கின்ற வகையில்,
முதன் முதலாக இத்திட்டத்தை மேற்கொள்ள ஆணையிட்டுள்ள
அரசு இந்த அரசுதான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரி
வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மழைக்காலங்களில் ஏற்படுகின்ற பெருவெள்ளம், கடலில்
சென்றடையாமல் தடுக்கப்பட்டு, அத்தண்ணீரைத் தேக்கி
வைத்து, குடிநீராகப் பயன்படுத்துவதற்கும், பக்கத்தில் உள்ள
கிணறுகளில் நீர் ஊறுவதற்கும் உதவும் வகையில், இரண்டு
நீர்ப்பிடிப்புக் குளங்களை சென்னைக்கு அருகில் ஏற்படுத்துவதற்
கான ஆணையைப் பிறப்பித்துள்ளேன். அதற்கான ஆய்வு
தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

விவசாயிகளின் நலனுக்காக இந்த அரசு பல சிறந்த நடவடிக்
கைகளை எடுத்து வருகின்றது. கடந்த நவம்பர் மாதத்தில்
ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயி
கள் மீண்டும் பயிரிட உதவும் வகையில், இந்த அரசு ரூ. 9.33
கோடி ஒதுக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி, சிறு மற்றும்
குறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் மற்றும் பூச்சிக்
கொல்லி மருந்துகள் ஆகியவை வழங்கப்பட்டு உள்ளன.
அதேபோல் அவர்களுக்கு அதிக மானியத்தில் உரங்களும் வழங்
கப்பட்டுள்ளன. இதர விவசாயிகளுக்கும் மானிய விலையில்
விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மற்றும் உரங்கள் வழங்கப்
பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் மூலமாக முழுமையாக
பாதிக்கப்பட்ட 96 ஆயிரம் எக்டேர் நிலங்களிலும், சற்றே
பாதிக்கப்பட்ட 1.28 லட்சம் எக்டேர் நிலங்களிலும் மீண்டும்
பயிரிட உதவி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த அளவிற்கு
பெரிய அளவில் வழங்கப்பட்ட உதவியை அனைத்து விவசாயி
களும் வரவேற்றுப் பாராட்டியுள்ளார்கள்.

இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும், விவசாயிகளின்
பம்ப்செட்டுகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மின்சாரத்தின்
வாயிலாக ஏற்படும் நிதிச் சுமையை ஏற்றுக்கொண்டு உள்ளது.
தற்போது சுமார் 4 ஆயிரம் மில்லியன் யூனிட் மின்சாரம்
இலவசமாக வினியோகம் செய்யப்படுகின்றது.

பிற்பகல் 1.00

இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 560 கோடி நிதிச்
சுமை ஏற்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல
முறையில் இயங்கி இதனை ஓரளவிற்கு ஈடுகட்டினாலும்



ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 350 கோடி
நிகரமாக மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு மின்சார வாரியத்
மானியமாக வழங்குவதுடன் மாநில அரசுக்கு மின்சார வாரியத்
திடமிருந்து வந்து சேர வேண்டிய ரூ. 100 கோடி வட்டியையும்
விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கடுமை
யான நிதி நெருக்கடியில் இதனை குறைக்காமல் இந்த அரசு
தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு,
ஏற்றுக்கொண்டு வருகின்றது.

அண்மையில் உற்பத்தியை ஊக்குவிக்கும் முயற்சியில்
கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 290-லிருந்து ரூ. 310-ஆக
இந்த அரசு உயர்த்தியுள்ளது. இதில் மாநில அரசின் மானியம்
டன் ஒன்றுக்கு ரூ. 10—ம் அடங்கியுள்ளது. விவசாயிகளின்
நலனைக் கருதி, இந்த அளவிற்கு நிதி நெருக்கடி இருந்த
போதிலும் மானியத் தொகை வழங்குவதற்கு இந்த அரசு
சிறப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. நெல் உற்பத்தியாளர்
களுக்கு மத்திய அரசு பரிந்துரைத்த கொள்முதல் விலையை இந்த
அரசு வழங்கி வருகின்றது. கடந்த செப்டம்பர் மாதத்தில்
நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 25 என்று
உயர்த்தப்பட்டது. சாதாரண ரக நெல்லின் கொள்முதல்
விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 205—லிருந்து ரூ. 230 ஆக
நிர்ணயித்தது. அதேபோல் சன்ன ரகத்திற்கு ரூ. 215—லிருந்து
ரூ. 240 ஆகவும், மிக சன்ன ரகத்திற்கு ரூ. 225—லிருந்து ரூ. 250
ஆகவும் உயர்த்தியது. இந்த விலையை முழுமையாக வழங்குவ
தோடு, ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35
கூடுதலாக இந்த அரசு வழங்கியுள்ளது. எனவே நெல்
உற்பத்தியாளர்களுக்கு எப்போதும் இல்லாத அளவிற்கு மிக
அதிகமான விலையை இந்த அரசு வழங்கி வருகிறது. (மேசை
யைத் தட்டும் ஒலி).

கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாடு நில உச்ச வரம்புச்
சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்கு இந்த மாமன்
றத்தின் ஒப்புதலைப் பெற்றோம். 1-1-1958 முதல் 6-4-1960
வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற நில
விற்பனை மற்றும் பெயர் மாற்றங்கள் செல்லாது என்று அறி
விக்கும் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நில
உச்சவரம்புச் சட்டத்தில் உள்ள மாற்றங்கள் மிகவும் முக்கிய
மானவை. இவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக
அனுப்பப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலை எதிர்
நோக்கியிருக்கின்றோம் என்று இந்த நேரத்தில் தெரிவிக்க
விரும்புகிறேன்.

மைய அரசு 1991–92 ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு
8.5 சதவீத சர்க்கரைச் சாரம் உள்ள கரும்பிற்கு சட்ட பூர்வ
குறைந்த பட்ச விலை ஒரு டன்னுக்கு ரூ. 260 என நிர்ணயம்
செய்துள்ளது. இதன் அடிப்படையில் மாநில அரசு 1991–92
ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு 8.5 சதவீத சர்க்கரைச்

சாரம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 300 என நன்து
பரிந்துரை விலையை நிர்ணயம் செய்துள்ளது. கரும்பு உற்
பத்திக்கு இடப்படும் மூலப் பொருட்களின் விலை உயர்வைக்
கருதி அரசு மானியமாக ஒரு டன் கரும்பிற்கு ரூ. 10 வீதம்
மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே
தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகள் குறைந்த பட்சமாக
ஒரு டன் கரும்பிற்கு ரூ. 310-ம் அதிகபட்சமாக சர்க்கரை
சாரத்தின் அடிப்படையில் ரூ. 373.50 வரையிலும் பெறுவார்
கள்.

கிராமப் புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை எளிய விவசாயத்
தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும்
நகர்ப்புற மக்கள் ஆகியோருக்கு 1992 பொங்கல் திருநாளை
முன்னிட்டு இலவச சேலை, வேட்டி வழங்க அரசு ஆணை பிறப்
பித்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தேவைப் பட்டியலை
பெற்ற 56,94,881 சேலைகளும், 56,41,551 வேட்டிகளும்
தேவை எனக் கூறியுள்ளார். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த
செலவு ரூ. 42 கோடி. இத்திட்டத்தின் கீழ் 60 இலட்சம்
சேலைகள், 60 இலட்சம் வேட்டிகள் தேவை என கணக்கிடப்
பட்டு, அதில் 20 இலட்சம் சேலைகள், 30 இலட்சம் வேட்டிகளை
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வாயி
லாக கொள்முதல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. மீதி
யுள்ள 40 இலட்சம் சேலைகள், 30 இலட்சம் வேட்டிகளை
வெளிச் சந்தையில் கொள்முதல் செய்து விநியோகம் செய்யவும்
அரசு ஆணை பிறப்பித்தது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 இலட்சம்
சேலைகள் மற்றும் 30 இலட்சம் வேட்டிகள் மாவட்டங்களுக்கு
வழங்கப்பட்டுள்ளன. கைத்தறி சேலையின் மதிப்பு ரூ. 35,
வேட்டியின் மதிப்பு ரூ. 28 என அரசு நிர்ணயம் செய்துள்ளது.
இன்றைய நாள் வரை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தனியார் நிறு
வனங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 25 இலட்சம் சேலை
களையும் 35 இலட்சம் வேட்டிகளையும் மாவட்ட ஆட்சித் தலை
வர்கள் பயனாளிகளுக்கு வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்திற்கு
ஒட்டு மொத்தமாக 1.20 கோடி சேலைகளும், வேட்டிகளும்
தேவைப்படுவதால் அவற்றை உடனடியாக கொள்முதல் செய்ய
இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பிற்பகல் 1.05

எனினும் மீதம் உள்ள பெண்கள், ஆண்கள் அனைவருக்கும்
இந்த மாத இறுதிக்குள் சேலைகளும் வேட்டிகளும் வழங்கப்பட
வேண்டும் என அறிவுரைகள் வழங்கியுள்ளேன். அவ்வாறே
வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).



சேலம் மாவட்டம் மேட்டூர் டெக்ஸ்டைல் மில்லில் அக்
டோபர் மாதம் தீபாவளி அன்று முதலமைச்சர் பொது நிவாரண
நிதியிலிருந்து அந்த மில்லில் பணியாற்றும் 2,175 தொழிலாளர்
களுக்கு, தலைக்கு ரூபாய் 400 வீதம் ரூ. 8 இலட்சத்து 70
ஆயிரம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. மொத்தம்
2,606 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள் என்றும்
அவர்களில் 2,175 தொழிலாளர்கள் நீங்கலாக 431 தொழி
லாளர்களுக்கு அந்த நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை
என்றும் அவர்களுக்கு தற்போது அந்த நிவாரணத் தொகை
வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இங்கே
குறிப்பிட்டுள்ளார்கள். அது பற்றி மேட்டூர் தொகுதி சட்ட
மன்ற உறுப்பினர் திருமதி செ. சுந்தராம்பாள் அவர்கள் விடுபட்ட
அவர்களின் எண்ணிக்கை 431 என்றும் அவர்களுக்கு நிவாரணத்
தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்
கள். அவர்களில் 62 தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள்
என்றும் 269 தொழிலாளர்கள் மில்லை மூடியபோது பதவியி
லிருந்து ஓய்வு பெற்று விட்டார்கள் என்றும் மேட்டூர் மில்லின்
நிர்வாக இயக்குநர் மூலம் தற்போது அறியப்படுகிறது. இருப்
பினும் அவர்களுக்கும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் நிவாரணத்
தொகை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்ட
தால் மனிதாபிமான அடிப்படையில் அந்த 431 தொழிலாளர்
களுக்கும் தலா ரூ. 400 வீதம் முதலமைச்சர் பொது நிவாரண
நிதியிலிருந்து அளிக்க ஆணையிடுகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி). அதற்கு ஆகும் செலவு 1,72,400 என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் 1 கோடி
ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஒன்றியங்
களிலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும்
என்று நான் அறிவித்திருந்தேன். அதற்கு ஏற்ப, சிறப்புத்
தன்னிறைவுத் திட்டத்தை 1991 செப்டம்பரிலே தொடங்கி
இந்த ஆண்டில் நிறைவேற்றி முடிக்க ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டுள்ளன. இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில்
தொடங்கப் பெற்று 1992 ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற
இருக்கிறது. அனைத்துப் பணிகளும் 2 பகுதிகளாக பிரிக்கப்
பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில் ஆணைகள் வெளி
யிடப்பட்டுள்ளது. சிறப்புக்கு உரியதாகும். இத்திட்டத்திற்கு
ஆகும் மொத்தச் செலவு ரூ. 387.24 கோடியாகும். 1991—92
ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக 194.62
கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இத்திட்டத்தை
செயல்படுத்துவதற்கு போதிய நிதியை உரிய நேரத்தில் அரசு
வழங்கும். இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 7 முக்கிய
அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல்,
சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், தெரு விளக்கு

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

கள் அமைத்தல், குடிநீர் வசதிகளைச் செய்தல், தொடக்கப்
பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு
மையங்களுக்கும் கட்டிடங்கள் கட்டுதல், மற்றும் தொலைக்
காட்சிப் பெட்டிகள் வழங்குதல் போன்றவை இத்திட்டத்தில்
அடங்கும்.

பிற்பகல் 1—10

கிராமங்களுக்கு அருகில் உள்ள முக்கிய சாலைகளிலிருந்து
1.6 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள, ஆயிரத்திற்கு அதிகம்
உள்ள, 500—லிருந்து ஆயிரத்திற்கும் குறைவாக மக்கள் தொகை
உள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் எல்லா இடங்களுக்
கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். நடப்பு ஆண்டில்
ரூபாய் 83.34 கோடி செலவிற்கு 3,874 கிலோ மீட்டர் சாலை
கள் அபிவிருத்தி செய்யப்படும். 1991—92 ஆம் ஆண்டில்
5,999 வாழ்விடங்களுக்கு ரூ. 53.36 கோடி செலவில் குடிதண்ணீர்
வசதி செய்து தரப்படும். இவ்வாண்டில் ரூ. 19.88 கோடி
செலவில் 69,781 தெரு விளக்குகள் தமிழக கிராமங்கள்
அனைத்திலும் அமைக்கப்படும். நடப்பு ஆண்டில் பெரிய
நீர்ப்பாசனக் குளங்கள், கசிவு நீர்க் குட்டைகள் உட்பட 2,677
பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் கால்வாய்கள் தூர்
எடுக்கும் பணியும் இதில் அடங்கும். பல்வேறு இடங்களிலுள்ள
சுமார் 1,305 கிலோ மீட்டர் நீளம் உள்ள கால்வாய்களை தூர்
எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இவற்றிற்கென
11.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
ஊராட்சி ஒன்றியங்களில் அரசினரால் நடத்தப்
படும் தொடக்கப் பள்ளிகளுக்கு நிலையான கட்டிடங்கள் ஒன்று
கூட இல்லாது இருந்தால் இத்தகைய இடங்களில் இரு அறை
களைக் கொண்ட ஒரு பள்ளிக் கட்டிடம் அமைக்கப்படும். நடப்பு
ஆண்டில் 1,068 கட்டிடங்கள் ரூ. 14.79 கோடி செலவில் அமைக்
கப்படும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு நிலை
யங்களுக்கு நிலையான கட்டிடங்கள் உருவாக்கப்படும். இந்தப்
பணிக்காக ரூ. 9.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்
மூலம் 1,409 கட்டிடங்கள் கட்டப்படும். மாநில அளவில்
இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றிடும் பொறுப்
பை ஊரக வளர்ச்சி ஆணையரிடமும், மாவட்ட அளவில் ஊரக
வளர்ச்சி முகமைகள் தலைவர்களுமான மாவட்ட ஆட்சித் தலை
வர்களிடமும் அரசு ஒப்படைத்து உள்ளது. நெய்வேலியில்
ஆண்டு ஒன்றுக்கு 11 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி
யெடுக்க மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் அமைக்கும் திட்டத்தைச்
செயல்படுத்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உத்தே
சித்து உள்ளது. இதனுடன் பழுப்பு நிலக்கரியை ஆதாரமாகக்
கொண்டு 1,500 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் மூன்றாவது
அனல் மின் நிலையம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது
இத்திட்டம் இன்னமும் மைய அரசின் பரிசீலனையில் உள்ளது



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

எனினும் மூன்றாவது சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையம்
அமைக்க முன்னோடி நடவடிக்கைகளை நெய்வேலி பழுப்பு
நிலக்கரி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மூன்றாவது சுரங்கம்
மற்றும் அனல் மின் நிலையம் அமைக்க தென்னாற்காடு மாவட்
டத்தில் சுமார் 37 கிராமங்களில் உள்ள 11,410 ஹெக்டேர்
நிலங்களை கையகப்படுத்தி நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறு
வனத்திடம் ஒப்படைக்க மாநில அரசின் நிர்வாக அனுமதி
அக்டோபர் 1988-ல் வழங்கப்பட்டது. மூன்றாவது சுரங்கத்
திற்காக புல ஆய்வு, மண் பரிசோதனைகள், சுற்றுப்புற சூழல்
குறித்த திட்டங்களைத் தயாரிப்பது, சாத்தியகூறு அறிக்கை
களை தற்போதைய நிலவரப்படி தயாரிப்பது ஆகியவை குறித்து
பணிகளை பழுப்பு நிலக்கரி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.
நெய்வேலி மூன்றாவது சுரங்கத் திட்டத்தை விரைவில் செயல்
படுத்துமாறு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது
தேசிய அரோமேட்டிக் பெட்ரோலிய ரசாயனப் பொருட்கள்.
தயாரிப்பு நிறுவனம் 'நெப்கோ' சென்னை மணலியில் 1,380
கோடி ரூபாய் முதலீட்டில் சுத்திகரிக்கப்பட்ட டெர்-அடலிக்
ஆஸிட்; அரோமேட்டிக் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்
பதற்கு சென்னை சுத்திகரிப்பு நிறுவனம் மற்றும் சதர்ன் பெட்
ரோ கெமிக்கல் இண்டஸ்டிரீஸ் நிறுவனம் ஆகியவை பொறுப்
பேற்ற ஒரு கூட்டுச் செயல் நிறுவனம் ஆகும். இத்திட்டம்
பெருமளவில் பல்வேறு உப தொழில்களை ஏற்படுத்துவதோடு
அதிகமான வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடு பெருக
உதவும். கூட்டு முனைவரான சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்
திற்கு 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மத்திய அரசு
இத்திட்டத்திற்கான முன் ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளது.
மைய அரசின் பொது முதலீட்டு நிறுவனத்தின் முதற் கட்ட
ஒப்புதல் 1989 ஆகஸ்டு திங்களிலும், இரண்டாம் கட்ட ஒப்புதல்
1990 நவம்பர் திங்களிலும் வழங்கப்பட்டது. மைய அமைச்சரவை
பொருளாதார குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.
இந்த ஒப்புதலை விரைவில் அளிக்குமாறு 3—7—1990 அன்று
பிரதம மந்திரிக்கும், மைய பெட்ரோலியம் மற்றும் இயற்கை
எரிவாயு அமைச்சருக்குப் நான் கடிதம் எழுதியுள்ளேன்.
தொடர்ந்து நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறேன்.
மேலும் நான் நேரடியாகப் பிரதம மந்திரியிடம் தமிழ்நாடு அரசுக்கு
மத்திய அரசின் உதவி கோரி இரண்டு முறை கொடுத்த குறிப்பில்
இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்
கொண்டுள்ளேன். பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு
அமைச்சரிடமிருந்து இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில்
உள்ளது என பதில் வந்துள்ளது.

தொழில்களுக்கு எரி பொருளாகவும், உர உற்பத்தியில்
இடு பொருளாகவும் எரிவாயுப் டர்பைன்கள் மூலம் மின் உற்பத்தி
செய்யவும் இயற்கை எரி வாயுவைப் பயன்படுத்தலாம். கடந்த
10 ஆண்டுகளாக பம்பாய் கடற் பகுதியில் அதிக அளவில்
கிடைக்கும் இயற்கை எரி வாயுவின் மூலம் தென்னிந்திய பகுதி

இதுவரை பயன் அடையவில்லை. பம்பாய் கடற்பகுதியில் நாள் ஒன்றுக்கு 61 மில்லியன் கன மீட்டர் இயற்கை எரிவாயு கிடைக்கக் கூடும் எனக் கணக்கிடப்படுகிறது. இத்திறனுக்கு மேல் மிகையாக இருக்கும் இயற்கை எரி வாயுவை தென் மாநிலங்களுக்கு குறிப்பாக தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்து மின்சாரம் மற்றும் தொழில்துறையில் நன்கு பயன்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. எனவே, பம்பாய் டற் பகுதியிலிருந்து தென்னக இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம் ஒன்றினை செயல்படுத்துமாறு தமிழக அரசு மைய அரசுக்கு ஆலோசனை தந்துள்ளது. இடைப்பட்ட தூரம் 1,200 கிலோ மீட்டராக இருக்கக் கூடிய இந்த குழாய் அமைப்பினை கடலோரமாகக் கொண்டு வந்து கர்நாடகம் மற்றும் கேரளா வழியாக தமிழ் நாட்டில் உள்ள காவேரிப் படுகையில் இணைக்கலாம். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

பிற்பகல் 1.1

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அரசின் புதிய தொழில் கொள்கையில் சிறு தொழில்கள் முக்கியத்துவம் பெறவில்லை என்று கூறினார்கள். இது தவறு. சிறு தொழில்கள் ஊக்கம் பெறவும் நலிவு அடையாமல் வளர்ச்சி பெறவும் தேவையான ஏற்பாடுகள் புதிய தொழிற் கொள்கையில் இடம் பெறுகின்றன. புதிய தொழிற் கொள்கையின் 16-வது பக்கத்தில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்ற தலைப்பின் கீழ்

"........The Government firmly believes that rapid industrialisation is possible only through a successful policy relating to Small Scale Industries. The State Capital Subsidy for Small Scale Industries will hereafter be released on a stage by stage basis without waiting for full completion, even if the work on the New Unit is in progress. This will help bring down the capital cost of the Entrepreneur. A Monitoring System will be instituted to ensure that State Public Sector Undertakings or Statutory Bo rd pay for supplies made by Small Scale Industries promptly and in any case not later than 30 days from the date of receipt of materials.

Tamil Nadu Industrial Investment Corporation—TIIC—will constitute a Venture Capital Fund to promote New Technologies, a Technological Development Fund (T.D.F.) will be constituted to enable the Small Scale Industries to acquire new know how and modernise their Units. The problem of sickness in Small Scale Industries is serious and has to be tackled. A Special Empowered Committee with full powers headed by the Secretary for Industries will be given powers to take quick decisions on rehabilitation plans for Small Scale Industries........".



மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது இந்த புதிய தொழிற் கொள்கையை பேரவை உறுப்பினர்கள் படிக்கக் கூடிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. இந்தத் தொழிற் கொள்கையை இங்கே முதலில் அறிவித்து இருக்க வேண்டும். அது இந்த அவையின் உரிமை [illegible]பர்கும் என்றும் குறிப்பிட்டார்கள். இதை நானும் அறிவேன். ஆனால் இந்தத் தொழில் கொள்கையில் இருக்கின்ற பல அம்சங்கள் ஏற்கெனவே கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் போது அறிவிக்கப்பட்டுள்ளன. சில புதிய அம்சங்களும் இருக்கின்றன. ஆனால் இந்தக் கூட்டத் தொடர்வரை நான் ஏன் காத்திருக்கவில்லையென்றால் இது ஏற்கெனவே தயாரிக்கப் பட்டுவிட்டது. கடந்த மாதமே அதை வெளியிடுவதாக இருந்தது. சிலபல காரணங்களினாலே, அந்த நேரம் அதை வெளியிட முடியவில்லை. அப்போது, தயாராக இருந்த அந்தத் தொழிற் கொள்கையை வெளியிட்டால்தான் தமிழ் நாட்டுக்கு லாபகரமாக இருக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. சில தொழில் முனைவர்கள் பெரிய தொழில்களை, புதிய தொழில்களை இங்கே துவங்குவதாக பேசப்பட்டு வந்தது. அந்தத் தொழில் முனைவோர், அந்த இண்டஸ்ட்ரிய லிஸ்டுகள் இந்தத் தொழில்களை வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவானது. அவர் களுக்கு மகாராஷ்டிரா மாநிலத்தில் நல்ல பல இன்செஸ் டிவ்ஸ் தரப்படுகிற சூழ்நிலையில் இந்தத் தொழில்களை அங்கே எடுத்துச் சென்று விடுவார்களோ என்ற ஐயப்பாடும் ஏற்பட்டது. எனவே, நம்முடைய புதிய தொழில் கொள்கையை உடனடியாக அறிவித்தால் இந்தப் புதிய தொழில் முனைவோர்களுக்கு ஒரு ஊக்கமாக அமையும். இன்செஸ் [illegible]டிவ்வாக அமையும். இங்கே என்னவெல்லாம் அவர்களுக்கு சலுகைகள் செய்து தர இருக்கின்றோம் என்பதை அறிந்தால் அவர்கள் வேறு மாநிலங்களுக்கு செல்லும் எண்ணத்தை கைவிட்டுவிட்டு தமிழகத்திலேயே முதலீடு செய்வார்கள். அப்படி அவர்கள் செய்யவேண்டுமென்ற விருப்பத்தினால்தான் இந்தக் கூட்டத் தொடருக்கு முன்னாலேயே இந்தப் புதிய தொழிற் கொள்கையை வெளியிட்டேனே தவிர இந்த அவையை அவமரியாதை செய்யவேண்டுமென்றோ இந்த அவையிலுள்ள உறுப்பினர்களை நான் மதிக்கவில்லை யென்றோ அர்த்தம் கொள்ளக் கூடாது. அப்படி பொருள் கொள்ளக் கூடாது என்று இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புதிய தொழில் கொள்கை ஏற்கெனவே அனைத்துப் பத்திரிகை [illegible]களிலும் முழுமையாகவே வெளிவந்திருக்கிறது. இருப்பினும் அதன் பிரதிகளை இந்த அவையின் உறுப்பினர்கள் அனை வருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வினியோகிக்கப் படவேண்டுமென்று இப்போதுதான் உத்தரவிட்டிருக்கிறேன்[illegible].

[1992 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மரபைத்தான் சுட்டிக் காட்டினேன். என்றாலும் எந்தச் சூழ்நிலையிலே அது வெளியிடப்பட்டது என்பதை முதலமைச்சர் அவர்களே இங்கே சொன்னார்கள். அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும்கூட வருங்காலத்திலே பொது வாக, சட்டப்பேரவைக் கூட்டம் கூட்டப்படுவதற்கான அறிவிப்பை வெளியிட்டதற்குப் பின்னால், புதிய கொள்கை எதுவாக இருந்தாலும் இயன்ற வரையில் இந்த அவையிலே வைக்க வேண்டுமென்று மரபு இருக்க வேண்டும் என்பதற் காகத்தான் இதை நான் சுட்டிக் காட்டினேன். முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1–20.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இயன்றவரை அறி விக்க வேண்டும் என்கிற விதிக்கு இணங்க மேலும் நான் சொல்லுகிறேன். இது அவை சம்பந்தமாக இருப்பதால்— அப்போது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இருந் தார்கள்—நான் அப்போதே சொல்லியிருக்க வேண்டும். பேரவை கூட்டப்பட்டு இருக்கிற ஒரு காலக்கட்டத்தில் மிக அவசியமானதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல அப்போதே அதை வெளியிடாவிட் டால் ஒட்டு மொத்தமாக மாநிலத்தினுடைய நன்மையை ஓரளவுக்கு பாதிக்கிற அளவுக்கு ஒரு சூழ்நிலை இருக்கிற போது அதை அரசாங்கம் அறிவித்தது என்பது அந்த ஒட்டுமொத்த நன்மையைக் கருதி இதற்கு முன்னர்கூட பல நேரங்களில் செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங் களுடைய கவனத்திற்கும், அவையின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, அதைப்போல ஒரு ஒட்டுமொத்த நன்மையைக் கருதி அவசரத்தின் தேவையைக் கருதி, வெளியிட்டு இருப்பது என்பது தவறு இல்லை என்பதுதான் என்னுடைய கருத்தும் கூட, சில நேரங்களில் சில ஆர்டி னன்ஸ்கள் கூட அவை அழைக்கப்பட்டதற்குப் பிறகு இங்கே வெளியிடப்பட்டு இருக்கிற சூழ்நிலைகள் எல்லாம் இருந் திருக்கின்றன. எனவே, அந்த அவசரத்தின் தன்மை கருதி ஒட்டுமொத்த நன்மை கருதி அரசாங்கம் அந்தக் கொள்கை முடிவை வெளியிட்டதில் தவறு இல்லை என்று நானும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எஸ். ஆர். பால சுப்ரமணியன்.



1992 பிப்ரவரி 7]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக உரிமை மீறல் என்று அதை இங்கே நான் குறிப்பிடவில்லை. மரபை நான் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது எனவே மரபை நான் சுட்டிக்காட்டினேன். அவர் விளக்கத்தை நான் ஒப்புக்கொண்டு விட்டேன். எனவே, இதுபோன்ற இன்றியமையாத நேரங் களில் இப்படி நடக்கும் என்று நீங்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் ஏற்றுக்கொள்வதால் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நான் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டு விட்டேன் ஏற்கனவே, ஆனால் அதை சுட்டிக்காட்ட வேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. பேர வையில் எதிர்க்கட்சித் தலைவராக வீற்று இருக்கிற நேரத்திலே இதைக் கூட சுட்டிக்காட்டாமல் நீங்கள் இருக்கிறீர்களே என்று நாளை யாரும் சொல்லிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எனக்கிருக்கிறது, சுட்டிக்காட்டினேன். விளக்கத்தை முழுமையாக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக் கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதில் ஒரு கரெக்‌ஷன். ஆர்டி னன்ஸ் வந்து சட்டசபை முடிந்த பிறகு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னீர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, சட்டசபை அழைக்கப்பட்ட பிறகு இதற்கு முன்னர் பல காலங் களில் புரட்சித் தலைவர் (குறுக்கீடு) காலத்திலும் போடப் பட்டுள்ளது; இன்னொரு ஆட்சிக் காலத்திலும் போடப்பட் டுள்ளது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். அதேபோல் அவசரத்தின் காரணமாக இந்த மாதிரி சில நியாயமான காரியங்களில் முன்னர் அதைப் போன்ற ஆர்டினன்ஸ் போடப்பட்டுள்ளது என்பதைத் தான் சொன் னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் மரபை சுட்டிக் காட்டியதில் எந்தத் தவறும் இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனது கடமையைத்தான் செய் திருக்கிறார். அதை சரியாகத்தான் செய்திருக்கிறார்

ஆனால் இதிலுள்ள நிலைமை என்னவென்றால் இந்த புதிய தொழில் கொள்கை ஏற்கெனவே தயாரித்து வைத்து விட்டோம். வெளியிட வேண்டுமென்று எண்ணுகிற நேரத் தில் தான் கர்நாடக தமிழர் பிரச்சினை வெடித்து விட்டது. அந்தக் கட்டத்தில் அத்தகைய ஒரு சூழ்நிலையில் புதிய தொழில் கொள்கையை வெளியிடுவது பொருத்தமாக இருக்காது என்று கருதி தான் இதனை தள்ளி வைத்தோம். பிறகு சட்ட சபைக் கூட்டந் தொடர் அறிவிக்கப்பட்டு விட்டது. அதாவது தாமதித்தால் இங்கே வரவேண்டிய நல்ல பல பெரிய தொழிற் சாலைகளை நாம் இழந்து விடுவோமோ என்ற ஐயப்பாட்டினால் தான் இதை முன்கூட்டியே வெளியிட்டு விட்டேன் என்பதை மட்டும் விளக்கிக் கூற விரும்புகிறேன்.

சென்னை மாநகருக்கு ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்குத் தீர்வு காணுகின்ற முயற்சியின் தொடர்ச்சியாக 11—1—1992 அன்று ஐதரா பாத்தில் ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சருக்கும், எனக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில் தெலுங்கு கங்கைத் திட்டம் செயல்படுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் 1995—ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் ஆந்திர பிரதேச மாநிலத்தில் பாசன வசதி அளிக்கவும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கவும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறிய இலக்கினை எட்ட தமிழக அரசு தன் பங்கிற்கு ஏற்ப போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும், ஆந்திர மாநிலம் இந்தத் திட்டத்திற்கு முக்கிய பாகப் பணிகளை மேற் கொண்டு முடிக்கும் பொருட்டு போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நிலவி வரும் விலைப்பட்டியலின்படி இந்தத் திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றி முடிக்க நிதிப் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தின் முக்கிய பணிகளை மட்டும் மேற்கொண்டு முடிக்க போதிய கவனம் செலுத்தப்படும் என்றும் ஒத்துக்கொள் ளப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டுக்குள் தெலுங்கு கங்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்கு தேவையான நிதி திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் மேலாக தேவைப்படுவதால் கூடுதல் நிதியை பெறும் பொருட்டு வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்தியர்களை இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் பங்கு பெறுவதற்கென அழைப்பதற்கு இரு மாநில அரசுகளும் எல்லாவிதமான முயற்சிகளும் மேற் கொள்ளும். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும்போது ஏற்படும் சிக்கல்களை சுமுகமாக தீர்க்கும் பொருட்டு இரு மாநில அலுவலர்களுக்கிடையே அடிக்கடி கூட்டங்கள் கூட்டப் பட்டு இந்தத் திட்ட முன்னேற்றத்தைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.



பிற்பகல் 1–25

இரு மாநில அரசு அலுவலர்களாலும் —ஒரு செயல் திட்டம் (Action plan) வகுக்க வேண்டுமென்றும், அச்செயல்திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டு உள்ளது.

தர்மபுரி மாவட்டம் தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகி, குடிதண்ணீர் கிடைப்பதில்கூட ஒரு சங்கடமான நிலை ஏற் பட்டு உள்ளது. பல பகுதிகளில் முறையாகக் குடிதண்ணீர் வழங்க இயலவில்லை. நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதிலும் சிக்கல்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் ஒரு தொலை நோக்கு கொண்ட திட்டத்தினை வகுத்துச் செயல்படுத்த வேண்டும். இதனை எவ்வாறு செயல்படுத்துவது என்று நான் பலமுறை அலுவலர்களிடமும், நிபுணர்களி டமும் விவாதித்து வந்து உள்ளேன். கடல் நீரைச் சுத்திகரித்து உப்பை நீக்கி, தரமான குடிநீர் வழங்கலாமா என்று கூட ஆராய்ந்து பார்த்தோம். பெரிய அளவில், இம்மாதிரியான திட்டம் நம் நாட்டில் எங்கும் செயல்படுத்தப்படவில்லை. தர்மபுரி மாவட்டத்தில் நிரந்தரமான குடிநீர் வழங்கும் முயற்சியில் சங்கடம் ஏற்பட்டு உள்ளது. அண்மையில், ஒகேனக் கலிலிருந்து குடிநீர் வழங்கும் முயற்சியை எடுத்துக் கொள்ள லாமா என்று மறு ஆய்வு செய்யுமாறு நான் கேட்டுக்கொண்டு உள்ளேன். தற்போதுள்ள விலை மதிப்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் 250 கோடி செலவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் விசை நீரேற்றங்களைப் பயன்படுத்தித்தான் குடிநீரை வழங்க இயலும் என்று கூறி உள்ளார்கள். தர்மபுரி மாவட்டத்தில் இவ்வளவு பெரும் செலவில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் இந்தப் பெரும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாமா என்று தீவிர ஆய்வு (D... ...ive tigati...) உடனடியாக எடுக்கப்படும். மேலும் மத்திய அரசை அணுகி, வெளிநாட்டு நிறுவனங் களின் நிதியுதவியைப் பெற்று, இதனைச் செயல் படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் கேலன் குடிநீர் வழங்கும் இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கும். மேலும் வருங்காலத்தில் பெரிய அளவில் (De al nation) திட்டங்களை, அதாவது கடல் நீரிலிருந்து குடிநீரைத் தயாரிக் கும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முயற்சி செய்யும்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் இந்த அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருவது அனைவரும் அறிந்ததாகும். ஊட்டி நீர்த் தேக்கத்தில் கழிவு நீரினால் ஏற்பட்ட மாசுப் பிரச்சினை பல ஆண்டுகளாக உள்ளது. இதைத் தீர்க்க இதுவரை சரியான திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை, இதற்காக வகுக்கப்பட்ட திட்டம் ஒன்று நீண்ட காலமாகச் செயல்படுத்தப்படாமல்

இருந்தது. அத்திட்டத்தில் சில தொழில் நுட்பக் குறைபாடுகள்
இருந்ததால் அதற்கு மத்தியத் திட்டக் குழு அங்கீகாரம் அளிக்க
வில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு திட்டத்தை மறு
பரிசீலனை செய்து, அதில் தேவையான திருத்தங்களைச்
செய்து, ஒரு திருத்திய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது
இந்த அரசின் சிறப்பான முயற்சிகள் விளைவாக ரூபாய் 7.61
கோடி செலவிலான இத்திட்டத்திற்குத் தற்போது மத்திய
திட்டக் குழு அங்கீகாரம் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவிக்க விரும்புகிறேன். மாற்றி வகுக்கப்பட்டுள்ள இந்த
திட்டத்தை விரைவில் செயல்படுத்தத் தீவிர நடவடிக்கை
எடுக்கப்படும்.

தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின்
நலனுக்காக ஒரு தனி நிதி கடந்த ஆண்டு துவக்கப்பட்டது.
இந்த நிதி ஒவ்வொரு தொழிலாளருக்கு ரூபாய் 2 என்று
தொழில் நிறுவனத்திடமிருந்தும்; அரசுத் தரப்பில் ரூபாய்
இரண்டும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதி
யைப் பயன்படுத்தி, தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்
குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதியும், விளையாட்டு
மையங்களும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்படுகிறது.
இதனைக் கண்காணிக்க அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட
ஆட்சித் தலைவரின் பொறுப்பில் குழுக்களும் நியமிக்கப்பட்
டுள்ளது.

ஆடிப்பாடி விளையாட வேண்டிய பருவத்தில், வறுமை
யினால் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையை நாம்
மாற்றியமைக்க வேண்டும். இதற்கு நாம் சட்ட ரீதியாக
அணுகுமுறையைப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில்
வறுமையினால் ஏற்படக்கூடிய நிலைமையைத் தவிர்க்க நாம்
வேறு சில நடவடிக்கைகளும் எடுக்க வேண்டிய அவசியம்
இருக்கிறது. இதனால்தான் தீப்பெட்டித் தொழிலில் ஈடு
பட்டு இருக்கும் இளம் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில்
இந்த நிதியை வலுப்படுத்த நாம் முடிவு எடுத்துள்ளோம்.

எனவே, ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழிலாளருக்கு
ரூபாய் இரண்டு என்ற அடிப்படையில் வழங்கப்படும் தொகையை
இந்த அரசு ரூபாய் 10 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது.
அதேபோல் தொழில் நிறுவனங்களும் அவர்கள் தரப்பில் ஒவ்
வொரு தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் 10 ரூபாய்
வழங்க வேண்டும்.

மேலும் தற்போது இந்தத் திட்டம் தீப்பெட்டித் தொழிலுக்கு
மட்டும்தான் பொருந்தும். இனிமேல் பட்டாசுத் தொழிலில்
ஈடுபட்டு இருக்கும் இளம் தொழிலாளர்களுக்கும் இதனை வழங்க
முடிவு எடுத்து உள்ளோம். எனவே, மொத்தம் சுமார் 73,000
தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இந்த நிதி அதிகரிக்கப்



பிற்பகல் 1–30

இதனால் ஆண்டுதோறும் ஏற்படும் கூடுதல் செலவு சுமார் ரூபாய் 6.4 இலட்சமாகும்.

பெண்களின் கல்வி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவுகிறது. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : குடும்ப நலத் திட்டத்தின் கீழ், அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களை ஊக்குவிக்கும் முயற்சியில் அரசு பலவிதமான ஊக்கத் தொகைகளை வழங்கி வருகிறது. அதேநேரத்தில், ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால், எப்படியும் ஆண் குழந்தை வேண்டுமென்ற முயற்சியில் மக்கள் தொகை அதிகமாகிறது. ஆணுக்கு நிகராக பெண் அனைத்துத் துறைகளிலும் முன்னேற இயலும் என்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல ; உலகமெங்கும் புதிய உணர்வு பரவலாக ஏற்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த உணர்வுகளைப் பயன்படுத்தி, சமுதாயத்தில் அடிப்படை மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு, ஒரு பெண் குழந்தை அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால், அவர்களுக்கு ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். அவர்கள் இனிமேல் அறுவை சிகிச்சை செய்துகொண்டபிறகு, உடனடியாக அவர்களின் குழந்தையின் பெயரில் ரூபாய் 2,000 வழங்கப்பட்டு, ஒரு வைப்புநிதி துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் சேரக்கூடிய தொகை, அந்தப் பெண் குழந்தையின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தப்படும். குறிப்பாக, மேல் படிப்பிற்கு உதவும் வகையில் தொகைகள் தொடர்ந்து வழங்கப்படும். அந்தப் பெண் 20 வயது அடையும்போது, அதாவது அப்பெண் குடும்ப வாழ்க்கையைத் துவக்கும்போது, அல்லது பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளும்போது, ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஆண்டுதோறும் 20 ஆயிரம் தாய்மார்கள் பயன்பெறுவார்கள். மேலும், ஆண்டுதோறும் 20 ஆயிரம் பெண் குழந்தைகள் வாழ்க்கையில் நம்பிக்கையுடன். கால் எடுத்துவைக்க இந்த அரசு உறுதியான வாய்ப்பு அளிக்கும். இதற்காக ஆண்டுதோறும் ரூபாய் நாலு கோடி செலவாகும். இந்தத் திட்டம் பெண்களின் கல்விக்கும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் வழிவகை செய்வதில், ஒரு முன்னோடி திட்டமாக அமையும்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

ஆளுநர் உரையில், ஆரம்பக் கல்விக்கு சிறப்பான முன்
னேற்றம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தற்போதுள்ள
ஓராசிரியர் பள்ளிகளில், கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்க
வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாக
செயல்படுத்தி இருக்கிறோம். இது மட்டுமல்லாமல், ஆரம்பக்
கல்வியில் மேலும் சிறப்பான திட்டம் காண வேண்டு
மென்ற நோக்கத்துடன் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை தயாரித்
துள்ளோம். இந்தத் திட்டத்தில் இரண்டு ஆசிரியர்கள் இருக்கக்
கூடிய ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாவது ஆசிரியரை நியமிப்
பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.(மேசையைத் தட்டும் ஒலி)
இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 62.47 கோடி
ஆகும். இந்தத் திட்டம், மத்திய அரசின் உதவி பெற்று
விரைவில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் சிறப்பு
அம்சங்களை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்தால்தான், மாணவர்கள்
மற்றும் ஆசிரியர்களின் விகிதாச்சாரத்தில் முன்னேற்றம் காண
இயலும், வகுப்புகளில் அதிக மாணவர்கள் பயிலும்போது, அவர்
களுக்கு முறையாக கல்வி கற்றுக் கொடுக்க இயலாது. அதில்
சிறப்பான முன்னேற்றம் காண வேண்டுமென்ற நோக்கத்துடன்
இந்த அரசு இரண்டாசிரியர் பள்ளிகளில் மூன்றாவது ஆசிரியரை
நியமிக்க இந்தத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
இதன் அடிப்படையில், 6,545 இரண்டாசிரியர் பள்ளிகளில்
மூன்றாவது ஆசிரியர் நியமிக்கப்படுவார். அதுமட்டுமின்றி
ஒவ்வோர் ஆரம்பப் பள்ளியிலும் குறைந்தபட்சம் மூன்று வகுப்பு
ஆசிரியர்களாவது ஏற்படுத்துவதற்கு இந்தத் திட்டம் வகை
செய்யும். மேலும், தரமான கல்வி வழங்க வேண்டுமென்ற
நோக்கத்தின் அடிப்படையில், தேவையான புத்தகங்கள், கல்வி
உபகரணங்கள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
ஆரம்பக் கல்வியின் தரத்தை உயர்த்த இந்த மகத்தான திட்டம்
உருவாக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று செயல்
படுத்தப்படும்.

தமிழக அரசு, ஆதரவற்ற முதியோர்களுக்கும், விதவை
களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், வேளாண்
மைத் தொழிலாளர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும்
மாதந்தோறும் 50 ரூபாய் உதவித் தொகை தற்போது வழங்கி
வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 5.15 இலட்சம் பேர்
பயனடைந்து வருகின்றனர். எங்கள் திட்டங்களில் மனிதாபி
மானத்தின் வெளிப்பாடு மகத்தான பங்கு வகிக்கிறது. முதி
யோர் ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கு வாரந்தோறும் அரிசி
வழங்கும் திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டது. ஆனால்,
நாங்கள் பொறுப்பேற்றவுடன், முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்
அனைவருக்கும் ஒவ்வொரு வாரமும் அரிசி வழங்கும் திட்டத்தை
மீண்டும் 15—9—1991 முதல் அமலுக்குக் கொண்டு வந்
துள்ளோம்.



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பிற்பகல் 1-35

முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்குத் தற்போதைய
விலைவாசி உயர்வினைக் கருத்திற் கொண்டு மேலும் சிறிது உதவும்
நோக்கத்தோடு அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் ஓய்வு
ஊதியமான 50 ரூபாயை 75 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.
இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15.45 கோடி கூடுதல்
செலவு ஆகும். ஓய்வு ஊதியம் வழங்கப்படுவதில் தாமதங்கள்
ஏற்படா வண்ணம் இந்த அரசு கவனித்துக் கொள்ளும்.
காத்து இருப்போர் பட்டியலில் உள்ள 19,509 நபர்களுக்கு
உடனடியாக ஓய்வு ஊதியம் வழங்க இந்த அரசு ஆணை
யிடுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக
ஆண்டொன்றுக்கு ரூ. 1.76 கோடி கூடுதல் செலவு ஆகும்.
இதன்படி, தமிழகத்தில் 5.35 இலட்சம் பேர் இத்திட்டத்தின்
கீழ் பயனடைவார்கள். சமுதாயத்தில் ஏழை எளியவர்களைப்
பாதுகாக்க வேண்டுமென்ற சிறந்த நோக்கத்துடன் இந்த அரசு
பாடுபடும். இந்த அடிப்படையில்தான் இன்றையதினம்
முதியோர் உதவித் தொகையை உயர்த்துதல், மற்றும் கூடுதலான
நபர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கிட வழிவகை செய்தல் ஆகிய
முடிவுகளை நான் இங்கே அறிவித்துள்ளேன்.

விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த இந்த அரசு பல்வேறு
முயற்சிகளை எடுத்து வருகிறது என்பது மாண்புமிகு பேரவை
உறுப்பினர்களாகிய உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.
அதே சமயத்தில் கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய
நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை
அதிகரித்து கூடுதல் வருமானம் பெறுவதன் மூலம் இந்த விலை
உயர்வினை ஏழைத் தொழிலாளர்கள் சந்திக்க உதவும் என்ற
வகையில் 'தமிழக அரசு வேலைவாய்ப்பு உறுதி திட்டம், என்ற
புதிய திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும். முதற்
கட்டமாக, தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகி வரும் மாவட்டங்க
ளாகிய தர்மபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும்
பசும்பொன் முத்துராமலிங்கதேவர் ஆகிய மாவட்டங்களில்
இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ்
ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள நிலமற்ற ஆண்
மற்றும் பெண் விவசாயத் தொழிலாளர்கள் அந்த அந்த
ஊராட்சி ஒன்றியங்களில் தங்களுடைய பெயர்களைப் பதிவு
செய்து கொள்ள வேண்டும். அதன்பின் அந்த ஊராட்சி
ஒன்றியத்தில் பரவலாக வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில்
பணிகள் உருவாக்கி செயல்படுத்தப்படும். இப்பணிகள்
அந்த அந்த ஊராட்சி ஒன்றியத்தின் வரம்புக்குட்பட்டு
மாவட்ட அளவில் கண்காணிக்கப்படும். குளங்கள் வெட்டுதல்,
ஏரிகளை மேம்படுத்துதல்,வரத்துக்கால்வாய்களை சீர்படுத்துதல்,
வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், சமூக நலக் காடுகளை
வளர்த்தல், சாலை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு
நலப்பணிகள் இதில் அடங்கும். இப்பணிகளில் ஈடுபடுத்தப்படும்
தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச

ஊதியமான 14 ரூபாய் நாள் ஒன்றுக்கு வழங்கப்படும்.
இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் குடும்பத்தில்
ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். அரசு தரப்பில்
பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தி வந்த போதி
லும் கூடுதலாக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,
தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் வகை
செய்யும். இதனால் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்
களின் வருமானம் அதிகரித்து அவர்களுடைய வாழ்க்கைத்
தரம் உயர வாய்ப்புகள் ஏற்படும். இந்த வேலை வாய்ப்பு
உறுதித் திட்டம் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து
வேலை வாய்ப்பினை உறுதி செய்யும். இத்திட்டம் செயல்
படுத்தப்படும் இடங்களில் தொடர்ந்து வேலை வாய்ப்பு
வழங்க இயலாத நிலை சில நேரங்களில் ஏற்படலாம்.
எந்த எந்தப் பகுதிகளில் முறையாக ஏழு நாட்களுக்குள்
வேலைவாய்ப்பு அளிக்க இயலவில்லையோ அப்பகுதிகளில்
பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு உதவித்
தொகையாக நாள் ஒன்றுக்கு 8-வது நாளிலிருந்து 2 ரூபாய்
வழங்கப்படும். மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும்தான்
இந்தத் திட்டம் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்
பட்டு வருகின்றது. அந்த மாநிலத்தில் பின்பற்றப்பட்டுள்ள
முறைகள் பொதுவாக இத்திட்டத்தில் பின்பற்றப்படும்.
இத்திட்டத்தை நான்கு மாவட்டங்களில் செயல்படுத்த முதல்
கட்டமாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
இந்தத் திட்டத்தில் காணப்படுகிற முன்னேற்றத்தின் அடிப்
படையில் படிப்படியாக மாநிலம் முழுவதற்கும் இதனை
விரிவு படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நோயைக் கட்டுப்படுத்துகிற மருந்துகளின் விலை அதிக
மாகிக் கொண்டிருக்கிறது. மருந்துகளின் விலையை நிர்ண
யிக்கிற முழு உரிமையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்
இருக்கிறது. மருந்துகளின் விலையை நிர்ணயிப்பதற்கு
மாநில அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. இந்த
நிலையில் பல்வேறு காரணங்களினால் மருந்துகளின் விலை
அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், ஏழை
யெளியவர்களை நோயின் பிடியிலிருந்து பாதுகாக்கும்
முழுமையான பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு.

பிற்பகல் 1-40

தமிழக அரசால் நடத்தப்படும் பல்வேறு சுகாதார
மற்றும் மருத்துவ நல மையங்களில் மருந்துகள் வழங்குவதற்கு
ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைக் கூடக் குறைக்க
வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நிதிப்பற்றாக்குறை காரண
மாக இந்த அரசு தள்ளப்பட்டிருக்கிறது என்பதை அனைவரும்
அறிவார்கள். அதே சமயத்தில் நலத் திட்டத்தினை அதாவது
ஆளுவல் ப்ளான், அதை எப்படியும் செயல்படுத்த வேண்டிய



கட்டாயமும் இருக்கிறது. இந்த சூழ்நிலையில் மருந்துகளின்
விலை உயர்வினால் ஏழை எளியவர்களுக்கு மருத்துவ
பாதுகாப்பு அளிக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட இந்த
அரசு இடம் அளிக்காது.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு
சுகாதாரம் மற்றும் மருத்துவ நல மையங்களில்
மருந்துகள் வழங்குவதற்கென நடப்பு நிதியாண்
டில் மொத்தமாக முப்பத்தெட்டு கோடியே பதினோரு இலட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் கடுமையான
நிதிப்பற்றாக்குறை இருந்தபோதிலும் நடப்பாண்டில் நிதிநிலை
அறிக்கையில் மருந்துகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையான
ரூபாய் 38.11 கோடி என்பது 44.11 கோடியாக உயர்த்தி
வழங்கப்படும். இவ்வாறு கூடுதலாக ஒதுக்கப்படும் தொகை
யினால் அனைத்து மருத்துவமனைகள், மற்றும் ஆரம்பசு
சுகாதார மையங்களில் மருந்துகள் இல்லை என்ற குறைபாடு
முழுமையாக நீங்கிவிடும். அண்மையில் துவக்கப்பட்டுள்ள
தமிழக அரசின் புதிய மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாக
தொடர்ந்து போதுமான அளவுக்கு மருந்துகள் வழங்கு
வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஆயிரத்
திற்கும் மேற்பட்ட முகாம்கள் இந்தத் திட்டத்தின் கீழ்
நடத்தப்பட்டுள்ளது. அதில் 5 இலட்சத்திற்கும் அதிகமான
பேர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்
இந்தத் திட்டம் முழுமை அடைகிற போது கிட்டத்தட்ட
50 இலட்சம் பேர் இதன்மூலம் பயனடைவார்கள். இத்திட்டம்
முழுமையாக வெற்றிபெற அனைத்து தொண்டு நிறுவனங்கள்,
மருந்து வியாபாரிகள், விநியோகஸ்தர்கள், வணிகர்கள் போன்ற
வர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று
இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ஆர். சத்துணவுத்
திட்டம் வெற்றிகரமாக தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. இந்தத் திட்டத்தினை மேம்படுத்தி சிறப்பாகச்
செயல்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி
வருகிறது. அத்தகைய தொண்டு நிறுவனங்கள் மற்றும்
பெருந்தொழில் அதிபர்களின் ஒத்துழைப்புடன் சத்துணவு
மையங்களைப் பராமரிக்க சிறந்த நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டுள்ளன. சத்துணவு மையங்களில் தற்போது இரண்டு
வயதிலிருந்து ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு
சத்துணவு வழங்கப்படுகிறது. இப்போது இத்திட்டத்துடன்
சத்துணவு மையங்களில் ஆறு மாதத்திலிருந்து இரண்டு
வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து வழங்கு
வதற்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்
களுக்கும் ஊட்டச்சத்து வழங்குவதற்கும் ஒருங்கிணைந்த
திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில்
மருத்துவ வசதிகளும் செய்து தரப்படுகிறது. இந்த ஒருங்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 பிப்ரவரி 7

கிணைந்த திட்டம் 11 மாவட்டங்களிலும் விரிவாக்கப்பட்
டுள்ளது. மேலும் இந்த சந்தர்ப்பத்தில் நான் மகிழ்ச்சி
கரமான அறிவிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறேன்.
இத்திட்டம் படிப்படியாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து
மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் என்று அறிவிக்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் முழுமையாக விரிவாக்கப்
படும். கட்டத்தில் மொத்தம் சுமார் 2 இலட்சம் கருவுற்ற
தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச்
சத்து வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும். மேலும்
சுமார் 7 இலட்கம் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து
வழங்கப்படும். கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்
மார்களும் இந்தத் திட்டத்தில் பயன் பெறுவதால் மேலும்
அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் இரண்டு கோடி
கூடுதல் செலவாகும். இந்தத் திட்டம் உடனடியாகத்
தர்மபுரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படும். இந்தத் திட்டத்தில்
தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 8000 கருவுற்ற தாய்மார்களும்,
பாலூட்டும் தாய்மார்களும், சுமார் 30,000 சிறு குழந்தைகளும்
ஆண்டுதோறும் பயன்பெறுவார்கள். இதற்காக ஆண்டுக்கு
ஆகும் செலவு ரூபாய் 3 கோடியாகும்.

பிற்பகல் 1.45

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பகோணம்
மகாமகம் திருவிழா சீரிய முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற
எண்ணத்தின் அடிப்படையில் 9—1—1992 அன்று சம்பந்தப்
பட்ட அமைச்சர்கள் தலைமைச் செயலாளர், செயலாளர்கள்,
துறைத் தலைவர்கள், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகி
யோருடன் நான் கூட்டம் நடத்தினேன். இந்த திருவிழா பிப்ர
வரி மாதம் 18-ஆம் தேதி நடைபெற உள்ளதை நீங்கள் அறிவீர்
கள். கூட்டத்தில் , மகாமகம் திருவிழா சீராக நடைபெற,
செய்ய வேண்டிய பணிகள் குறித்து விவாதித்து தேவையான நிதி
ஒதுக்கீடும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்
படையில் கும்பகோணத்தில் உள்ள சிவாலயங்கள்,வைணவ திருக்
கோயில்கள் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணிகளுக்காக ரூபாய்
46.25 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மகாமகம்
திருவிழாவில் பங்குகொள்ள வரும் பக்தர்களுக்கு செய்ய வேண்டிய
வசதிகளுக்காக கும்பகோணம் நகராட்சி, பொது சுகாதாரத்
துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்
கீடு செய்யப்பட்டுள்ளது. கும்பகோணத்தில் தெருக்கள், சாலை
களை மேம்படுத்துதல், தெருவிளக்கு வசதி, குடி தண்ணீர் வசதி
அமைத்தல், பாலங்கள், வாய்க்கால்கள் சீரமைத்தல், மகாமகம்
குளத்தை சீரமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூபாய் 67.5
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கழிப்பிட துப்புரவு
வசதிகளைச் செய்ய பொது சுகாதாரத்துறைக்கு
ரூ. 48 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணத்தைச் சுற்றி



1992 பிப்ரவரி 7] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

யுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூபாய் ஒரு கோடியே
26 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. கும்பகோணம் கிராமப்புற
மின் இணைப்புக்கு ரூ. 6.5 லட்சம் மானியமாக
வழங்க மின் வாரியத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அது மட்டு
மல்லாமல், பக்தர்களுக்கு பாதுகாப்போடு இந்த விழாவில்
கலந்து கொள்வதற்காக சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும்
செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 12 ஆயிரம் காவலர்கள்
ஈடுபடுத்தப்படுவார்கள். அது மட்டுமல்லாது, மகாமகத்தை முன்
னிட்டு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மூலமாக மிகப் பெரிய
கண்காட்சியும் இசை மற்றும் நாட்டிய விழாவும் நடத்த ஏற்பாடு
செய்யப்பட்டுள்ளது.

இதுவரையிலே கூறிய என்னுடைய பதிலுரையில் இருந்து
இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓரளவுக்கு விளக்கம்
கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். இவ்விளக்கங்களிலிருந்து
எந்த அளவுக்கு இதயசுத்தியோடு பணியாற்றி வருகிறோம் என்
பதையும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அறி
வுலக மாமேதை பேரறிஞர் அண்ணா வழியில் அதிகபட்சமான
பலன்கள் முழுமையாக ஏழையெளியோரை சென்று சேரத்தக்க
வகையில் எங்கள் திட்டங்களும் செயல்முறைகளும் எந்த அள
வுக்கு அமைந்துள்ளன என்பதையும் இம் மாமன்ற உறுப்பினர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

தற்போதுள்ளதுபோன்று அரசின் நிதிநெருக்கடி தமிழக வர
லாற்றில் வேறு எந்த முதலமைச்சருக்குமே இருந்தது இல்லை என்
பதை சிலர் மறந்துவிடுகின்றனர். ஏறத்தாழ 900
கோடி ரூபாய் பற்றாக்குறையுடன் ஒரு ஆட்சியைத் தொடங்கி
இந்த சோதனையையும் ஒரு சவாலாக ஏற்று இதனை எப்படியும்
சமாளித்தே தீரவேண்டும் என்ற உறுதியோடு செயல்பட்டு வரும்
இந்த அரசை பாராட்ட மனமில்லாமல் பொய்யான குற்றங்களை
யும் குறைகளையும் சிலர் கூறிவருகின்றனர். என்ன விளக்கம்
அளித்தாலும் வெளிச்சத்திற்கு வராத சிலருக்கு எரிச்சல் குறை
யாது என்பதை நான் நன்றாக அறிவேன். (மேசையைத்
தட்டும் ஒலி). இதை எண்ணிப்பார்க்கின்றபோது, முன்னாள்
அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் அவர்கள் தெரிவித்த
ஒரு கருத்து தான் என் நினைவுக்கு வருகிறது. அவர் கூறினார்.
அவர்களுடைய விமர்சகர்களைப் பற்றி, கிரிட்டிக்ஸ்களைப் பற்றி
பேசுகின்றபோது—

"They never see the good; but only the bad. Even if I walk across the river, these people would say that I do not know how to swim."—

அதாவது சிலர் குற்றம் காண்பதிலேயே குறியாக இருப்பார்கள்.
நடக்கின்ற நல்லவற்றை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். தண்
ணீர் மீது நடந்து செல்வது என்பது யாராலுமே செய்ய முடியாத

காரியம். அப்படி யாராவது செய்தால், அது மிகப் பெரிய
சாதனை. நான் தண்ணீர் மீது நடந்து ஆற்றைக் கடந்து சென்று
ஆம் இவருக்கு நீச்சலே தெரியாது என்றுதான் சொல்லிக்கொண்
டிருப்பார்கள். அவர்களுக்காக இல்லை என்றாலும் இந்நாட்
டிற்கும் இந்நாட்டின் நலன் நாடும் பல நல்லவர்களுக்காகவும்
இந்த விளக்கங்களைத் தெரிவித்துள்ளேன்.

எனவே ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானத்திற்கு சில
பேரவை உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்களை
திரும்பப் பெற்றுக் கொண்டு தீர்மானத்தை ஒரு மனதாக நிறை
வேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அனை
வரையும் கேட்டுக் கொண்டு நன்றி கூறி அமைகிறேன். (மேசை
யைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்களுக்கு முழு விளக்
கம் வந்திருக்கிறது. (குறுக்கீடு) இதிலே வேண்டாம். உட்காருங்
கள். முழு விளக்கம் வந்திருக்கிறது. இவ்வளவு நேரமாகி
யிருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

124 நிமிடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி
உங்கள் அனைவருக்கும் பதில் சொல்லியிருக்கிறார்கள். (மேசை
யைத் தட்டும் ஒலி) எனவே மேற்கொண்டு இதிலே விவாதம்
வேண்டாம் என்று நினைக்கிறேன். உங்களுக்கு எல்லாவற்றுக்
கும் விளக்கம் கிடைத்து இருக்கிறது. விவாதம் முடிவுற்றது.
திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்பு
கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள்.

<u>திரு. மா. சுந்தர தாஸ் :</u> இல்லை (குறுக்கீடுகள்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதற்கு மேலே என்ன
பேசவேண்டும்? வேண்டாம். அவையின் அனுமதியுடன் திருத்
தங்கள் திரும்பப்பெறப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> தலைவர் அவர்களே......

பிற்பகல் 1-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இது வேண்டாம். (குறுக்
கீடு) உட்காருங்கள். நீங்கள் ஏற்கெனவே தேவையான அளவிற்கு
காலம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். விளக்கமும் பெற்றிருக்
கிறீர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் வெளிச்சத்திலேயே இருங்கள்.
(குறுக்கீடு) உட்காருங்கள், நான் நிற்கிறேன். திரு. குமாரதாஸ்
அதை எப்போதும் நீங்கள் வாடிக்கையாக வைத்துக்கொள்ளக்



600 009

கூடாது. (குறுக்கிடு) நீங்கள் எப்பொழுதுமே இப்படி வாடிக்
கையாக வைத்துக்கொள்ளக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள்
எல்லோரும் உட்காருகிறார்கள், நீங்கள் மட்டும் உட்கார
வில்லையென்றால் அது தப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள் நான்
நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ்
உட்காருங்கள். (குறுக்கீடு)

விவாதம் முடிவுற்றது. அடுத்த கட்டத்திற்குப் போய் திருத்
தங்கள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.

"1992 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று சட்ட
மன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி
யுடையவர்களாவர்"

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. தென்னவன்
அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் அவையின்
முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,
பேரவை மீண்டும் 10–2–1992, திங்கட்கிழமை முற்பகல் 9–30
மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

## <u>8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.</u>

### <u>அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.</u>

60. சேரன் பொறியியற் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்
டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரி
வின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

61. அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-
ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ்,
ஆங்கிலம்).

[1992 பிப்ரவரி 7

62. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1990-91-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

63. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண் டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறு வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

64. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

65. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1'1956) 619-ஏ பிரி வின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

66. இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1990-91ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

67. தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் (தற்போது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று மாற் றப்பட்டது) 1990—91-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண் டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

68. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண் டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறு வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

69. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ்) ஆங்கிலம்).



1992 பிப்ரவரி 7]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

24. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை, 1991—92.

25. பொதுக்கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1991—92

26. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1991—92.

27. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை, 1991—92.

28. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை, 1991—92.

29. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை, 1991—92.

30. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1991—92.

31. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1991—92.

32. மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை, 1991—92.

33. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றா வது அறிக்கை, 1991—92.

34. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கை, 1991—92.

161509

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.